ஸ்ரீமத்

# ரெங்க ராமாயணம்

★

ஸ்ரீமத்
வால்மீகி ராமாயணத்
தனிப்பொருட் செய்யுள்

★

ஆசிரியர் :
வி. ரெங்காச்சாரியார்
(ரிடயர்ட் டிபுடி கலெக்டர், வடக்கு வீதி,
தேரழுந்தூர், தஞ்சை ஜில்லா.)

## பால காண்டம்

ஸம்க்ஷேப ராமாயணம்

★

உரிமை பெற்றது ] [ விலை ரூபாய் 1/-

1953



தேரழுந்தூர் வி. ரங்காச்சாரி

# ரெங்க ராமாயணம்

---

ஸ்ரீமத்

வால்மீகி ராமாயணத்

தனிப்பொருட் செய்யுள்.

# பால காண்டம்

---

ஸம்க்ஷேப ராமாயணம்

*All rights reserved*

## அவதாரிகை.

"கற்பாரி ராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ" என்னுமாறு, ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீவைகுண்டத்தில் நித்ய வாசம் செய்யுமவன், தன்னோடொத்து நித்யாநந்த பரவசரா யங்கிருந்து வாழும் நித்ய சூரிகளோடு, மாறுதலின்பத்திரளினை என்று மனுபவிக்கப்ராப்தரான ஜீவகோடிகள் மாறுததுன்பத் திரளினையனுபவித்துழலுவாரைக் கரையேற்றுவிப்பான் எத் தனையோ உபாயங்களுள் ளொன்றாகிய தன்னவதாரவை பவத்தாலே இவர்கள் நடுவண்போந்து, இவர்கள் பிறவா மைக்காகப் பிறக்கவேண்டாத தான்பிறந்து, இவர்கள் படு மவைபடாமைக்காய்த் தான்படாதன வெல்லாம் பட்டி ழிந்து, இவர்களேபோல் தானுமோரு மானிடனாயவதரித்துத் தன்தனிமேன்மையுங் குணமு மிவர்களனுபவித்துக் கடைத் தேறும்படியாயெடுத்தவதாரங்களுள்ஸ்ரேஷ்டமாயது ஸ்ரீராமா வதாரமன்றோ. அவ்வவதாரவைபவத்தையம்மஹனீயன் நடமாடிய காலத்திலேயே விவரமாயெடுத்துரைத்து அவன் சன்னிதியிலேயே அவன் புத்ரர்களால் கானம் செய்வித்தவனு மோதிக்கச்செய்த வான்மீகி மாமுனிவரியற்றியதும் ஆதிகாவ் யமன்றோ. அவ்விராமாயணத்தை யன்று தொட்டிப்பரத கண்டத்தில் படித்துணர்ந்தாடிப்பாடித்துள்ளி யிப்பொழுதே நடக்குஞ் சரித்திரம்போல் யாவருமனுபவித்தானந்த பரவச ராகுமியல்பு நூதனமல்லவே. யாவர்க்குந்தெரிந்த கதையே யாயிடினும் போஜனஞ் செய்பவனருந்தியதையே மேலும் மேலும் ருசிக்க நூதனமாகவே ஒவ்வொரு வேளையுமனுப விக்கக்காணுமாபோல் கேட்கக் கேட்கப்புதியதோர் ருசிய தேபோல் சுவைத்துப்பேரானந்தமடைவது ப்ரத்யக்ஷமாய்க் காண்கிறோம். சம்ஸ்க்ருத பாஷையிலுள்ள அக்காவ்யமதை காவ்யரச முடனினிய தமிழ்நடையில் யாவரையும் அனுப விக்கச்செய்யவேண்டுமெனு மவாவுற்ற யானல்பக்ஞன் வரைந்துள்ளே னல்பமதிக் கேட்டியவாறு, அனைவருஞ் சுவைத்தின்பம் பெற்றுவாழ்மின்.

**வி. ரெங்காசாரி.**

1

## ஸ்ரீ ராமாயண தத்வபோதம்.

பண்ணியநல் வினையதனல் பார்படைத்த பற்பநாபன்
என்றும் பிறவாப் பேராளனு மன்னுள்
கண்ணியநல் தயாதன் நற்குமரனு யுதித்துப்
பாராண்ட சீரதனே யன்பர் வான்மீகி
புண்ணியநல் கீதமதாய் விரித்துரைத்ததனே
யாவரும்நன் குணர்ந் துய்யும் வண்ணம்
திண்ணியநன் னூலதுவா யின்தமிழினுரைத்
துணர்த்த நற்பேறும் பெற்றனமே.

2

## ஈஸ்வர தத்வம்.

இனி யெப்பாவம்வந் தெய்துஞ்சொல்லீ ரெமக்கிம்மையே
யருள் பெற்றமையால சாரமல்ப சாரம்
தனிச்சாரம் சாரதரமிவை விலக்கி, சாரதமமாயுறு
தொன்னெறியை, காகமிராக்கதன்மன்னர் வானர
னெனினுமுடல் படைத்தார்யாவர்க்குந் திண்சரணுமவ
னொருவனு வானடியொன்றே பரமோபாயவுபேயமேனும்
நனிகொடுசன்மார்க்கமதைவிரித்துநடிப்பானுருக்கொண்ட
தொல்லுருவா மீசன் தன்னையுணர்ந்த பின்னரே.

3

## ஜீவ தத்வம்.

இரந்து நொந்தவர்க்கருள்செய்யுமிருநான் கக்ஷரத்தன்
பெருமைதனை யோருருவாஞ் ஜீவனும் நவத்வார
புரந்தன்னிலுற்றபோழ்தே, மறுபிறப்புமுறு வண்ணம், துனி
தீர்த்தின்பமேதருகின்றதோர்தேனே, பக்தர்தாம்நுகர்கின்ற

தோர் கனியை, காதல்செய்வார்தம் முள்ளங்கொள்ளைகொள்ளு
மீசனை, அக்ஞானசம்சய விபர்யயவிபரீதருசிகன்
ஓரொன்றும் புகாது, பரக்கக்கண்டவாவுள்ளத்தெழுந்தவா—
வுணர்த்திய தன் நீர்மைதனை யென்சொல்வோம்.

4

அவதார ரஹஸ்யம்.

விவேகப்ராப்தி

அன்றுநான் பிறந்திலேன் பிறந்தபின்மறந்திலேன்
தாய்வயிற்றல்வ ஞானநல் வயிற்றில்

பால காண்டம்.

என்நின்ற யோகியுமாய்ப்பிறந்திறந்து பிறந்தேதிருவ
மெனுஞ்சுழல்லாற்றின்படி யெலாங்கண்டறுக்கவொணுது
இந்நின்றநீர்மையினியாமுருமைக் காயென்செய்வமென
நையுஞ்சீவர்க்குத் தேகாத்மப்ராந்தியிலாத்தன்நிலையும்
முன் நின்றுதவுவானுறும் பரந்தாமன் பெருநிலைத்தத்துவ
விவேகமதும், ஐயந்திரிபறப் பெற்றுணர்தல்வேண்டுமென
முன்னின்ற விபவமதாலவன் முழுமுதல்வனபயமென்பார்க்கா
யுருக்கொண்டதுயோ னெனவுணர்த்தினரே.

5

ராஜ்யைஸ்வர்யபோகமல்பாஸ்திரமெனநிர்வேதத்திழிதல்.

அயோத்யா காண்டம்.

யாருமோர்நிலைமையனெனவறிவரியவெம்பெருமான்,நாட்டி
லுறு போகமெலாந் தன்பற்றுயாண்டனுபவித்து,
பேருமோருரு மவனியெலாமாளும்பேறும்பெற்றுவாழ்மன்னர்
மன்னரேனு மென்றேனும் முன்சொன்னவவைதாமும்

கூறுகூருயமைந்தபல் போகமுந் துறக்குமவையேயென
வுணர்த்தற்காய வனியாள்வாயென்ருலுமாமென்று,
வேருயவைவிடுத்துக்கானேகுவாயென்றபோழ்தும் பேருவகை
யுற்றேகியவுயர்பண்புகண்டார், நிர்வேதத்திழிவரன்றே.

6

ஈசன் தனித்தகவொன்றிலாழ்வார் நாட்டிலுறு மல்பபோகம் வெறுப்பரன்றே.

ஆரண்ய காண்டம்.

ஒன்றெனப்பலவெனவறிவரும் வடிவினுள்நின்றதோரரும்
பெரும்வள்ளலுங், கொள்ளக் குறைவிலன், வேண்டிற்று
மன்றேதருங்கோதிலன், தன்னடியார்க்கென்செய்வனென்றே
யிருக்குங் காருண்யமெனுந்தனித்தகவுடைக் கோமான்,
நன்றெனநலஞ் செய்தவ முடையோகியர்க் காயவரிடம் நாடிச்
சென்றவரிடர்களையுஞ் சீமானெனவோர்ந்துணருமாறு
சென்றனன், கானிடைநாரணனென்றதுமேமயக்குடை மா
நிலச்சுகமென்றுமுளதன்றெனத் தோர்ந்துவிரக்தனும்.

7

விவேக நிர்வேதவிரக்திப்படிகடந்த ஜீவனுக்கு சற்குருவாமனுமன் சீதையெனுமான்மாவுக் குணர்த்த வுணர்தல்.

கிஷ்கிந்தா காண்டம்.

ஆதியஞ்சோதியுருவினையங்கு வைத்திங்குப்பிறந்ததனி
வேதமுதல்வனும், விவேகநிர்வேதவிரக்திப்படிகடந்தார்
சோதியாய், சுடர்ஞானவெள்ளஒளியாய், எப்பொருட்கும்
வேர்முதலாய் பரந்துங்கரந்துமுளனுயகற்பகமாய்
பேதியாதுள்ளங் கவர்ந்தெழுந் தேனுய்க், கரும்பினின்
சுவையாய் ஈறிலின்ப வெள்ளந்தந்தருளும் வள்ளலாய்,

ஆதிமூர்த்தியடி சூடியவாவற வீற்றிருக்கும் நன்னாள்
காட்டுநல்லாரிய னனுமனெனத்தோற்றினன் முனம்.

8

ஜீவன் உடலச் சிறையிருக்கும் பண்புகாட்டி, யவன் நல்லன்பொடுறைதலுபாய மெனத் தோற்றுவித்துப் பிராட்டி சிறையுறு மேன்மை.

சுந்தர காண்டம்.

அறியாத வரக்கியருமறியும் வண்ணமம்புயத்தாளுமொரு
ஜீவனுய்த்தானுற்றுமாபாக்யவதி, யிச்சீவருடலச்
சிறையுறுபண்பெலாந்தாங்காட்டியிவருய்யும் வகையொன்றே
தன்னேக்காய்த், தனதாவியுள்கலந்து, நாளும்பாலும்,
குறைவொன்றில்லாத்தேனுங் கன்னலு மமுதுமாய்த்தித்திக்குந்
திருவுருவொன்றே, தனக்கூணுமுடையும் நலமெலாமும்,
இறையுமவனேயாமென, நெஞ்சம்வேவ, நெடிதுயிர்த்து,
உள்ளுளாவியுலர்ந்து, வானரோத்தமன், நல்லாரியன்
இறைக்கிறையாம் நாதனின் தூதுவன் நல்லுரைமடுத் தவ
னீந்த நல்லுதவிக்கோர்கைம்மாறு காணுதாளும்
பறையறைவித் தாளெல்லையில்லன் பொன்றினலாவி தரி
ப்பனெம் பிரானுக்கா யெனவுரைமினென்றே.

9

பக்தி வெள்ளங்கரைபுரண்ட சீதை தன் பண்புணர்ந்துரைத்தல்—ஆசார்யக்ருதக்ருத்யம்.

சுந்தர காண்டம்.

அயர்க்கும், சுற்றும்பற்றி நோக்கும், அகலவேநீணேக்குக்
கொள்ளும், மழைக்கண்ததும்ப வெவ்வுயிர்க்கொள்ளும்,
வியர்க்கும், மெய்சோரும், நாவுலரும், பேதை, கண்ணாளா,
ராமா,மண்ணாளாவெனவாய்விட்டலற்றும்,நின்பேர்பிதற்றிப்

பெயர்க்கும் பெருங்குரலினை நின்தனக்காய், ஒத்தார் மிக்காரை
யிலையாயமாமாயா, ஊனில்வாழுயிரே, கார்வண்ணா,
அயர்க்கின்றேனடியேன் வாய்மடுத்துப்பருகிக்களிக்கின்றேன்
நின்நாமமிரண்டெழுத்தெனும் பித்தேறியனென வுணர்த்தி
[னன்.

10

பலப்ராப்தி.

யுத்த காண்டம்.

இப்படியனிவ் வண்ணத்தனிவ்வுருவனென வோராத
சிந்தையனுய் அகலிடம்படைத்தளித்ததவும் நாதன்
எப்படியு மெவ்வுள்ளத்துமுள்ளுளித்தவர்கள்ளவுள்ள
முணருமாயன், காணுமாறருளாயென்றக்காலிரங்குமோ
மெய்ப்படியனுமெனும்பீதியுற்றூர்க்குஎம்மாபாவியர்க்கு
மருள்சுரக்குங்காருண் யக்கடலிவனெனவுரைத்து
எப்படியனுனலுமரக்கர்கோனிராவணனையானுலுங்
கோணுதழைத்தேகுமின், னஞ்சலென்றூர்க்கபயம்
எப்படியுமளிப்பனெனவணைந்தான்வீடணனை, யதுவும்போதாதா
யிளையவானரவீரனங்கதனைத்தான் தூதனுப்பிக்
கைப்பிடியாயவ்வரக்கர்கோனை, யென்னினிய கோமளத்தைக்
கொணர்ந்தாணுக்கி, யரணெனநின்றுனேலளித்திடுவனெனு
மெய்ப்படியன்வாசகமுமுணர்த்தியனுகெனநின்றுனின்மா
மாயக்கூத்தெல்லாம், இருளறப்பொருளெலாம்விளக்கி,
அப்படிநின்றவமலன் படியெல்லாமிப்படியெம்முள்ளத்
தெழுதி, ஆராதவருளமுதைத் தெவிட்டாததீங்கனியை
மெய்ப்படியனுய், நாளுந்தூமலர்கொண்டு தொழுதேத்தியவன்
பொன்னடிபுனைந்து, கண்ணீர்பனிமல்கத்துள்ளிமகிழு
மிப்படியனுக்கி யெனையுய்வித்தபேராளருக்குங்கைம்மா
றென்றுளதோ காணவர் பொன்னடிபோற்றுவதன்றி.

வி. ரேங்காசாரி.

## முதல் சர்க்கம்.

1

நாரணனேநல்ரணு வான் நானிலத்தார்யாவர்க்கும்
காரணனுயுலகளிக்குங் காருண்யராமனுயன்றோர்
வாரணமாய் மாயவரக்கர்குலங்களைந்த சீராளன்
ஆரணங்களடிசூடுநம்பரமனடி பணி மனமே.

பசு, பக்ஷி, புல், பூண்டு, பூச்சி புழு, ம்ருகம், மனிதன் முதலான சகல கோடி ஜீவன்களையும் படைத்தவன் ப்ரும்மா என்று சொல்லுவார்கள். அந்த ப்ரும்மாவை உண்டு பண்ணியவன் நாராயணன். அந்த நாராயணனை யாரும் உண்டு பண்ணவில்லை. அவன் தானே உண்டான வன். அவன் ப்ரும்மாவைத் தான் படைத்து அவருக்கு மற்றவர்களைப் படைக்கும் சாமர்த்தியத்தைக் கொடுத் தான். அந்த சக்தியுங் கொஞ்ச காலத்திற்காகக் கொடுக் கப்பட்டதல்ல. எப்போதும் ஸ்திரமாய் மேல்மேலும் ஜீவகோடிகளையும் அவைகளுக்கு உதவியான தின்பண்டங் களையும் வேறு வேறு பொருள்களையும் படைத்துக் கொண்டே யிருக்க சக்திபெற்றான். இந்தப் பலகோடி ஜீவராசிகளைக் காக்குந் தொழிலைத் தான் வைத்துக் கொண் டான் நாராயணன். அவனுக்குத் துணையாகவும் நல்ல மனைவியாகவும் எப்போதும் அவனை விட்டுப் பிரியாதவளா கவும் உள்ளவள் ஸ்ரீ மகா லக்ஷ்மி. அவர்கள் இருவருங் கலந்தே எல்லாக் கார்யங்களையும் செய்து வைப்பார்கள். அதனால் ஸ்ரீமந்நாரயணன் அதாவது லக்ஷ்மியோடு கூடிய நாராயணன் என்று அவனைச் சொல்வதுண்டு. அவ்விரு வருக்குள் சக்தியிலோ, குணத்திலோ, ஞானத்திலோ அதி கம் குறைவு என்பதில்லை. ஒவ்வொருவரும் தனித்தனியே

உலகங்களைக் காக்கும் சக்தி உடையவரே. ஆயினும் அவர்கள் தனித்து ஒரு கார்யமும் செய்வதில்லை. இவர் நினைப்பதையே அவள் நினைப்பாள்; அவள் செய்வதையே இவர் செய்வார். இரண்டு உடம்பாயிருந்தாலும் ஒரே உயிர்போல் இருந்து உலகத்தாரை போஷித்தல் இவ்விருவருடைய ஸ்வபாவ குணமாகும். நம்முடைய கண்களுக்குத் தெரியாமல் நமக்குள்ளேயே காற்று இருப்பதுபோல் ஒளிந்திருந்து நம்மைக் காப்பாற்றுவர் இவ்விருவர். நாம் கண்ணால் பார்ப்பது போல் அவர்கள் அறிவினால் நாம் செய்பவை யெல்லாம் அறிவர். இப்படியே நம்மொருவர் மட்டுமல்ல. உலகத்திலுள்ள எல்லா ஜீவன்களிலும் ஒரே காலத்தில் இருக்கும் சாமர்த்யம் இவர்களுக்கு உண்டு. இருப்பது மட்டுமல்ல. எல்லாரும் செய்வதையும் ஒரே காலத்தில் அறிவார்கள். இதற்கு உணருதல் என்று சொல்லுவார்கள். இப்படி எல்லாவற்றையும் உணர்ந்து அவரவர்க்கு வேண்டியதைக் கொடுத்து உதவுவார்கள்.

ஒளிந்திருந்து உதவும் உதார குணமுடைய ஸ்ரீமந்நாராயணனும் உலகத்தில் நம்மைப்போல் பிறப்பதும் உண்டு. அப்படி அவர் பிறப்பதை அவதாரம் என்று சொல்லுவார்கள். துஷ்டர்களை அடக்குவதன் பொருட்டும், நல்லவர்களைக் காக்கும் பொருட்டும், தர்மம் தேய்ந்து அதர்மம் பெருகிய காலத்தில் இவர் அவதரிப்பார். அவர் எடுத்த அவதாரங்களுள் முக்கியமானவை பத்தாகும். அவைகளுள் ஒன்று ராமாவதாரம்.

ஸ்ரீமந்நாராயணன் எப்பொழுதும் இருக்கும் இடத்திற்கு ஸ்ரீவைகுண்டமென்று பெயர். பாக்கி இடங்களி

லெல்லாம் அவன் ஒளிந்திருக்க ஸ்ரீவைகுண்டத்தில் எல்லோரும் அனுபவிக்கும் படியான ஆனந்த உருவத்துடன் விளங்குவார்.

முன்னொரு காலத்தில் அதர்மம் பெருகியதாம். அரக்கர்களென்று சொல்லப்படும் ராக்ஷஸர்கள் ஜாஸ்தியாகி நல்லவர்களை இம்ஸித்து வந்தார்கள். அவர்கள் வேதனை பொறுக்க மாட்டாமல் தேவர்களெல்லாரும் ஸ்ரீமந் நாராயணனிடம் முறையிட்டார்கள். தான் உலகில் அவதரித்து துன்பத்தை நீக்குவேன் என்று வாக்களித்தான் நாராயணனும்.

தான் சொன்னப்ரகாரம் ஸ்ரீராமனாக அவதரித்தான். நான்கு வேதங்களும் நாளெல்லாந் தேடியுங் காணமுடியவில்லையாம் இன்னும் அந்த நாராயணனை. உலகத்தில் எத்தனை எழுத்துக்களுள்ளனவோ அத்தனையாலும் எத்தனை தடவையேனும் சொல்லப் பார்த்தாலும் அவன் வைபவங்களெல்லாம் சொல்லி முடியாவாம். அந்த பரந்தாமன் மானிடனாய்ப் பிறந்தான் ராமனாய் இப்பூமியில். அவன் அழகு அத்புதம். அவன் வடிவு ஆச்சர்யமானது. அவன் குணம் மகா நல்லது. அவன் அவயவங்கள் காணக்காணக் கட்டித் தழுவி யணைக்க வேண்டுமென்னும் ஆசையைப் பெருக்கும். அன்பு நிறைந்த அச்சோதி வள்ளலை ஏ மனமே நீ நினைந்து துள்ளு. ராமா என்று ஒரு தரம் உச்சரித்தால் நம் பாவமெல்லாம் தொலையும். அம் மகான் நாமத்தை ஏ வாக்கே வாயாரச் சொல்லி மகிழ்ந்துபோ. எங்கேயோ இருந்து நமக்கு வேண்டியவற்றை யெல்லாங் கொடுத்து ரக்ஷிப்பவனைத் தொழுவது எவ்விதமெனத் தவித்தகைகளே அவனை ஆசை தீரத் தொழுதெழு.

## 2

முனிவரர் முனிந்துரைத்தமுதநல்லுரையும்
இனியதேர்காவியமுதல்தோற்றமதாய்
நனிமிகுத்தெழுந்தவாற்றை யவரருளால்
இனிய தமிழ்ச்சுவைதெறிக்கத்துனிந்தனன்.

வால்மீகி யென்னும் மகாமுனிவர் ஸ்ரீராமனுடைய சரித்ரமெல்லாம் சம்ஸ்க்ருத பாஷையில் உலகத்தாரறிந்து படித்துப் பரவசமாக எழுதினர். அவர் வாயினல் இச் சரித்திரம் பரவவேண்டு மென்று ஆசைப்பட்ட பகவான் அவர்முன் இரண்டு ஆணும் பெண்ணுமான பக்ஷிகள் குலவும் யடி செய்தான். அவைகளுள் ஒன்றை ஒரு வேடன் அம்பால் கொன்ருன் முனிவர் பார்த்திருக்க. கோபத்துடன் அவனைத் திட்டினர். திட்டினதும் நல்ல பாட்டேயாய் இரண்டு அர்த்தம் கொண்டதாய் ஸ்ரீராமன் சரித்திரத்திற்கு ஆரம்ப ஸ்லோகம்போல் ஆயிற்று. அதைச் சொல்வதற்கு இனிமையாயிருந்தது. அதைக் கேட்பதற்கு மதுரமாய் இருந்தது. அதை எழுதிப் பார்ப்பதற்கு ஓர் அலங்காரமாய் இருந்தது. பாட்டும் இலக்கணமாய் அமைந்தது. சொல்லும் அழகாய் நம்மை அறியாமல் ஓர் இன்பம் பெருக்குவதாய் இருந்தது. ஆற்று ஜலம் வற்றினுலும் அதனடியில் ஊற்று ஜலம் குளுமையாய் தெளிவாய் முத்துப் போன்று ஒடும் வெட்டிப் பார்த்தால். அது போல நாக்கினல் உச்சரிக்கத் தெரியாதவர்கள் கூட இதைக் கேட்டால் உலர்ந்த நாக்கிலிருந்து அமுதம் ஊறும் ஸ்வபாவம் பெறுவார்கள். அப் பெரியாரின் வாக்யங்களை எல்லாத் தமிழர்களும் உலர்ந்த நாக்கில்லாது தித்திக்கும் சுவை போலச் சுவைத்துப் படித்து உணர்ந்து உள்ளபடி தெரிந்து

குதூஹலமுடன் கவனித்துப் பிறர்க்கும் உபதேசிக்கும் சக்தி பெறுவரென்று நம்பித் தமிழ் பாஷையில் எழுதியுள்ளேன். இதை அனைவரும் படித்து ஆனந்தக் கூத்தாடுங்கள்.

3

இனிதென்ப ரிவ்வுலகிலரியுருவம்
இனிதென்பரவ்வுருவின் சுவையபவை
யினிதுரைத்துலகூட்டுஞ்சடகோபன்
தனியாயிரப் பாசுரமவை நந்துணையாம்.

கேட்பார் மனதை உருக்கிவிடும் ராமயண கதாம்ருதம். கேட்கக் கேட்க நாக்கினால் தித்திப்பைச் சுவைப்பது போல் காதுக்கு ரமணீயமாயிருக்கும். ஒவ்வொரு தடவையும் புதிய கதை கேட்பது போல் இன்பத்தைப் பெருக்கும். எத்தனையோ வருஷங்களுக்கு முன் நடந்ததாயிருந்தபோதிலும் இப்பொழுது நம்முன் நடமாடுவது போலானந்தம் அளிக்கும். பாலைவனத்தில் நிற்க நிழலில்லாது சுடுவெயில் கொதிக்கும் மணலில் நடுமத்யானத்தில் அலைந்து தவித்தவன் ஒரு நிழலுங் கண்டு பெருந் தாகத்திற்கு ஏதேனும் நீரகப்படுமா என்று பார்பவனுக்குப் பாலும் தேனுங் கலந்து உதவியதுபோல் ஆனந்தத் தேன் சொரியும். இந்த சரித்ரங்களிலும் மற்றும் அவதார வைபவங்களிலும் உள்ள மேன்மையான குணங்களை யெல்லாம் அனுபவித்தார்கள் பன்னிரெண்டாழ்வார்கள். அவர்களுள் நம்மாழ்வார் சடகோபனென்றுஞ் சொல்லப்படுவர். நம்மாழ்வார் பாசுரங்களிலுள்ள அர்த்தத்தையே ஆதாரவாகக்கொண்டு அவர் பாசுரக்கோர்வையே இங்குமங்குமாகக் கோர்த்துச் செய்துள்ளேன் இக் காவ்யமதை .

4

துணையாமிணையிலாப் பேரணியாம் மணிமாணிக்க
வித்திணையே, யருளாழி யம்மானையே,
கணையாலிலங்கைதன் சீரழித்த பேராளனையே
பேராப் பேரன்பினராய்ப்பாடி.
யணையாலிலங்கை யரண் கடந்தானை நினைந்
துள்ளங்குழைந் தகங்கனிந் தலமந்து
துணையாமொருவனிவனை யுள்ளுமின்னெனக்
காட்டிய பன்னிருவர் நமையளிப்பரரோ

ஒவ்வொரு ஆழ்வாரும் ஸ்ரீராமன் திவ்ய சரித்ரங்களை எங்கும் நன்றாக அனுபவித்திருக்கிறார். அவர்களனுபவச் சுவைகளை நமக்கு மின்பம் உதவும் பொருட்டு சந்தர்ப்பத்திற்கு அனுகுணமாக எந்தெந்த இடத்தை எப்படி எப்படி அனுபவித்தார்களோ அப்படி அப்படி இந்தப் பாட்டுக்களிலும் அமைத்துள்ளேன். சம்சாரமாகிற கடலிலே அழுந்திக் கரையேற வழிகாணமல் தவிக்கின்றார்கள் பாமரர்கள். அவர்கள் கடைத் தேறுவதற்கு உற்ற துணையாய் வழி காட்டும் ஞான விளக்காய் உள்ளவை ஆழ்வார் பாசுரங்கள். காலமெல்லாம் செய்யும் பாவங்களைப் பலனளிக்காமல் விலக்கி நமக்கு சுகமே கொடுக்கும்படி செய்விக்கும் இவை. வில்லொன்றும் அம்புகளும் உதவியாகக் கொண்டு பல் கோடி மாயவரக்கர்களைக் கொன்றொழித்தான் ராகவனெனும் ராமன். இலங்கையெனுந் தீவினுள் அரசனாய் ஆண்டு வந்த க்ரூர வரக்கன் இராவணன் முடி பத்தும் ஒரு கொத்தாய் அறுத்தெரிந்தான் வீரராகவன். இலங்கையென்பது தேகமென்றும், 10 தலையுடை ராவணன் 10 இந்த்ரியங்களென்றும், இந்த்ரியங்கள் இழுக்கும் வழி செல்பவன்

மனிதனென்றும், அவனை தெய்வம் தன்வழிக்காக்கி நன்மையைச் செய்யும் முறைகளை இதுகாட்டுமென்பர்.

5

உளனுய பல்பொருளைத் தாம்படைத் தவற்றுள்
ளுளனுய பல்லுயிரைத் தாம் புகுத் தவையுள்
ளுளனுய பரம்பொருளைத் தாமுணர்ந்தாரே
யுளனுவார் மற்றுளா ருளராவா ரூழ்வினையால்.

ஜீவகோடிகளின் சரீரம் நிலையாய் என்றைக்கும் இருப்பதல்ல. கொஞ்ச காலம் இருந்து இல்லாமல் அழிந்து போவதையும் பார்க்கிறோம். இருக்கும் பொழுதும் ஒரே மாதிரியா யிருப்பதில்லை. பால்யத்தில் ஒரு மாதிரி குழந்தை சரீரம். யௌவனத்தில் திமிருயிருக்கக் கூடியது. நல்ல வயதில் நல்லபால்யனுய் ஓடி ஔியக்கூடியது. கிழத்தனத்தால் ஓய்ந்து தளரக்கூடியது. முதலில் பிறத்தல் என்னும் பேருடன் உண்டாகி கடைசியில் இறத்தல் என்னும் அவஸ்த்தையோடு அழிகிறது. இப்படி நிலையில்லாத ஒரு தேகத்தில் நித்தியனுன ஜீவனை உள்புகுர வைப்பான் ஈஸ்வரன். அவனுக்கு உதவியாய் சரீரமிருக்கும். அந்த ஜீவன் தேகம் இரண்டிற்கும் உதவியாய் அவர்கள், அறியாமல் தானும் உள்ளிருப்பான் ஈஸ்வரன். இப்படி அவனிருக்கும் இருப்பையும் தானிருக்கும் நிலைமையையும் அறிய வேண்டும் புத்தியுடையவன். விலங்குகளுக்குப் பகுத்தறியும் சக்தியில்லை. பேசும் வல்லமையில்லை. இரண்டும் படைத்த மனிதன் ம்ருகம் போவிராமல் இவைகளை உபயோகப்படுத்த வேண்டும். தானும் உணர்ந்து மற்றவர்களுக்கும் என்ன ஏது வென்று சொல்லக்கூடிய

சக்தி வேண்டும். நம்மிடமிருந்து ஒன்றையும் எதிர்பாராது நம்மைக் காப்பதையே கடனாகக் கொள்ளும் ஈஸ்வரனை மனமார சிந்திக்க வேண்டும். வாயார வாழ்த்தவேண்டும். அவன் கீர்த்தி யெல்லாம் பாடிப் பரவசராகவேண்டும். இப்படிச் செய்யாதவர் ஜன்மம் வீணேயல்லவோ.

6

(1) தபஸ் வாத்யாய நிரதம்
தபஸ்வீ வாக்விதாம் வரம் ।
நாரதம் பரிபப்ரச்ச
வால்மீகிர் முனி புங்கவம் ॥

அன்பாகி யமுதாகி யமுதின்சுவையாகி சுவைப்
பயனாகித் தித்திக்கு
மின்ப வெள்ளமதாகித் துன்பந் துடைக்குந்
தனிமுதலாகி யுலகளிக்கு
மன்பனை நெஞ்சுள்ளுங் கண்ணுள்ளுந் தூய
வாக்குள்ளுங் கோயில்கொள்ளு
மன்பர் வால்மீகி நாவீறுபடைத்த நாரத
மாமுனிவரரை வினவினராம்.

இன்பக் குவியலான சமுத்திரத்தில் மிதப்பவன் ஈஸ்வரன். துன்பத்திரளான சமுத்திரத்தில் அழுந்துபவர் ஜீவர். ஜீவரைப் படைத்த பிரமனைப் படைத்த காரணத்தினால் ஜீவர்களுக் கெல்லாங் காரணனாவன் ஈஸ்வரன். ஆகையால் பிதாவென்றும் சொல்லப்படுவன். லக்ஷ்மியும் சர்வலோக மாதாவாவள். தாயுந் தகப்பனுமாய் எவ்வளவோ ஜனங்களை ஸ்ருஷ்டித்து அவர்கள் படும்பாடும் உணர்ந்தவனாவன். உணர்ந்த பின்னர் சகியானாய் கருணையென்னும்

உதார குணத்தன் இவர்கள் படவேண்டியதைப் படாது தடுக்கத் தான் படவேண்டாதவன் படப்பிறப்பன். இத னுலவனைப் பரம உதாரனென்பர். உலகங்களில் அன் பென்னும் கிரணம் பரப்பி ஆதரவு என்னும் தேனூறு பாய விட்டு இவர்கள் கடைத் தேறவந்து பிறந்தான் ராமனும் வால்மீகி முனிவரும் இப் பரமரகஸ்யத்தைத் தெரிந்து கொள்ள நினைத்தார். இதை நன்று அறிந்து உணர்ந்தவர் மூவுலகும் சஞ்சரிப்பவரான நாரதரேயெனத் தீர்மானித் தார். இவரிப்படி நினைத்தபொழுதே நாரதருமிவருடைய ஆஸ்ரமத்திற்கு வர்தார் வந்தவரை உபசரித்து ஓராசன மீந்து அர்க்ய பாத்யம் சமர்ப்பித்து பழங்கிழங்கு கொடுத் துக் கேட்கலானுர்.

7

(2) கோன் வஸ் மின் ஸாம்ப்ரதம்லோகே
குணவான் கஸ்ச வீர்யவான் ।
தர்மக்ஞஸ்ச க்ருதக்ஞஸ்ச
சத்யவாக்யோ த்ருடவ்ரத : ॥

(3) சாரித்ரேணசகோயுக்த :
ஸர்வபூதேஷுகோ ஹித : ।
வித்வான் க : க : ஸமர்த்தஸ்ச
கஸ்சை கப்ரியதர்ஸன : ॥

(4) ஆத்மவான் கோ ஜிதக்ரோத :
த்யுதிமான் கோ அனசூயக : ।
கஸ்யபிப்யதி தேவாஸ்ச
ஜாத ரோஷஸ்ய ஸம்யுகே ॥

அவனி வனுவ னெவனென நினைவரியவன்
அவனி யிலுளனுகிலெவனவ னியம்புதிர்
யவனவன் குணநலன், உயரறனுயர் திறன்
தவ நலன் மணமுளன் உணர்முழு நலனெவன்
எவனெதிர் வலனலன், எதிர் நிகழ் கழிவினும்
எவனவன் மனநலன் எவ்வெவ்வுயிர்க்குமே
எவனவனின னிலன் மிகு நரு மிலனுவன்
அவனெவனுரைமினே நலமுணர் முனியென.

உலகத்துள் உயர்ந்தவர் என்று சொல்லப்படும் ஜீவர்களுக்கெல்லாம் உயர்ந்தவனுன உத்தம புருஷனெவன்? குணவந்தனிவரென்று சொல்லக்கூடிய பரமன் யாவன்? சர்வ வல்லபனுவனே அவன்? தருமத்தின் தனி முதல்வனுவனே அவன்? சிறிய உபகாரத்தையும் பெரிதாகக் கொள்ளுமவனே அவன்? உண்மையே பேசுபவனே அவன்? எடுத்த காரியத்தை முடிக்க வல்லனே அவன்? நன்மைக்கெலாம் பொக்கிஷமாவனே அவன்? எல்லாப் பிராணிகளிடத்தும் அளவுகடந்த தயை பாராட்டுபவனே அவன்? சர்வக்ஞனுவனே அவன்? எதையுஞ் சாதிக்க வல்லவனே அவன்? காண்காண் என்று ஆசை பெருக்கும் அமுதஸ்பரூபனே அவன்? தனக்கு சமானமானவரும் மேலானவரும் இல்லை யென்னப்படுபவனே அவன்? இந்த்ரியங்கள் வழி செல்லாது மனதைத் தன் வசப்படுத்துபவனே அவன்? எவனைக் கண்டால் உலகத்தில் துஷ்டர்கள் ஒதுங்கி நடுங்குவார்களோ, எவனிருந்தால் தீங்கொன்றும் அணுகாதோ அவனுவனே இவன்? அசூயை யில்லாதவனே அவன்? ப்ரும்ம

தேஜஸ்ஸால் விளங்குவானே அவன்? கோபங் கொண் டால் தேவர்களையும் நடுங்கச் செய்வானோ அவன்?

8

(5) ஏத திச் சாம்யஹம் ஸ்ரோதும்
பரம் கௌதூஹலம் ஹி மே।
மஹர்ஷே த்வம் ஸமர்த்தோ அஸி
ஞாதும் ஏவம் விதம் நரம்॥

எவ் வண்ணத்தனை யுணர்ந்தக்கால் முனிபுங்கவா
எவ்வண்ணமென் னெண்ணம் மலர்ந் தினிதுயருமோ
உய் வண்ணம் பொங்கி மகிழ்ந்து துள்ளியெழுமோ
மெய்வண்ணத்தவ் வண்ணல் வண்ண மெடுத்துரைமின்.

இம்மாதிரியான உயர்ந்த குணங்களுள்ளவனை சற்றே கேட்க என் மனம் ஏங்குகிறது. தாமோ மூன்று உலகங் களும் சென்று அங்கங்குள்ளவைகளை அறிபவர். உம்மைத் தவிர்த்து வேறே எனக்கு உபதேசிப்பவர் காணேன். முனீஸ்வரா! கருணை கூர்ந்து என் மனம் துள்ளியெழும்பு மாறு இப் புண்ய சரித்திரத்தைச் சொல்வீரோ என்று கேட்டார்.

9

(6) ஸ்ருத்வச சைதத் த்ரிலோகக்ஞ:
வால்மீகேர் நாரதோ வச:।
ஸ்ரூயதாமிதி ச ஆமந்த்ர்ய
ப்ரஹ்ருஷ்டோ வாக்யமப்ரவீத்॥

மாதவத்தர் வால்மீகி யுரைத்தவை யெலாமுண்ட
மேதவத்தர் நாரதரு மூவுலகுந் திரி தருவாரும்

தீதற்ற குணக்குன்றமவை யொன்றிய வொருவனை
கோதற்ற மனங்கொண் டுரைக்க லுற்றாரக்கணமே.

வால்மீகி மாமுனிவர் கேட்டவைதமை மறுபடி நாரதர் சிந்தித்தார், அடுக்கடுக்காய் எல்லா நல்ல குணங்களும் பொருந்திய ஒருவனைப் பற்றி கேட்டாரே. இவர் வாக்கு வல்லமைக்கும் எட்டாத ஒரு பெரியானைப் பற்றிச் சொல்லுவம். இவர் மனம் பூரிக்கட்டும், என்று நினைத்தார், முனிபுங்கவா ! சாவதானமாகக் கேளும், சொல்லுகிறேன் புண்ய சரித்ரமென்றார்.

10

(7) பஹவோ துர்லபாஸ் சைவ
யேத்வயா கீர்த்திதா குணா : ।
முநே வக்ஷ்யாம்யஹம் புத்வா
தைர் யுக்த : ஸ்ரூயதாம் நர : ।।

அரியனவாம் பெரியனவாம் முனிவரரே, மனங் கொண்
டுரியனவா முயர்குண கணமொன்றியபிரானுமுளன்
பெரியன வெலாம் நன்கமைத்துரைத்திட்டீர்நாவலுவால்
பெரியன வுறுபெற்றியானை யுணர்த்துவன் செவிமடுப்பீர்.

உலகத்திலுள்ள ஸ்ரேஷ்ட குணங்களெல்லாந் திரட்டி யுடைத்தாயிருக்கும் ஒரு மகா புருஷனிருக்கிறானா என்றீர். உம்முடைய நாவின் வலுவெல்லாங் காட்டி சிலவற்றையுஞ் சொன்னீர். உம்முடைய அறிவின் கூர்மையால் பல சேர்த்தீர். இவை மட்டுமல்ல. இன்னும் பல்வேறு குணக் குவியல்கள் எவனை ஆதாரமாகக் கொண்டு பெருமை அடைகின்றனவோ அம் மஹானைப் பற்றிக் கூறுகிறேன். அவன் சரித்திரத்தை நன்கு கேளும். கேட்க

வேண்டியவர் நீரே. யோக்யதை யுள்ளவரே தாம். அதிர்ஷ்டமுள்ளவரே நீர். பெருமை படைத்தவரே நீரும். பாக்யம் பெற்றவரே தாமும். ஏதோ சொல்லப் புகுந்தேனென்று அஸ்ரத்தையா யிராதீர். உம்முடைய முழு மனதோடு கேளும். விஸ்வாஸத்துடன் அனுபவியும். ஆநந்த பரவசமாவீர். துள்ளிக் குதிப்பீர். பாடிப் பரவசமாவீர். ஆடி ஆடி மனம் கரைவீர். ஆனந்தக் கண்ணீர் பெருக்குவீர். அன்பு ததும்பும். இன்பத்திற்கு அளவில்லை யாகும். துன்பமெல்லாம் தூர விலகும். கேளீர் கேளீர் கேளீர் என்றார்.

## 11

(8) இக்ஷ்வாகு வம்ச ப்ரபவ :
ராமோ நாம ஜனை : ஸ்ருத : ।
நியதாத்மா மஹா வீர்ய :
த்யுதிமான் த்ருதிமான் வஷி ॥

முனிவரரே! கேளீர்! இக்ஷ்வாகுகுலதிலகராம்,
மன்னர்மன்னர்மரபுள் தோன்றிய முதல்வராம்,
ஜனனுகூலராம், மஹாவீர்யரா மதிதேஜோமயரா
மானந்தசாகரராம், தைர்யராம்,
மனோவிகார மெதுவுமெங்கு மெவ்விதத்தும்
போன்றுலோ காபிராமராம், யார்க்குங் கருணைபொழியும்
மனோரதத்தாலுலகெலாமளித்துதவும் வள்ளலினைக்
காணுந்தோறுந் தித்திக்குந் திருவுருவாம்.

இம்மஹான் இக்ஷ்வாகு வம்சத்தில் உதித்தாராம். தசரத மகாராஜர் புத்திரராம். அத்புத தேஜோமயராம். பார்க்கப் பார்க்க ஆவல் பெருக்குமவராம். தசரத புத்ரர் நால்

வருள் முதல்வராம். கண்டாரை மயக்கும் உருவத்தின ராம். ராமரென்று பெயராம். கேட்போர் காதுக்கு இனிமையான பெயராம். சொல்வதற்கு மதுரமான பெயராம். கேட்போர்க்கு இன்பமளிக்கும் பெயராம். எது வரினும் சலியாத மனதுடையவராம். சக்தியினால் அளவற்றவராம். காந்தியால் இருட்டை ஒளியச் செய்பவராம். மகா தைர்யராம். யாவரையும் வசீகரிக்கும் ஸ்வபாவராம்.

12

புத்திமான் நீதிமான் வாக்மீ
ச்ரீமான் சத்ருநிபர்ஹண: |
விபுலாம்ஸோ மஹாபாஹு:
கம்புக்ரீவோ மஹாஹநு: ||

ஒருங்கிழைத்த ஞானவெள்ளச் சுடர்சோதி யுருவத்
தராம், திரண்டுருண்டுயர்ந்தகன்றதோளிணை தாங்குந்
திருமார்பராம், நீண்டழகாய்த் தொங்குந்துதிக்கை
யொத்தகரமிரண்டுந்தாங்கும் முழந்தாளிணையுடையராம்
பெருத்தகன்று திருக்கண்ணாடியிணையொத்தகபோல
ராம், தோய்ந்தவெண்ணிறத்தசங்கொத்ததிருக் கழுத்தராம்,
உருத்தெழுந்து பொருதுநிற்றக்கால் முன்னிற்கலாகா
பராக்ரமரா மறநெறிபிறழா நாவலம்படைத்தவராம்.

புத்தியில் அளவு கடந்தவர். நீதிக்கு ஓர் களஞ்சியம். பேசுவதில் மஹா சமர்த்தர். லக்ஷ்மீ கடாக்ஷம் பொருந்தியவர். சத்ருக்களை சம்மாரம் செய்பவர். உயர்ந்த தோள்களை யுடையவர். பெரிய புஜங்கள் படைத்தவர். சங்கொத்த கழுத்துடையவர். வழவழப்பாய் ம்ருதுவாய்

சோலையுடன் கூடிய கண்ணாடிபோன்ற கன்னங்களுடையவர்.

13

(10) மஹோரஸ்கோ மஹேஷ்வாஸ:
கூடஜத்ரு ரரிந்தம:।
ஆஜானுபாஹு: சுசிரா:
சுலலாட: சுவிக்ரம:॥

(11) சம: சமவிபக்தாங்க:
ஸ்நிக்தவர்ண: ப்ரதாபவான்।
பீநவக்ஷா விசாலாக்ஷ:
லக்ஷ்மீவான் சுபலக்ஷண:॥

விசால நெற்றி, கறுத்திருண்ட குழற் கற்றை, விற்புருவம்,
விசாலமார் புயர்தோள்கள், செந்தாமரைக்கண்ணிணைகள்.
செங்கனிவாய், கோலநீள்கொடிமூக்கு, நீலமாமுகிலுருவம்,
சங்கொத்த திருக்கழுத்து, கண்ணாடியொத்த கபோலம்,
வெண்முத்து கோத்ததொத்த தந்தவரிசை, பவளச் செவ்
[வாய்,
புன்முறுவலேழையராவி யீர்த்துண்ணுங் கூற்றமதாம்,
கரு மாணிக்கமலைமேல் மணித்தடந் தாமரைக் காடுகள்
[போல்
திருமார்பு, வாய், கண், கை, யுந்தி, காலுடை, யாடை
[செய்ய பிரான்.

விசால மார்பாம் அம்மஹீனியர்க்கு. பெரியதோர் வில்லினை ஏந்தியவராம். தோளெலும்பு மறைந்தழகாய தோள்களை யுடையராம். சத்ருக்கள் தலையெடுக்க வொட்டாமல்

அடக்குவராம். துதிக்கை யொத்திரண்டு கைகளும் நீண்டு ருண்டு திரண்டழகாய் முழங்கால்கள் வரை தொங்குமவராம். சுந்தரமான தலையாம். சோபனமான நெற்றியாம். சிறுகுமரனை யொப்பாராம் நடையழகில். ஒன்றையொன்று தோற்கடிக்குமாறு அழகு நிறைந்த சுந்தர சுகுமார லாவண்ய வடிவழகாம். கண்ணைக்கவரும் படியான மேனி வர்ணமாம். உலகெலாம் ப்ரக்யாதி பெற்றவராம். பெருத்த மார்புடையராம். நீண்டகன்ற திருக்கண்களாம். ஒளிபரப்பும் சோபையுடையராம். மங்களங்களுக்கு மங்களமளிக்கும் சுபலக்ஷணராம்.

14

(12) தர்மக்ஞ: சத்யசந்தஸ்ச
ப்ரஜாநாம் சஹிதேரத: ।
யஸஸ்வீ ஞான சம்பந்ந:
சுசிர்வஸ்ய: ஸமாதிமான் ॥

(13) ப்ரஜாபதிஸம: ஸ்ரீமான்
தாதா ரிபுநிஷூதந: ।
ரக்ஷிதா ஜீவ லோகஸ்ய
தர்மஸ்ய பரிரக்ஷிதா ॥

(14) ரக்ஷிதா ஸ்வஸ்ய தர்மஸ்ய
ஸ்வஜனஸ்ய ச ரக்ஷிதா ।
வேத வேதாங்க தத்வக்ஞ:
தநுர் வேதே ச நிஷ்டித: ॥

(15) சர்வ சாஸ்த்ரார்த்த தத்வக்ஞ :
ஸ்ம்ருதிமான் ப்ரதிபாநவான் ।
சர்வலோகப்ரிய : சாது :
அதிநாத்மா விசக்ஷண : ॥

(16) சர்வதா அபிகத : சத்பி :
சமுத்ர இவ சிந்துபி : ।
ஆர்ய : சர்வச மஸ்சைவ
சதைக ப்ரியதர்சன : ॥
லச சர்வ குணோபேத :
கௌஸல்யாநந்த வர்த்தந : ।
ஸமுத்ர இவ காம்பீர்யே
தைர்யேண ஹிமவாநிவ ॥
விஷ்ணு நா ஸத்ருசோ வீர்யே
ஸோமவத் ப்ரிய தர்ஸந : ।
காலாக்னி ஸத்ருஸ : க்ரோதே
க்ஷமயா ப்ருதிவீ ஸம : ॥

14

அறமுயர்த்தும் பெருநிதியாம், சத்வமேயிவனுருவாம்,
புறம்நின்ற பல்லுயிர்க்கு மிதமொன்றே நினைப்பவனும்,
திறம்பெற்றுன் புகழெனும் பெரு நலத்தால்; நிறைஞானத்
தொருமூர்த்தி; பரிசுத்தன், கண்டாரையீர்க்குங் குணகரன்
பிரமனையொத்தான் சீமான், பரமோதாரன், அரியினத்தர்
உரம் பெறுரிவனெதிர்க்க; அடியார்க் கருளுங் காருண்யன்;
பிரமன் படைத்த பல்லுயிரையுபளிக்கும் பராத்பரனிவன்;
தருமத்தின் தனித்தேவாம்; தன்னறமும் பிறர் நெறியும்
[முறை

பிறழாதளித்திடும் சாது ; மறைநிலையுணர்ந்த மாமாயன் ;
குறைவின்றியாவு மறிந்துணர்ந்துணர்த்துவிக்கும் ஞானி ;
இனியனும் பல்லுயிர்க்கும் ; அமுதளிக்குங் கம்பீரனும் ;
தனிநாயகனிவனொருவனே யாவர்க்கு மென நிற்பவனும் ;
தனுர்வேத நிபுணன் ; யாவர்க்கும் புகலிடமாமிவனொருவன் ;
அனுதினமுமன்னைக் கோரானந்தப் பெருக்களிக்கு மற்புதன் ;
இந்துவதனன் ; சுந்தரவுருவன் ; மந்தஹாஸ மதுரபாஷணன் ;
சந்த்ரநயனன் ; மந்தகதனன் ; அத்யத்புத தேஜோமயன் ;
தீரன் ; சத்யபராக்ரமன் ; அதிகாம்பீர்யன் ; கமைவடிவாம் ;
வீரனிவனை யெதிர்ப்பாரு முளரோகாண் கோபமுற்றக்கா
லெவனும்.

தர்மத்தின் ஆணிவேராம். சத்யமே இவருருவாம். ப்ரஜைகளுக்கு நன்மை செய்வதே இவர் கருத்தாம். நேர்த்தியில் கீர்த்தி உடையார். ஞான நிபுணர். மகா பரிசுத்தர். அண்டினருக்கு அடிமையாயிருப்பவர். புத்தியில் மேதாவி. பிரமனுக்கு சமானர். ஐஸ்வர்யம் படைத்தவர். யாசகர்க்குத் தம்மையே யளிக்கும் ஸ்வபாவர். சத்ருக்களைப் பறக்கடிப்பவர். சர்வஜீவரக்ஷகர். தர்ம பரிபாலனம் செய்பவர். சர்வஜீவ தயாபரர். தம்முடையாரையும் பிறரையுங் காப்பவர். வேத வேதாந்தங்கள் கற்றவர். அவை யுணர்ந்தவர். அவை வழி நடப்பவர். நடப்போரை ஆதரிப்பவர். அவற்றின் தத்வ நிலையறிபவர். அறிந்து உணர்த்துமவர். தனுர்வேத நிபுணர். சர்வ சாஸ்த்ரங்களின் கரைகண்டவர். ஞாபகசக்தி அளவற்றது. புத்தி வெகு கூர்மை. ஞானம் விசாலமானது. விஷய ஞானம் விசேஷம். ஆறு கலைகளும் அறுபத்துநான்கு சாஸ்த்ரங்களும் ஓதியுணர்ந்தவர். சர்வலோக ப்ரியர். சாது. கம்பீரர். மஹா சமர்த்தர். நதிக

ளெல்லாம் கடலையடைவதுபோல் ஜனங்களால் அடையப்பட்டவர். பூஜநீயர். சர்வ பூதங்களிடத்தும் சமமாயிருப்பவர். எப்பொழுதும் ஒரே மாதிரியான மந்தஹாஸ மனோஹரர். காண்பவர் உள்ளமெல்லாம் கவரும் ஸ்வபாவர். ப்ரியமாக நோக்குபவர். ஆழ்ந்து நோக்குமவர். குளிர்ந்து நோக்குமவர். கருணையோடு நோக்குமவர். உள்ளபடி நோக்குமவர். உள்ளக் கருத்தை யுணர நோக்குமவர்; உணர்த்தி நோக்குமவர். கள்ளக் கபடற்றவர். கள்ளக்கபடு உணருமவர். கள்ள நோக்கமுடையாரும் வெட்கமடைய நோக்குமவர். எதிரியுங் கூசி யொடுங்க நோக்குமவர். யாவரையும் வந்தடிபணிய நோக்குமவர். இடரெல்லாம் விலக்குமாறு நோக்குமவர். இன்பமெல்லாம் ஊட்டி நோக்குமவர். அன்பெல்லாந் தேக்கி நோக்குமவர். நோக்கொன்றே போரும் வால்மீகி மாமுனியே இவ்வுலகிலுற்றார் இடரெல்லாம் விலக்க. நம்மைப் பருகுமாறு நோக்குவார்; கட்டியணையுமாறு நோக்குவார்; மடிமீதமர்த்துமாறு நோக்குவார். பார்ப்பவர் மனம் இளகுமாறு நோக்குவார். உடலந் துள்ளுமாறு நோக்குவார். துள்ளிப் பூரிக்குமாறு நோக்குவார், பூரித்துப் பொங்குமாறு நோக்குவார். பொங்கிப் புளகாங்கிதமாகுமாறு நோக்குவார். நமை மறக்குமாறு நோக்குவார். தனை நினைக்குமாறு நோக்குவார். முனி புங்கவா! அந்நோக்குக் கண்டார், ஊண் வேண்டார்; உறக்கம் வேண்டார்; பொருள் வேண்டார்; மனை வேண்டார்; பெண்டிர் வேண்டார்; பிள்ளை வேண்டார்; உறவு சுற்றம் வேண்டார்; வேறு போகம் வேண்டார்; கண்டார் கண்டவாறு விண்டு நிற்பார். பத்மமலரொக்கும் கண்கள். பதுமவிதழொக்கும் கண்மலர்கள். பதுமமொக்கொக்கும் கண்ணிமைகள். விற்போன்ற புருவம். இமை நடுவே ஒளித்

துலவும் கண்ணிணைட்டம், நக்ஷத்திரங்களிரண்டு பதித்தாற் போல் ப்ரகாசிக்கும். மின்னி ஒளி பரப்பும். உயர்ந்து கொடிபோன்ற மூக்கு. கோவைக் கனியொத்து சிவந்த வாய். செம்பவளக் குவியலொழுங்கு படிந்தாலொத்த உதடுகள். கோமளமான சிறு நவ்வு. வெண்முத்துக் கோர்த்தாற்போல் தந்தங்கள். வேதத்திற்கெல்லாந் தனி முதலாய் உள்ளே ஒளித்துலவும் திருநாக்கு. கேட்பார் மனமுருக்கும் வாக்கு. கண்ணாடி போன்ற கபோலம். உயர்ந்து விசாலமான நெற்றி. சுருண்டிருண்ட குழல் கற்றை. சற்றே திருமுகத்தில் வடிவழகை மறைத்து விளங்கும் சுருட்டை முன் மயிர். சங்கொத்த திருக்கழுத்து. அரவிந்தம் பூத்ததொத்த திருமுகம். சுந்தர வடிவழகு. சுகுமாரத் திருமேனி. லாவண்யம் மிகவதிகம். மணம் வீசும். ஒளி வீசும். அழகு ஒழுகும். ஆனந்தத் தேன் சொரியும். பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத சுவையமுதமாகும் தாய் கௌசல்யைக்கு. அவள் குடல் விளக்கம் செய்த தாமோதரனிவன். குணங்களாலிவன் நிறைந்தவனென்று சொல்லப் போகாது. இவனைப் பெற்று குணங்கள் சீர்பெற்றன முனிவர்யா.

காம்பீர்யத்தில் சமுத்ரமொப்பான். உயர்த்தியில் இமயமலை யொப்பான். பராக்ரமத்தில் விஷ்ணுவுக்குச் சமானன். சந்த்ர வதனன். சந்த்ர நயனன். மதுரபாஷணன். மந்தஹாஸ முகத்தன். அன்பு ததும்பும் பார்வை. ப்ரளயாக்னி யொப்பான் கோபங் கொண்டால். பொறுமையில் பூமிக்குச் சமானன். என்னென்றுரைப்பன் இவர் குணங்களெல்லாம். கடற்கரை மணலை யெண்ணலாம். என்னப்பன் கல்யாண குணங்கள் எண்ண முடியாதவை.

பார்த்தாலும் மதுரம்; பேசினாலும் மனோஹரம்; நின்றாலும் நேர்த்தி; சென்றாலும் விநோதம்; கேட்டாலும் அமிர்தம்; ஏட்டிலெழுதிப் படிக்கமுடியாது; காண்பார் காண்பாரே; கேட்பார் கேட்பாரே; உணர்வார் உணர்வாரே யாவர்.

15

19. தனதேந ஸமஸ்த்யாகே
சத்யே தர்ம இவாபர: |
தமேவம் குணஸம்பந்நம்
ராமம் சத்ய பராக்ரமம் ||

20. ஜயேஷ்டம் ஸ்ரேஷ்டகுணைர்யுக்தம்
ப்ரியம் தசரத: சுதம் |
ப்ரக்ருதீநாம் ஹிதைர்யுக்தம்
ப்ரக்ருதி ப்ரிய காம்யயா ||

15

தர்மமே உருவெடுத்த சத்யபிரதிக்ஞரை; ப்ரஜாபாலனரை, கர்மமே கண்ணாயினரை, எண்ணரு சற்குண பூஷணத்தை, பக்த பரிபாலனரை, பேரின்பப் பயனளிக்குஞ் சர்வ சக்தரை, சத்யபராக்ரமரை, சத்புத்ரரை, ஜ்யேஷ்டரை. ஸ்ரீ ராமச்சந்திரனை, யுவராஜனுக்கித் தம்மனம், ப்ரியஜன ஹிருதயம் பூரிக்குமாறு செயநினைந்தார் தாதை தயரதனும்.

தானஞ் செய்தால் குபேரசம்பத்துப் போன்ற அளவு கடந்த திரவ்யங்களை வாரிக் கொடுப்பார். உண்மைக்கோர் களஞ்சியம். பொய் சொல்லி யறியார். மெய்ம்மையே பேசு

பவர். சத்தியத்தில் நிலைநிற்பர். சொன்ன வாக்குத் தவராதவர். ஒரு விஷயத்தைப் பற்றி இரண்டாவது தடவைப் பேசமாட்டார் வேறு மாதிரியாக. சத்ய வாக்யத்தைக் காப்பாற்றுபவர். உள்ளொன்று நினைத்துப் புறம்பொன்று பேசார். நினைத்ததையே செய்வார். செய்வதையே பேசுவார். தர்மமும் உயர்வு பெறுமிவர் நடத்தையால். ஏ முனீந்த்ரா! இன்னும் தயை, தாக்ஷிண்யம், வாத்ஸல்யம், காருண்யம், சௌலப்யம், என்று சொல்லக்கூடிய எவ்வளவோ குணங்கள் இவனை ஆஸ்ரயித்தவை. அவைகளை ஒருவன் எண்ணமுடியாது, சொல்ல முடியாது, எழுத முடியாது. அவைகளுக்கே தனி வேதம். அவைகளால் உலகம் நிலைபெறும். சமயோசிதமாக எவ்வெவை எப்பொழுது வேண்டுமோ அப்பொழுது வெளியாகும். தாராள மனது, கூசாத ஹ்ருதயம். எது வேண்டுமானாலும் கொடுத்தலே அவன் ஸ்வபாவம். அடியார் குறை தீர்த்தலே அவன் செயலாகும். பிறர்க்காகவே உழைப்பவன். பொன் புரையுந் திருமேனி. அமுதனைய திருவாக்கு. எல்லாம் வல்லவன். எல்லாவிடத்தும் என்றும் செல்பவன். சுந்தர மனோஹரன். ஆனந்தத் திருமுகம். பார்க்கப் பார்க்கத் தெவிட்டாது, ஆசை பெருக்கும். இன்பமே உருவெடுத்து வந்தாற் போலுள்ளவன்.

இந்த சர்வலோக மனோஹரனைப் புத்திரனாகப் பெற்ற தசரதருடைய பாக்யந்தான் என்ன. உருவமழகுடைய நம்பி. மனதை வசீகரிக்குங் குணங்கள். உலகத் திழிந்ததோர் அற்புத தேஜஸ். அளவு கடந்த ப்ரபாவம். ஆனந்த சாகரத்துள் எழுந்தினர் பிதாவும். அவரையும் முழுமனதுடன் நன்று அனுபவிக்க வொட்டாத கும்பல். நாடு

நகரங்களிலுள்ள ஜனங்களெல்லாம் கும்பல் கும்பலாய்ப் ப்ரயாணமாவார்கள் ராமனிருந்த அயோத்திக்கு. வந்து காணத் தாம் புகுவார் மாளிகையுள். ஆமிணுப்பார் இவனுக்கு சமானரில்லையே யென்று ஏங்குவார். நின்றவா நிற்பார். கண்டவா காண்பார். ஊண் உறக்கமெல்லாம் மறப்பார், தம்மையும் மறந்து நின்ருெழிவார். அவ்விடம் விட்டுப் பெயரார். திட்டினுலுமிலே, முட்டினுலுமிலே, வெட்டினுலுமிலே. முண்டமாவது கிடந்துயரட்டுமென்பார். திரள் திரளாக மேல்மேலும் ஜனக்குவியல் நிற்கவிடமில்லே. நின்றே தீர்வார் அல்லும் பகலும் அஹோராத்ரமும். கண் படைத்த பயன் பெற்ருேமென்பார். உடலெடுத்ததன் பலன் கிடைத்ததென்பார். ஸ்ரீ வைகுண்டத்தில் நித்யவாசஞ் செய்பவன் நமக்கா யிழிந்தானென்பார்.

இந்தக் கும்பலே விலக்கி சற்று சற்று தயரதர் நோக்குவார். நோக்கி உள்ளம் பூரிப்பார். அகம் மகிழ்வார். அதிசயிப்பார். தம் பாச்கியத்தை நினைத்துத் துள்ளுவார். இப்படி ஊராருக்காகவும் தனக்காகவும் முளைத்தெழுந்த மாணிக்க மரகதத்தைப் பொன்முடி சூடிக் காண நினைத்தார். நினைத்து ப்ரஜை தமைக் கேட்டார். கேட்டபோழ்தே ஆகாயத்தையும் இடிக்குமெனப் பெருமுழக்கம் உண்டாயிற்று. பெருத்த கோலாகலம். குதூஹலமளவில்லே. எல்லாரும் துள்ளினர். எல்லாரும் பாடினர். எல்லாருமாடினர். எல்லாரும், எல்லாமும், ஆம், ஆம், நல்லது, நல்லது என்றன. மரங்களுமிரங்கிப் பேசுவதுபோல் அசைந்தன. ம்ருகங்களெல்லாம் களித்தோடின. பக்ஷிகள் இங்குமங்குந் திரிந்தன. தசரதரும் சற்றே ஆலோசித்தார். நம்மிடத்தில் வெறுப்பு ஏற்பட்டதா ஜனங்களுக்கு. ஏதேனுந் தீங்கு செய்

தோமா. மனங்கோண உரைத்தோமா என்றெல்லாம் ஏங்கினர். கேட்கவுங் கேட்டார் ஜனங்களை இவ்வளவு கூக்குரல் ஏனென்று.

ப்ரபோ என்று அடிதாழ்ந்தார் அவர். உங்களிடம் அன்புக் குறைவில்லை. உங்கள் அரசின் மதிப்பு இறங்கவில்லை. உங்கள் அருமைப் புதல்வன் சர்வஜீவ தயாபரன். எங்கள் மனங்களைக் கவர்ந்தான். உள்ளமெல்லாங் கொள்ளை கொண்டான். உரைக்கவல்லோமல்லோம். எங்களையறியாது எங்கள் மனம் அவனிடம் லயித்தது. எங்களை மோசம் செய்து அவனிடமே குடிகொண்டது. நாங்கள் செய்கையற்று நின்றேம். மன்னியுங்கள் என்று மன்றுடினர்கள்; பிரார்த்தித்தார்கள். தம்மை மறந்து தொழுதெழுவார். எழுந்து குதிப்பார். குதித்துப் பாடுவார். பாடிப் பரவசமாவார். சீராமன் திருவடி படிந்தவிடமெல்லாம் புரண்டொழிவார். பாததூளியை உடலத்தில் பூசுவார், நெற்றியிலணிவார், அள்ளித் தின்பார். என்ன செய்வதெனத் தெரியாமலிருந்தார் யாவருமே. தயரதனைத் தோத்தரித்தார். பரம உதாரர்த்தாமென்றூர். சர்வபூத மஹேஸ்வரனை எமக்குக் காட்டித் தந்தீர். உம் பாக்யமோ எம்மதிர்ஷ்டமோ எண்ணித் தொலையாவென்பார். அச்சுந்தர மனோஹரனை மணிமுடிசூடிப் பார்க்க எம்மனம் ஏகமாயெண்ணுகிறது என்றூர்.

16

21. யௌவராஜ்யேந ஸம்யோக்தும்
ஐச்சத் ப்ரீத்யா மஹீபதி: ।
தஸ்யாபிஷேக ஸம்பாரான்
த்ருஷ்ட்வா பார்யா அதகைகயீ ॥

10

கண்ணைக் குளிரக் கலந்தெங்கும் நோக்கியின்ப மதனையுயர்த்தி
நின்ற கண்மணி யிராமனுக்கு, ஈன்றார்க்கும் யாவர்க்கும்
எண்ணத்துள் ளென்றும் நின்று, தித்திக்கும் பெருமாற்கு,
அவர்கள் கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் கோயில்கொள்ளும்மணி
வண்ணற்கு, மாணிக்க மரகதக் குன்றினுக்கு, முடிசூட்டிக்,
கண்பெற்ற பயன் பெறுதுமெனநின்ற பிஷேகானந்த
[பரவசனாய்,
எண்ணரு வின்பப் பெருக்கொடு தாதையுமவர்ப் ப்ரஜையுஞ்
[செயுங்
கோலாகலங் கண்ட கைகேயீ நினைந்தனள் முனம் பெற்ற
[வரமவை.

நகரெல்லாம் அமளி பொங்கிற்று. ஊரெல்லாங் குதூஹலம் பரவியது. நாடெங்கும் நல்ல செய்தி விளம்பரமாயிற்று. அவரவரும் தங்கள் தங்கள் வீடுகளில் நடப்பதே போல் அலங்கரித்தார்கள். ஆடையாபரணம் பூண்டார்கள். தோரணம் பல தூக்கினார்கள். கொடிகள் பல ஏறிட்டார்கள். ஊரெங்கும் பன்னீராலேயே நனைத்திட்டார்கள். வீடு வீடாய் வாத்யகோஷம். தெருவெங்கும் ஊர்வலம் வந்தார்கள் பலர் கூடி. மாட மாளிகை செப்பனிட்டார்கள், அலங்கரித்தார்கள்,

ராம ராமஜெய ராஜாராம்
ராம ராமஜெய சீதாராம்

என்று பஜனை செய்துக்கொண்டு வீதிவலம் வந்தார்கள். ஒருவரை யொருவர் தெண்டனிட்டார்கள். ஒருவரையொருவர் ஆசீர்வதித்தார். நாடும் நகரமும் இப்படி எதிரொலி பரப்பியதைக் கவனித்துக் கேட்டாள் ஒரு மடந்தை கூனி யென்பாள். தனக்கு அந்தரங்க ப்ரியை கைகேயி யென்னும்

இளைய ராணியை ஓடி அணுகினள். வந்துவிட்டது மோச மென்றாள். இனி நீ தாதிப் பெண்ணென்றாள். ராமன் அரசனும். நம்மகன் மாமன் வீட்டிலிருக்கிறனென்றாள். சக்களத்தி நிலைமையை எடுத்துரைத்தாள். மனதைக் கலைக்க எண்ணங்கொண்டாள். தெய்வமும் உதவியது. அரக்கர்கள் கொடுமை பொறுக்காமல் காப்பாற்ற வேண்டுமென்று சரணமடைந்தார் தேவர்கள். அவர்களுக்கு அபயமளித்தார் ஈசன். தயரதன் குமரனாய்ப் பிறந்து உம்மைக் காப்பாற்றுவேனென்றார். பிறந்தார். வளர்ந்தார். தானே போகங்களை அனுபவித்து சுகமே யிருந்தார். தம்மடியார் தவித்திருப்பத் தாம் சுகமே யிருப்பதேயோ என வயிறு பிடித்தார் ஸ்ரீராமன் மனத்தினுள்ளே. கூனி யென்னும் மடந்தை வ்யாஜமாக கைகேயி நல் மனதைக் கலைத்தார். கடின சித்தமேற்றினர். பிடிவாதத்தைப் புதைத்திட்டார் உள்ளத்தில்.

17

22. பூர்வம் தத்தவரா தேவீ
வரமேநம்யா சத ।
விவாஸநம் ச ராமஸ்ய
பரதஸ் யாபிஷேசநம் ॥

17

கூனுலாவிய மடந்தை பொல்லாள் கூர்மதி புகுத்
திய வலந்தன்னல் நற்றாய் கைகேயீ, நாதனுடைத்
தேனுலாவுந் திருமுகம் நோக்கியபிஷேக முறைப் பண்பேற்
பான் காலமிதுவல்ல நற்சேயிராமனுக்குந்

கானுலாவியீரேழாண்டு திரிதந்து, தவம்பெற்றூர் நடுவ
ணூற்றுத், தானுந்தவ வேடமொடுலவி யிருப்ப,
மீனுலாவுநற் பொய்கைசூழ் நாட்டினை யென்பரதனேற்பா
னிருவர மவையிக்கண மீவா யென்றனள்.

தாம் தேவர்களுக்கு அபயமெனும் வரங்கொடுத்த போழ்தே தயரதர் கைகேயிக்கு இரண்டு வரங்கள் கொடுக்கும்படி சங்கல்பித்தார். வரங்கள் கொடுத்தாரே ஒழிய அவை வேண்டியபோது உதவும்படி நிறுத்தியும் வைக்கப் பண்ணினார். இப்பொழுது அதற்கேற்ற சமயம் வாய்த்தது. கைகேயியை கோபம், ரோஷம், பிடிவாதம் இவைகளுடன் தசரதரிடம் அவ்வரங்களை யாசிக்கச் செய்தார். அவைதானென்னவென்று தெரியாத மன்னன் ஆமென்றான். யுவராஜ்ய பட்டாபிஷேக கோலாகலத்தில் இரண்டு வரந்தானே. இருபத்திரண்டு கொடுப் பேனென நினைந்தான். கேள் என்று ஆணையிட்டான். ராமவனவாசமும், பரத பட்டாபிஷேகமும் என்றாள் கோணுமுகமுடன். கேட்டான், கேட்டு மூர்ச்சித்தான், அழுதான், அலமந்தான், புத்திமாறுட்டமுற்றான், என் செய்வதெனத் தோற்றுதான். கூற்றம் வரினும் அவ்வேதனைப் படான். படாப்பாடு பட்டான். உடலம் வெந்தான். நொந்தான். நைந்தான். நடுங்கினான். உளறினான். விம்மினான். பொருமினான். யாவும் எதற்காக? சர்வலோக நாதனைப் புத்திரனாகப் பெற்றும் இவ்வளவு சீக்கிரம் பிரிவதற்கோவெனவே. ஏது செய்தும் பயனில்லை. அவனுக்கு வேறு உயர்பணி. நல்லுதவி. பேருபகாரம் முந்தே நவின்றது. பொய் பேசாதவன். மறுத்துரையாதவன். காருண்யசாகரம். ஒருவர் ஏச ஒருவர் கூச கைகேயி மனம் திடமாகச் செய்தான். துஷ்டர்கள் செய்த தீவினை வலு

பகவானுக்குதவிற்று விதியென்னும் வ்யாஜமதாய். விதி வலுவா தெய்வ கதியா. இரண்டுமேயா. தயரதர் முயற்சி வீணேயே.

18

23. ஸ ஸத்யவசனுத் ராஜா
தர்ம பாஸேன ஸம்யத: ।
விவாஸ யாமாஸ ஸ்ுதம்
ராமம் தசரத: ப்ரியம் ॥

18

சத்யவசனத்தான், ராஜன், தானீந்தவரம் நினைந்தான்,
நேசமிலாதான் பேரல் பிதற்றிய
சத்யவசனமே யோவிது; தள்ளித் தளர் நடைபிட்டுள்ள
மெலாங் கொள்ளை கொள்ளுங் கோமனத்தை
சத்ய தர்ம பாசத்தால் கட்டுண்ணப் பண்ணுவளோவென
வயர்ந்தும் பயனிலையாய்
சத்யதர்மத்தனியுருவைத் தேனிலினியபிரானைக் கான்
செலுத்தின னயோத்தியர் கோன்.

சத்ய வாக்யமென்னும் பாசத்தால் கட்டுண்டான் பாவம் தயரதன். தர்மமென்னும் வன்கயிற்றால் வரியுண்டான் வீரன். அங்குமிங்கும் நோக்குவான். கண்மணி ராமச்சந்திரனை நினைப்பான். கடலனைய கண்ணீர் பெருக்குவான். உடலம் வெந்து துள்ளுவான். இப்பேரானந்த மின்றோடு தொலைந்ததென்றான். என் கண்ணொளி இன்றோடு மறைந்ததென்றான். என்னுருயிர் இனி நிற்காது எனத் தவித்தான், புரண்டான். புரண்டு அழுதான். பயனிலையாய் விதிவலுவுக்கஞ்ஙிக் கண்ணுக்கினியானைக் காட்டினிற்கேக

விட்டான். எண்ணற்கரியானை எண்ணாறு இடையூறுக் காளாக்கினான். விண்ணின் நன்மணியை மண்ணில் புரள விட்டான். ஏகுவாயென்று சொல்லு முன்னம் பறந்திட்டான் பரந்தாமன். குதித்தெழுந்தான். விற்பிடித்தோடினான்.

19

24. ஸஜகாம வனம் வீர :
ப்ரதிக்ஞா மனுபாலயன் |
பிதுர்வசன நிர்தே சாத்
கைகேய்யா: ப்ரியகாரணாத் ||

19

ராஜ்யமேற்பா யென்றக் காலெம்பிரானுஞ் செந்தாமரைத்
தடங்கண் மலரவிழித் தாமென்றேற்றான்;
ராஜ்யம் விடுத்திடுவாய் காகுத்தா வென்ற போழ்து
மீதன்றோ வென் கடமையென வுவகை பூத்தான்.
ராஜ்யந்தனைப் பெறுதற்கும் விடுத்தற்கு மொருவண்ணத்
தனைத் தாதையாணை சிரமேற் றிராமன்
ராஜ்யந்தனிலுற்றே ரேங்கி நிற்கக் காரணமாய் நின்ற
தனித் தாயை வலம் வந்து கானேகினனரோ.

கைகேயிக்குத் தசரதன் செய்த ப்ரதிக்ஞையென்னும் வரங்களைக் காப்பாற்றினான். தசரதன் சத்யவாக்யனென்னும் ப்ரதிக்ஞையைக் காப்பாற்றினான். தான் சத்யவாக்யனென்னும் தேவர்களுக்குச் செய்த ப்ரதிக்ஞையைக் காப்பாற்றினான். பிதுர்வாக்ய பரிபாலனமென்னும் ப்ரதிக்ஞையைக் காப்பாற்றினான். ராமன் தான் வனஞ் சென்ற நேர்த்தி தன்னால் உலகத்துற்ற சாதுக்களைக் காப்பனென்

னும் ப்ரதிக்ஞையைக் காப்பாற்றினன். உலகத்துற்ற மைந்தர்கள் பிதாவினணை சிரமேற்க வேண்டுமென்னும் நியாய ஸ்தாபனம் பண்ணினன். பிதாவே தெய்வமென நிலைநாட்டினன். உலகெங்கும் புகழ் பரப்பினன். உலகெலாம் உய்யுமாறு செய்தான் ரகுகுலோத்தமன் ராகவனும்.

20

25. தாவ்ரஜந்தம் ப்ரியோ ப்ருதா
லக்ஷ்மணோ அனுஜகாம ஹ ।
ஸ்னேஹாத் விநய ஸம்பன்ன:
ஸௌமித்ரா நந்த வர்த்தன: ॥

20

புவியுளார் கண்டதோரற்புதங் கேளீர்; செந்தாமரைத்
 தடங்கண்ணன் கானலங்கரிப்பானேகு முனங், கரங்
குவித்துடலொடுக்கி, யுடனெழுவன்யானு, முடன்துடர்ந்
 துடல் பெற்ற பயன் பெறுவனென நவின்றனன்;
புவியிடத்தேயுடன் பிறந்தானிவ னொருவனெனத் தனி
 நின்ற விளைய கோவும்; காரணமாய் நின்றுனொரு
 [நற்றாயுமிவனை
புவிகண்ட நாரணனிராம னெனவுணர்வா யிலக்குவா வெனப்
 புகட்டியள் மாற்ற மேற்றுடன் சென்றனன் கானகமே.

அப்படிக் காட்டிற்குச் சென்ற ராமனைப் பின்தொடர்ந்தான் தம்பி லக்ஷ்மணனும். தர்மார்த்தகாம புருஷார்த்தமென்னும் நான்கு தத்துவங்களை உணர்த்தப் புகுந்தனர் நான்கு குமாரர்களாய். வேதத்தில் அடங்கிக் கிடந்த பொருள்களையெல்லாம் தாம் அனுஷ்டித்துக் காட்டப் பிறந்தனர் நான்கு சகோதரர்கள். உலகத்தில் உருவெடுத்தவர் செய்யுங்

கிரிசைகள் (கர்மங்கள்) எப்படி எப்படி யென்று நடித்துக் காட்ட வந்தனர் நான்கு குமாரர்கள். உலகத்து உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று எண்ணுவாருடைய இயல்புகளைக் காட்ட விழிந்தனர் நான்கு புத்ரர்கள். கற்ற கலையெலாம் பயனில்லையாய் இந்த்ரியங்கள் இழுக்கும் வழி ஒழுகுமவர்களைத் திருத்தப் பிறந்தனர் நான்கு குமாரர்கள். வேதத்தில் விவரித்துரைத்தவை யெல்லாம் அனுஷ்டிக்கப் புகுந்தவைகளே யென்று உணர்த்த அவதரித்தனர் நால்வராய். பெரியாரும் சிறியாருமாய் நான்கு சகோதரர்களாய்ப் பிறந்து ஒருயிரும் நான்கு உடலும் போல் அவரவர் நடந்து கொண்ட நேர்த்தி சொல்லத்தான் முடியுமோ.

ராமனும் பரதனும் உருவத்தில் ஒருவரை யொருவரொப்பார். லக்ஷ்மணரும் சத்ருக்னரும் அப்படியே யொருவரை யொருவரொப்பார். மணியுருவத்தர் முன்னவரிருவரும். பொன்னுருவத்தர் பின்னவரிருவரும். பின்னமிலா சகோதரரா யொருவரை யொருவரொட்டி நின்றார் ராமலக்ஷ்மணராய், பரதசத்ருக்னராய். ராமனின்றி லக்ஷ்மணனிரான். சத்ருக்னனின்றி பரதனிரான். மூத்தோனுக்குப் பணிவிடை செய்வதே இளையோன் பிறப்பெடுத்ததன் பயனென நினைப்பர். இளையோன் மனங்கோணாது நடப்பதே மூத்தோன் முயற்சியாகும். அன்பு ஒரு பக்கம் ஆதரவு ஒரு பக்கம் பரிமளிக்கும். பிறந்த நாள் முதல் ராமனின்றி ஒரு க்ஷணமும் உயிர் தரியான் லக்ஷ்மணன். அவன் செல்லுமுன் தான் செல்வான். அவன் பின்னொட்டி நடப்பான். குறிப்பறிந்து உதவுவான். எல்லாப்படியாலும் இன்பம் பெருக்குவான். தன் சரீரம் அவனுடைத்தென எண்ணுவான்.

பிறக்கும்பொழுதே இப்படியிருக்கச் செய்ததுபோல் லக்ஷ்மணனைப் பெற்ற தாய் சுமித்திரைக்குத் தன் மகன் நடத்தை கண்டு அடங்கா ஆனந்தம் பெருகும்.

உடன் பிறந்த மூத்தோன் என நினைக்கமாட்டான். தன்னைப் படைத்த தெய்வமெனக் கொள்வான் லக்ஷ்மணன் ராமனை. அவனில்லாவிடில் இவனுறங்கான். உண்ணான், கிடக்கவும் மாட்டான். உடன் பிறந்தான் காட்டிற்குப் புறப்படுமுன் தானுமனுமதி பெற்று முன்னேகினன். அவன் மர உரி உடுக்குமுன் தானுடுத்தான். அவன் ஜடை ஏற்கு முன் தான் ஏற்றான். அவன் வில்லும் அம்பும் எடுக்குமுன் தானும் வில்லும், அம்பும், கட்கமும் ஏந்தினான். உடனிருப்பேன், உடன் போவேன், உடன் எழுவேன், உன்னுடனேயே காலங் கழிப்பேன் என்று நிலையாய் நின்றான். உடன் பிறந்தார் இருக்கவேண்டிய நிலைமையில் அதிகரித்து நின்றான்.

அன்பே வடிவு கொண்டான். அடிமைத் தொழிலின் ஆனந்தத்தை எடுத்துக் காட்டினான். அண்ணன் உகந்த கைங்கர்யத்தில் ஈடுபட்டான். பரோபகாரமே தன் பணியாகக் கொண்டான். பிறர் சுகமே தன்னுடைத்தாய் எண்ணினான். புவிதனில் பிறந்தார் யாவரும் இப்படிப் பிறர்க்கு உழைப்பவரே. ஆயினும் தனக்கு அவை ஹிதமென்று நினைத்து தன் பொருள் தன் சுற்றம் தன்னினியர் என்று அகங்காரம் மேலிட்டுச் செய்வார் கடனாகை. இப்பணியோ அன்பு பெருக்கி ஆநந்தம் மிகுத்து குறிப்பு அறிந்து செய்தல். உதவி வேண்டாதவனுக்குச் செய்தல். சிறிதைப் பெரிதாய் மதிப்பானுக்குச் செய்தல். அப்படியே தன்நலம் பாராது பிறர்க்காயே இருப்பானுக்காகச் செய்தல்.

இன்பக் களஞ்சியத்துக்குச் செய்தல். குதூஹலத்துடன் செய்தல். தொழுது அடிபணிந்து செய்தல். நம் குற்றம் பாரானுக்குச் செய்தல். இப்படி ஒரு சோதரன் அவனுக்குச் செய்து உயர்த்தி பெற்றான். மற்றொரு சோதரன் சத்ருக்னன் அவனடியாருள் ஒருவனாகிய பரதனுக்குப் பரதந்த்ரனாயிருந்து செய்து உயர்ந்தான். சகோதரப்பான்மை யிதுவேயன்றோ.

21

26. ப்ருதரம் தயிதோ ப்ருது:
ஸௌப்ருத்ரம் அநுதர்சயன் ।
ராமஸ்ய தயிதா பார்யா
நித்யம் ப்ராணஸமாஹிதா ॥

21

மன்னவன் பின்னவனிவனென நின்றவன் னினியதேனினைச்
சுவைத்தபின் னகல்வதோ வென
முன்னவன் செல்லுமுன் முள்ளொதுக்க வேகினன்; இன்னவ
னுள்ளவ னிவ்வுலகினி லரியனும்;
தன்னலனொருவனும் நன்னகர் விடுத்தேக, வின்னுயிர்
பிரிந்துடல் தரிப்பதும் மழக்கோ;
என்னுயிர் பற்றியானேகுவன் பின்னெனக், கானிடை
தொடர்ந்தன னருங்கற்பினுக் கணிகலன்.

இப்படி உடன்பிறந்த குடல்சம்பந்தத்தை ப்ரீதி பூர்வமாக அநுபவித்துக் காட்டினார்கள் லக்ஷ்மண ராமர்களிருவருமே. ஸ்ரீமந்நாராயணன் ராமனாய்ப் பிறந்தபொழுது ஒரு நிமிஷமும் பிரிந்திருக்க முடியாத லக்ஷ்மியும் பூமியில் சீதையா யவதரித்தாள். யாவர் உதரத்திலும் தங்காது பரி

சுத்தை ஜனகமகாராஜன் யாகபூமி உழுதபொழுது மிதந்தெழுந்தாள். அவனரண்மனையில் அந்தமாய் வளர்ந்தாள். செல்வநன்மணியை சிராமனுக்கு மணம் செய்து ஆநந்தமடைந்தான் ஜனகமன்னனும். இருவர் சேர்த்தி இணையிலா சேர்த்தி. ஸ்ரீமந்நாராயணனுடைய ரூப குணங்களை எப்படி ராமன் உடைத்தாய் சோபித்தானோ அப்படியே லக்ஷ்மியும் ஜனித்திருந்தாள். ஒப்பற்ற சௌந்தர்யவதி சீதை. ஆச்சர்ய ரூபலாவண்யம். கண்டாரை யீர்க்கும் குணங்கள். பொறுமைக்கோர் களஞ்சியம். தயாநிதி. காருண்ய ப்ரவாகம். அன்பே வடிவம். ஆனந்தமே இவள் மனோநிலை. இன்பமளித்தலே இவள் செய்கை நலம். சர்வைஸ்வர்ய ஸம்பன்னை. சர்வலோக மனோஹரி. இருவர் சேர்த்தி வெகு நேர்த்தி. நீல மேகத்திடையே நிலைமின் பதித்தாற் போலிருக்கும். அவன் அண்டினாரை ஆதரிப்பான். இவள் எதிர்ப்பாரையும் இம்ஸிப்பாரையும் அணைந்துபசரிப்பாள்.

பதியே தெய்வமென்றிருப்பாள். பதியே இவளுக்கு ப்ராணன். பதியே இவளுக்கு எல்லாவித சுற்றத்தாரும். பதியின்றி ஒரு க்ஷணமும் தனித்திராள். பதிக்குப் பணிவிடை செய்வதே இவளுக்குப் பேரானந்தம். குறிப்புணர்ந்து உதவுவாள். பதிதான் தனக்குற்ற கதியென நினைப்பாள். உடல் மட்டும் இரண்டே ஒழிய ப்ராணன் இருவருக்கும் ஒன்றெனெ நினைப்பார்கள். அவன் நினைத்ததையே இவளும் நினைப்பாள். அவன் வேண்டுவதையே இவள் செய்வாள். அவன் பாக்யமே தன்னுடைத்தென எண்ணுவாள். அவனைப் பார்த்தபோதெல்லாம் இவளையும் அருகே பார்ப்பார்கள் ஜனங்கள். மங்களங்களுக்கு

மங்களம் அளிக்கும் இவளன்றி ஓரிடமும் செல்லமாட்டான் ரகுராமன்.

22

27. ஜநகஸ்ய குலே ஜாதா
தேவமாயேவ நிர்மிதா ।
ஸர்வ லக்ஷண ஸம்பன்னா
நாரீணாம் உத்தமா வதூ: ॥

22

பேசினார் பிறவி நீப்பார், பேரானனருந்தேவிக் கோமளநன்
மேனியளாம், பூமாதின் திருவிடமே கருவிடமாக்
[கொண்ட
தேசாம், கர்மமே தர்மமாமெனும் யோகிஜனகன் வளர்த்த
செல்வ நன்மணியாம், வானுயர் வள்ளல்தாமும் வானவர்
பூசனைக்கா யூனிடைக்குரம்பையேற் றுலகளிக்க வுற்றார்கா
யன்பெனும் பண்பெலாந் திரண்டதோர் நல்லுருவாம்,
பேசியென், தண்மதியுங் கதிரவனுந் திரள்தாரகையுந்
திரண்டதோர் சோதிமயமாய பெண்ணுருவாஞ்
[சீதையென்பாள்

பிரமன் படைக்கும் பல்லுயிர்போல் தாய் வயிற்றில் சில நாட்களிருந்தான் ராமபிரானும். பிரமன் படைப்புக்கு மீறியளாய்த் தானே அவதரித்த சர்வலோக சுந்தரி யாவள் குக்ஷியிலும் கர்ப்பவாசஞ் செய்யவில்லை. தானே தோன்றினாள் யாகசாலைதன்னில். கர்மயோகமே துணையாகக் கொண்ட ஜனக மகாராஜன் பாக்யமாக முளைத்தாள் அவனருகே. காணக் காக்ஷி பெற்றான். கிடைக்காத பெருஞ் செல்வ நன்மணி பெற்றான். கேளாத அத்புதம்

கிட்டியது. அத்யத்புத தேஜோமயி. அளவுகடந்த சௌந் தர்யம். இணையில்லாத லாவண்யம். சர்வாங்க சோபனை. அழகெல்லாந் திரண்டதோருரு. ஆச்சர்யமாய குணங்கள். அற்புதமான மணம் வீசும். பூவினுக்கும் மணமளிப்பள். அழகுக்கு அழகுதவுவள். தேவமாயா சக்தியெல்லாந் திரண்டதோருருவாய் முளைத்தது. யாவுந் தெரிந்தவள். ஒன்றுந் தெரியாதவள் போலிருப்பாள். எல்லா ஐஸ்வர் யமும் படைத்தவள். ஒன்றுமில்லாத ஏழைபோலிருப்பாள். பாதிவ்ருத்ய மஹிமை தன்னால் மழையை அழைக்க வல்ல வள். சூரியனைக் குளிரச் செய்பவள். காற்றினை ஓயச் செய்பவள். அக்னி அனலை அணைப்பவள். ஆயினும் நாய கனுக்குப் பெருமை யளிப்ப ஒன்றுஞ் செய இயலாப் புழு வொப்பாள். மகாபரதந்த்ரை. உலகெலாம் தன்னுடைத் தானாலும் உலகில் ஒரு பரம தரித்ரை போலிருப்பாள். நாயகனுடனிருந்து உயர் போகம் அளித்தாலும் பெறுவள். ஏதும் சுகமில்லாது புவியில் கிடக்கவிட்டாலும் கிடப்பள். தனக்கெனச் சுகம் வேண்டாள். உலகுக்கெல்லாம் ஓர் தாயாய் யாவரிடமும் கருணை பாராட்டுவள். தாழ்ந்தாரை மிகவும் ஆதரித்தணைவள். அவள் ஆராத அருளமுது. இவள் யார்க்கு மிரங்குங் காருண்ய ப்ரவாஹம். தேவர் களுக்கு அபயமளித்ததைக் கேட்டனள். அரக்கர்கள் பூண் டொழிப்பேனெனும் எம்பெருமான் சபதம் கேட்டனள். அவன் தசரத புத்ரனாய்ப் பிறந்ததுமே என்னுகுமோ அவன் கோபத்திற்கு எனத் தானும் இழிந்தனள் பூமியில். ஏழையரக்கரை யெப்பாடு படுத்துவனோ எனுமேக்கமே குடி கொண்டாளாயினள். ஆரண்யம் செல்வேனென்று சொல்லுமுன் தானும் துடித்தனள். நானும் வருவேனென் றனள். சினமதை ஆற்ற நினைத்தனள். குணக்குன்றமதாய்

அருகுற எண்ணினள். காருண்ய வடிவாய் அருள்மாரி பொழிய ஏகினள்.

23

28. ஸீதாபி அனுகதா ராமம்
ஶஶினம் ரோஹிணீ யதா ।
பௌரை ரனுகதோ தூரம்
பித்ரா தஶரதேந ச ॥

23

கார்வண்ண நன்மேனியம்மான் ராமன்பின் னேகினர் கொல்,
மைவண்ண நறுங்குஞ்சிக் குழல்பின் தாழ்ந்த கோதை
[தானும்,
நீர்வண்ணனுக் காயுடல்கொண்ட விலக்குவ நல்விளையோனும்!
கண்ணும், வாயுங்கைத்தலமு மடியிணையுங் கண்டுகந்த
பார்வண்ண னூரிலுள்ளார் கண்ணினொளியும், பொன்னாகி,
மண்ணாகிப், புகழாகிப் புண்ணியநல் கூற்றாகிக் கண்ணாகி,
நேர்வண்ண நன்மேனி விண்டநற்றாதை தயரதன்
[நன்னெஞ்சமும்
கண்ணுள் மணியுந், தொடர்ந்தவாம் மணிவண்ணனை.

பரமதயாளு. உலகத்துறும் க்ஷமையெல்லாமோர் வடிவெடுத்தவள். பலகற்ற மெய்யனுக்குத் தானூர்த்த வல்ல ஞானத்திரள். பூவினும் மெல்லியள். பூம்பட்டணைய சரீரத்தள். தாமரை தளமொத்த திருவடிகள். மெத்தென்ற பஞ்சணைமேல் கிடந்த போழ்தும் செம்பஞ்சுக் குழம்பு போல் ரெத்தந் தோயும். இம்மஹா சுகுமாரி அரக்கர்களைக் காக்குமாறு முள்ளொதுக்கி நடந்தனள். கல்

விடையே படுத்தனள். புல் கற்றை தலையணையாகக் கொண்டனள். சுந்தர மேனியைக் கசக்கி உலர்த்தினள். பட்டாடை புனையுமவள் மர உரி தாங்கினள். பன்னீர் ஸ்நானம் செய்யுமவள் மலையருவியில் கிடந்து வாடினள். மாணிக்க மஞ்சரியிலுறங்குமவள் மரத்தடியே உறுத்தும் புல் நடுவே கிடந்துறங்கினள். அழகெலா மமைத்துத் தாதியர் ஒருவரையொருவர் விஞ்சி ஸ்நாநம் செய்விக்கப் பெற்றவள் விரைந்தோடுங் கானாற்றில் கல்லிடையே புறண்டனள். ஞாலமாள்வன் இனியை கால் நோவ நடந்தனள். கோலமா மேனியள் வெயிலிலுலர்ந்தனள். மழையினில் நனைந்தனள். பனியினில் கசங்கினள். காற்றினில் உலர்ந்தனள்.

இப்பெருமாட்டியே தனக்குத் தாயென்றும் ராமனே தகப்பனென்றும் நினைந்துருகினன் லக்ஷ்மணன். இம் மஹனீயர் படும்பாடு பொறுதவனாயினன். தனக்கெனப் பொருள் வேணடான், நாடு வேண்டான், நகரம் வேண்டான், போகம் வேண்டான், சுற்றம் வேண்டான், நல் மனைவி வேண்டான். இவர்களுக்குப் பணிவிடை செய்து முன்னேற்றம் பெறுவானேகினன் காட்டினிற்கே. முன்னேகுவன் முள்ளொதுக்குவன். சாலைவேய்வன். பலமூலங் கொண்டுவருவன். நன்னீர் உதவுவன். நல்துணையாயிடுவன். இவரடியே பேணுவன். இணைபிரியா தருகிருப்பன். வேண்டியது இயற்றுவன். குறிப்புணர்ந்து நடப்பன். வழிபடுவன். தொழுது நிற்பன். இவர்படுதுயர் தாளாது கண்ணீர் பெருக்குவன். பூமியெல்லாஞ் சேறுக்குவன். இது அன்பேயோ. பரவசப் பண்பேயோ. உணர் ஞானமேயோ. பெருந் தத்வமேயோ. ஏதோ அறியோம் கலியுக தர்மத்தில் ஆழ்ந்துயர்ந்த யாமும்.

இப்படி ரோஹிணியும் சந்திரனும் போல் ஏகுவாரைப் பின்னொத்தி நடந்தான் லக்ஷ்மணன். ராஜ்யாதிபோகங்க ளனுபவித்துப் பூவனைய மெல்லடிகள் நோவ நடந்தறியார் நடக்கவோ. பன்னாட்களாய் பவித்திரனுக்கு முடிசூடிக் காணுவமா வென்றிருந்த நன்மந்த்ரி சுமந்திரனும் ரதத்தைப் பூட்டினான். மூவரையு மதிலேறும்படி ப்ரார்த்தித்தான். ரதத்தைத் தானோட்டினான். நகர ஜனங்கள் யாவரும் பின் தொடர்ந்தார்கள். தசரதன் கண்ணின்மணியும் இவர் களைப் பின்பற்றியது.

24

29. ஸ்ருங்கிபேரபுரே சூதம்
கங்காகூலே வ்யஸர்ஜயது ।
குஹ மாஸாத்ய தர்மாத்மா
நிஷாதாதிபதிம் ப்ரியம் ॥

24

தெருவில்திரிந்து கால்நோவ நடந்து வெயிலொன்றும் பாராது
சுடர்சோதி வெள்ளத் தனியுருவத்தனேகுவானை,
மருவித் தொடர்ந்து நீயுற்றகானே யெம்மயோத்தியா மெனப்
பின்னொட்டியவரைத் தவிர்த்து ரதமோட்டிப்
பிரிவொன்றுற்று சுமந்திரனைக் கங்கைக்கரை யடைந்ததும்
விடுத்து, ராகவனும் ஸ்ருங்கிபேர புரத்தே
திருவில் பொலிந்த சீராளன் குகனைக் தாங்கண்டு, வகைபூத்
தனைக்காதரித் தேற்றநனிவனுந் துணையெனவே.

நகரிலுள்ள கூன்குருடு நொண்டிகளொழிய மற்றவர் கள் யாவருந் திரள் திரளாய் பின்பற்றினர் ராமபிரானை. இப்படி அயோத்தியே திரண்டெழுந்தது. யாவரும் ஒரு

பகல் நடந்து ஓரிடத்தே இரவில் சற்று அயர்ந்தார்கள். ராமனும் இது சமயமெனத் தப்பித் தேகினன் அவர்களறியாமல். சுமந்திரன் மட்டும் ரதமோட்டியேக அவர்கள் கங்கை நதிக்கரை அடைந்தார்கள். ஸ்ருங்கிபேரபுரமென்னும் ஊருக்குச் சென்றார்கள்.

அங்கே கங்கை கடப்பதற்காகப் படவுகள் பல் கோடியுடையான் குகனெனப் படுமவன் எதிர்பட்டான். படவோட்டிகளுக் கெல்லாம் அதிபதியவன். மஹா சமர்த்தன். மஹாவீரன். வெகுபுனிதன். ரகு குலோத்தமன் வருவது கேட்டு களிப்புற்றான். பல்வகை யுபசாரங்கள் கொண்டெதிர் சென்று வரவேற்றான். அடி பணிந்தான். ஆனந்தக் கூத்தாடினான். அளவு கடந்த இன்பம் பெற்றான். பொன் புரையுந் திருமேனியர் மூவருமே. பூம் பஞ்சனைய மெல்லடி படைத்தவர். சுகுமார சுந்தர மேனியர். ஆயுள் காலமெல்லாம் வாகனத்தே சென்றவர். அவர்களுள் பூவினும் மெல்லியள் சீதாதேவியும். அந்தப் புரம் விடுத்து அரண்மனையும் முழுதுந் தெரியாதவள் போலும். இவர்கள் முள்ளிடத்தே நடப்பதோ, காய்கனியும் உண்பதோ. கல் தரையில் கிடந்துறங்குவதோ. குகனென்னும் அச் சீமானுக்கு ஒன்றும் புரியவில்லை. வயிறு பிடித்தான். முகத்தில் அறைந்து கொண்டான். காணமுடியாக் கொடூரமென்றான். கேட்கமுடியாத கடினநடை யென்றான். துள்ளினான், தவித்தான், பதைத்தான், உருகினான். இவ்விடமே தங்குவீர் எம்திடம் நுமதிடமாக்கி யென்றான். கண்ணீர்ப் பெருக்கிட்டான். என் செய்வதென வறியாதான். அவன் சித்தங் கண்டான் புருஷோத்தமன். கட்டியணைந்தான். இறுகப் பற்றினான். என்னுடன் பிறந்தா -னொருவனவா

யென்றான். பக்கத்திலுட்கார வைத்தான். உள்ளங்குளிர நடந்தான். நோக்கி யகமகிழ்ந்தான். தந்தையினுணை கோணுது நடத்துவேன் என்றான்.

சுமந்திரனைக் குளிர்ந்து நோக்கி விடை கொண்டான். கங்கைக் கரையிலிருந்தான் ஓரிரவு. மரத்தடியே தங்கினன் குகன் மனம் புண்ணுகி அழிய. மன்னர் பிரானும் அவனருந் தேவியும் புல்லின்மேல் கிடந்தாரைக் கண்ட குகன் உடலந் துள்ளினன். நினைந்தானவன் சீரெல்லாம். பாராளும் பரமன் ஏழையெனை அணைந்தனன். அணைந்தாதரித்தனன். அமுதன்ன மென்மொழி பகன்றனன். கருணை வெள்ளம் பொழிய நோக்கினன். அன்பினையள்ளிப் பொழிந்தனன். சோதரன் நீயுமென்றனனே. இன்பத் தாலாட்டினனே. எழில் பரப்பினனே. என் கண்டேன். என் பெற்றேன். கனவோ நினைவோ. மனப்ராந்தியோ. இப் பேராளரும் எம்முனம் புல்லிடைப் புரளவோவென அகங் குழைந்தனன். நெஞ்சந்துடித்தனன். உடலம் வெந்தனன். தவித்துருகினன். கமலக்கண்ணனைக் கண்டேன். அவன் நீர்மை யுணர்ந்தேன் உள்ளம் பூரிக்கு முன்னிச் கோலங்கண்டழிந்தேன். என்னே என் விதியென விம்முவான். பொருமுவான். அலற்றுவான். கதறுவான். என் செய்வதெனத் தோற்றாது புலம்பி யோய்ந்தனன்.

25

30. குஹேந ஸஹிதோ ராம:
லக்ஷ்மணேந ச ஸீதயா |
தே வநேந வநம் கத்வா
நதீ ஸ்தீர்த்வா பஹூ தகா: ||

25

இம்மையிடர் கெடவேண்டியேந்தின னெழில் வேடுவனும்,
நாவாய் பலவுடையன் கங்கையிருகரையுந் தன்னுடைத்தாய்,
பொய்ம்மை யொன்றிலாது நாரணனைத் தான்கண்ட பேற்று
ளுள்ளந்துள்ளி யுடலம் பூரித் தென்செய்வதெனத் தோற்றுது,
மெய்ம்மை மனத்துவைத் தேத்திப் போற்றிராமன் பொன்னடி
பணிந்துபசரித் துவகைபூத் தடியினைக் கீழமர்ந்தான்;
செம்மை நலமதால் கங்கை புனித நன்னீர்த் தலங்கடந்து,
மூவரும் நடந்தனர் வனமிருந்து வனமா யந்தமதாய்.

சற்றே இலக்குவனை நோக்கினன். இவனும் அரச குமரன். உருக்கிய பொன்னொத்த வடிவன். சுந்தர மேனியன். லாவண்யம் இவனழகு. எம்பெருமானும் பிராட்டியும் சயனித்திருப்ப வோர் சிறுபுறத்தே நின்றனன் ஓய்வின்றி இவ்விளையோனும். குகனும் அதிசயித்தான். சந்தேகித்தான் கூட ஏனோ இவ்விபரீதமென. மெள்ளவணுகினன். உள்ள முணர்ந்தான். முகமதனில் கண்ணீர்ப் பெருக்கினை கவனித்தான். உடலஞ் சோர்ந்து நைவதை யுணர்ந்தான். விவரங் கேட்டான். தந்தை தன்னணையெனச் சீறி யுரைப்பதை செவி மடுத்தான். ஓஹோ எம்பிராற்காய் உளம் நைவான். அவன் படும்பாடு கண்டு பதைப்பான். அவனுக்காய்க் கரைவான். உடலம் அவனுடைத் தென்பான். உயிரும் ஒன்றி நில்லாதெனக் கரைவான். சற்றே ஓய்வின்றி அயர்வானை நோக்கி ஆச்சரியப்பட்டான். சகோதரப் பான்மையா இது. அன்பின் அதிசயமா இது. காதலா, கசிவா, இரக்கமா, எல்லாங் கலந்த உணர்ச்சியா. இப்படி ஒருவரை ஒருவர் விஞ்சிய தேஜோமயரைக் காண நாம் பாக்கியம் பெற்றோ மெனத் துள்ளினன். இப்படி

இரவு கழிந்ததும் மூவருமாய் குகன் கடத்திய படவினில் கங்கை கடந்தார்கள். ப்ரிய குகனிடம் விடை கொண்டு வனந் தனில் நடந்தனர். கார்வண்ணமேனி ஒளி விசிறிய போழ்து மரங்களுஞ் செடி கொடிகளுங் கண் பெற்றன. எம் பெருமானை அவா வறத் தரிசித்தன. ஆநந்தக் கூத்தாடினவே.

26

31. சித்ரகூட மனுப்ராப்ய
பரத்வாஜஸ்ய சாஸனத் ।
ரம்யமாவஸதம் க்ருத்வா
ரமமாணுவனே த்ரய ஃ ||

32. தேவகந்தர்வ ஸங்காசா ஃ
தத்ர தேந்யவஸன் சுகம் ।

பண்ணி னின்மொழியாள், மண்ணின் தனிமடந்தை, மண்
கோர் திலகமதாய் முளைத்த மாதும், [ணுலகிற்
மண்ணிடத்தே முள்தடத்தே பஞ்சனைய மெல்லடிநோவக்
கடுங்கான் நடந்து சித்திர கூடத்தே,
கண்ணும், நெஞ்சும், வாயுமிடமாக் கொண்டு திரிதருமிலக்
தனிநலனுல் சாலேவேய மாமுனிவர் [குவன்
எண்ணியெண்ணி விடைதந்த நல்லிடத்தே சுகமே
யுற்றனராம் மூவருமாய் சிலகாலம் வினோதமாய்.

மூவருமாய் பரத்வாஜாஸ்ரமஞ் சென்றனர். முதலில் அம்மாமுனிவரை தரிசித்து அவரடி பணிந்து போற்றினர். அவரனுமதி பெற்று சித்ரகூடமெனும் ரமணீயமான மலைக் கேகினர். அங்கே லக்ஷ்மணன் தன்னன்பெலாந் திரட்டி ஓர் சாலேவேய்ந்தனன். மரஞ், செடி, கொடிகொண்டு பிணைத்

திணைத்தனன். அற்புதமாயமைத்தனன் ஓர் சாலை. மாளிகை விடுத்து வந்த செல்வ மன்னர் நன்று தங்கி யிருப்பதன் முயற்சியெலாமேறிட்டனர். செம்பஞ்சு சேகரித்து மெத்தென்ற சயனமு மாசனமும் அமைத்தனர். அருகு பெருகிய ஆற்றினில் ஸ்நான பானஞ் செய்ய நல்ல துறை இயற்றினர். சாலையில் இருக்கவும், படுக்கவும், ஏகாந்தமாயும் பகிரங்கமாயுமிருப்ப தனித்தனி அறைகள் கட்டினர்.. தான் ஒதுங்கி நின்று காவலிருப்ப ஓர் திண்ணை யமைத்தனர். இங்கு மங்கு முலவக் காட்டிடை முள்ளொதுக்கி நல்லிடமாச் செய்தனர். ஒன்றல்ல இரண்டல்ல. எண்ணமுடியாத சௌகரியங்கள் செய்து தேவ கந்தர்வர்கள் நடமாடும் இடம் போல் செய்தனர். மூவருமாய் அவ்விடத்தில் நாட்டினுயர் போகம் மறந்து காய்கனி கிழங்குகளை உண்டு சுகமே வசித்தனர்.

27

சித்ரகூடம் கதே ராமே
புத்ர சோகாது ரஸ்ததா ||
ராஜா தசத: ஸ்வர்க்கம்
ஜகாம விலபன் சுதம் |

எட்டணைப் பொழுதாகிலுங் கோலமா மணிவண்ணனின்றி
தரிக்க லாகாத் தயரத மன்னவனும், [யுயிரொன்று
கட்டியே, சுரும்பே, கரும்பி னின்சுவையே காகுத்தா,
கல்லடர் கானத்தே விழுந்துழலக் கற்றனையோ ராமா,
கட்டமொன்றுங் கண்டறியா வின்னமுதே ராகவனே, வறுபதி
னாயிரமாண்டு சழிந்துன்னைக் கண்ணிலான்
திட்டமொடு பெற்ற கண்ணேபோல் பெற்றதன் பொன்மேனி
புழுதியிடைப் புரட்டவோ வென வலற்றிமாண்டனன்.

அறுபதினாயிரமாண்டுகள் புத்ரனொருவனின்றித் தவித்தனன் தசரதன். பிறகு பாக்ய வசத்தால் நான்கு நன் மணிகளைப் பெற்றனன். ரூபத்தில் உயர்ந்தவர். குணத்தில் சிறந்தவர். தருமப் பற்றுள்ளவர். அன்பே வடிவானவர். காணுக் காட்சி பெற்றேன். பெறாதது பெற்றுகந்தேன். பார்படைத்த பற்பநாபனை திருக்குமரனாகப் பெற்றேன். காரார் கருமேனிக் கடல் வண்ணன் சீலமதெனை யுருக்கும். குணமவை யெனையுயர்த்தும். செல்வ நன்மணிகளைக் காணுந்தோறும் அமுதூறும் என் நாவிடத்தே. செவியுந் தித்திக்கும். கண்ணிணையு மின்பம் பெறும். என்றெல்லாம் பிதற்றுவன். தாய்மார்கள் சூழ்ந்திருப்பக் கண்மணிகளை மலர்ந்து நோக்குவான். அகங்கனிவான். உளந்துள்ளி யெழும். பவித்திரனைப் பார்த்தணைவன். கண்ணழகனைக் கண்குளிர நோக்குவன். குழலழகுகண்டு மகிழும். வாயமுகும் கொப்பூளழகுங்கண்டு பூரிப்பன். ஆனந்தக் கூத்தாடுவன். இப்படி யெல்லாம் மகிழ்ந்தானும் ஏனோ இந்தப் பட்டாபிஷேகம் செய நினைந்தேன். ஏனோ இவ் வல்விதி. ஏனோ இக் கோலாஹலம். ஏனோ இக்குதூஹலம். என் காலமுடிவாயினவே இவையெல்லாம். என் கண்ணனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணுமோ. என் செல்வனை யழைத்த நாவும் மற்றொருவனைக் கூவுமோ? என் மணி யின்றி நானொரு க்ஷணமுமுயிர் தரிப்பேனோ. என் கோமள மில்லாது நானு முலவி நிற்பவோ. என் கட்டிக் கரும்பினை விடுத்து யானுமுண்ணுவது, முறங்குவ துமேயோ. ஹா என் வினையே. கௌசல்யா எனக்குக் காலனாயினளே கைகேயி. இனி யானிரேனென வலற்றினன். ராமா வென வுரக்கக் கூவினன் காஙெலாம் ஒலி பரப்பி. கதறிப் பதறி மாண்டனனரோ.

28

34. ம்ருதே துதஸ்மின் பரத:
வஸிஷ்டப் ரமுகைர் த்விஜை: ||
நியுஜ்ய மானே ராஜ்யாய
நைச்சத் ராஜ்யம் மஹாபல: |
ஸஜகாம வநம். வீர:
ராம பாத ப்ரஸாதக: ||

விண்சேர்ந்தான் தயரதநன் மன்னனென் றறிந்த பெரியோ
வசிஷ்டர் முதலா மற்றுமுளாரு மக்கணமே [ரும்
மண்சேர்ந்த வயோத்திநகர்க் கதிபதியாம் நீயும் பரதாவென
வாசிகூறி முன்னின்றுரைப் பரிந்து நோக்கி
கண்சோர வெங்குருதி வந்திழிய வெந்தழலுண்டான்போல்
நொந்துநைந் தழிந்தாரியர்கா யுற்ற நாட்டினை
மண்சோரவிட்டு வனமேகிய வீரன்தனை வேடிமீட்டிவண்
கொணர்ந்தர்ப்பிப்பமென வேகினன் தானுங்கானிடமே

மன்னன் முதியோன் இறந்ததுமே வசிஷ்டர் முதலா பெரியோர் மாமனின்லத்திலிருந்து பரதசத்ருக்னரை வரவழைத்தார்பாவம்! ஜனகன் மாளிகையிலிருந்து மணக்கோலத்துடன் மாமன் விட்டிற்குப் போன பரதனுக்கு இங்கு நடந்த ஒன்றுந் தெரியாது. அயோத்திக்கு வந்ததும் ஆவலுடன் மன்னனைப் பார்க்க ஓடினானிங்கு மங்கும். கடைசியாய் ப்ரேதத்தையே கண்டான். அலற்றி விம்மிப் பொருமி அண்ணன் ராமனடி பணிவேனென்றான். அண்ணனுங் காட்டிற்குச் சென்ற செய்தி கேட்டயர்ந் திட்டான். லட்சுமணனுஞ் சீதையும் பின் தொடர்ந்தனரெனக் கேட்டுப் பித்தம் பிடித்தவன் போலானான். உனக்கு

ராஜ்யமாளு முரிமை யாசித்துப் பெற்றாளுன்னன்னை ராமனைக் காட்டுக் கனுப்பி யென்றார்கள். அரசுரிமை ஏற்பா யென்றார்கள். உலகெலா மாண்டளிப்பா யென்றார்கள். தாய்சொல் கவனிப்பா யென்றார்கள். தந்தையாணை சிரமேற்பா யென்றார்கள். ஒன்றொன்றாக அடுக்கடுக்காக உரைக்கும் நாராச மொழிகளை கவனித்தான். கூராய ஆயுதம் நெஞ்சில் பாய்ச்சித் துளையாக்கி அதில் தீயிட்டது போல் தவித்தான். உருகினான் பதறினான். சீறினான். துள்ளினான். அலற்றினான். புவிபுரண்டான். முகமறைந்தான். கண்ணீர்ப் பெருக்கும் வற்றி குருதி வெள்ளம் வெளியேறின. உடலம் நடுங்கிற்று. நாகுழறிற்று. உள்ளம் ஒடுங்கியது. நாஉலர்ந்தது. நெஞ்சிடிந்தது. விதிவலு நினைந்து தவித்துருகினான். ஓரிளைஞன் காட்டினிற் கனுப்ப ஓரிளைஞன் நல்துணையாய் பின் தொடர்ந்தனன். அந்தோ வென்வினையெனத் துடித்தான். உலகெலாம் ஒப்பிற்றோ. பெரியோரும் ஆமோதித்தனரோ. பெரியாரிருக்கச் சிறியோனாள்வதோ சூரிய குலப்பணி இதல்லவே. ராமன் சத்யசந்தனாயிற்றே. முடிவேண்டாம். இளவரசு வேண்டாம். காட்டிற்குத் துரத்தவேண்டி என்ன பிழை செய்தனன். கோமளமேனியைக் கசக்கி யுலர்த்தவோ. பூம்பஞ்சனைய பிராட்டியை நையப்பண்ணவோ. இவ் விபரீதங்களெல்லாம் எந்தனாலோ எனத் தவித்தனன்.

நாடு வேண்டேன். நகரம் வேண்டேன். போகம் வேண்டேன். பொருள்வேண்டேன். சுகம் வேண்டேன். இல்லற வாழ்க்கை வேண்டேன். என்னப்பனில்லாவிடத்தில் இரேன். இன்றே காடடைந்து அவனை மன்றாடி ப்ரார்த்தித் தழைப்பேன். நாட்டிற்கரசனாய் முடி சூட்டுவேன். கண்

களிக்க நோக்குவேன் எனப் பறந்தோடினன் கானகமேவி ரைவாய்.

29

35. கத்வாது சுமஹாத்மாநம்
ராமம் சத்யபராக் ரமம் |
அயாசத் ப்ருதரம் ராமம்
ஆர்ய பரவ புரஸ்க்ருத : ||

துடியொடு வனமேகிக் கண்டனன் மரநிழலில் கல்லிடையே
பூங்கோதை யொடம்பிரான் பொன்மேனி கிடந்துழல,
நெடியோயென வலற்றினன், புவிவீழ்ந்தனன், புரண்டொ
அண்ணனுமவனை யணைந்தெடுத் திங்கனந் [ழிந்தனன்;
குடிபோந்த வகையென்னே யெனவினவத் தாதைதன்கதி
யுணர்த்தித் தனக்குற்ற கண்ணழிவு தாளாத துணர்த்தி
யடியேனைப் பணிகொண்டு நீள்நகர் காத்தருள்வாய்
சாகுத்தா வென மன்றாடி ப்ரார்த்தித் தடிதாழ்ந்தான்.

கானிடத்தே சித்திரகூடத்தே சென்றணைந்தனன் ராமனை. அடிபணிந்தனன். கட்டைபோல் கிடந்தழுதானை வள்ளலு மெடுத்தணைத்தனன். கண்ணீர்ப் பெருக்கினைத் துடைக்கலாகா துருகினன். இருவரும் விம்மினர். இருவரும் பொருமினர். இருவரும் தவித்தனர். இருவரும் பதைத்தனர். பரதன் ராமன் நிலைமை கண்டு கதறினன். ராமன் பரதன் பண்பு கண்டு அயர்ந்தனன். அன்புரசம் ததும்பிற்று. மாணிக்க மஞ்சரிமேல் சயனிக்கும் ப்ரபுகல்லி டையே கிடப்பதோ வெனவலறினன். பல்கோடி சேடிமார் சூழ்ந்தழகு செய்யுந்திரு மேனியை முள்ளிடை யொதுக் கவோ வெனப்பதறினன். ப்ரபோயாது மறியாப் பாவி

யேனை நீ பலகாட்டிப் படுப்பாயோ. போகமெலாந் துறந்த தும் எந்தனுக்காயோ வெனப் புலிபுறண்டனன். தாதைக் காயோ இக் கூற்றெலாமும். தாதைக்காயேலவன் மாண்ட னன் நின்பிரிவு தாளாதென்றனன். தாயார் கோலமழிந்தது. நாடெல்லாம் புலம்பும். நகரெல்லா மேங்கும். மாந்தர் ம்ருகமுள்படயாவும் முண்ணவில்லை, நன்னீர்பருகவுமில்லை. நான் பட்ட தெல்லாம் போதும். இனியேனுங் கருணை கூர்ந்து நம்மரசினை அங்கிகரியும். தாய்மார் மனதை குளிரச் செய்யும். நின்னருள் பேணிநிற்பனென மன்று டினன்.

30

36. த்வமேவ ராஜா தர்மக்ஞ
இதி ராமம் வசோஅப்ரவீத் ।
ராமோ அபி பரமோதார ஃ
சுமுக ஃ சுமஹாய சா ஃ ॥

37. நசைதத் பிதுராதேசாத்
ராஜ்யம் ராமோ மஹாபல ஃ ।

காயோடு வேறுபல மூலமுண்டு நெடுங்காலம் கடுங்கானிலுற்
றழிவதற்கோ வாரியா ! சூரியகுலத்துதித்தாய் ?
தியோடு நீடுதவஞ் செய்து பெற்றதயரதர்தந் தனிமுதல்வா,
ப்ரபோ ! செம்பொன் மணிமாடஞ் சூழயோத்தி
தாயோடு தாமெய்தியுயர் சிங்காசனத்தே வீற்றிருந்
துலகாளும் போகம் பெற்றென்னை யாட்கொண்டு
[காருண்யா
தாயோதுவாய் மொழிபலவுமாற்றி நிற்றியென்றபோழ்தே,
[பரதா !
தேவே நமக்கென நின்ற, தாதை, யாணை, யீதேயென்றான்.

அழுதான். தொழுதான். புவிபுறண்டான். கண்ணீர் பெருக்கினன். மன்ருடினன். கெஞ்சினன். குலவினன். அடியிணைப்பற்றிக் கண்ண நீராலபிஷேகித்தான். ப்ரபோ வென விண்ணிடியக் கதறினன். பதறினன். உள்ளந் துள்ளினன். என் செய்வதெனத் தோற்ருது பதைத்தான். தவித்தான். உருகினன். மனங்கொதிக்க விம்மிப் பொருமினன். தீவினைத் திரளிணை நினைந்தான். இன்னும் உயிர் நீக்காது உற்றனனே என நொந்துரைத்தான். உலகாளும் பரிசு உன்னுடைத்தே ப்ரபோ வென வலற்றினன். இக்ஷ்வாகு குலவிமரிசை இன்ருேடொழிந்ததா வெனப் பதறினன். எனக் குற்ற பேரபவாதத்தை மாற்றிடுவாயென வடிபணிந்தான் பன்முறையும்.

அகங்கனிந்தான் காகுத்தனும். குளிர்ந்து நோக்கினன். பரதனை வாரியணைந்தான். எடுத்துச்சிமோந்தான். மடிமீ திருத்தினன். உடலந்தடவினன். திருமார்பிடத்தே புல்கினன். பரதா மெச்சினேன். உயர்ந்தாய் நீ நின் பணியால். உனக்கும் எனக்கும் தாதை தயரதனலவோ. தாதையே தெய்வமலவோ நன் மக்களுக்கு. அன்னுராணையாலலவோ யானிங்குற்றனன். அவராணையாலலவோ நாடுன்னுடைத்தாம். ஈரேழாண்டளவு நீயேயாளும் பணியேற்பாய். தாதையாணை நினக்கு மெனக்கு மொருபொருட்டேயல்லவோ. அதை மீறேன்யான். நாடாள இசையேன் என்ருன் ராமனும்.

31

38 பாதுகே சாஸ்ய ராஜ்யாய
ந்யாஸம் தத்வா புந꞉ புந꞉ ॥
நிவர்த்த யாமாஸ தத꞉
பரதம் பரதாக் ரஜ꞉ ।

நெஞ்சுருகிக் கண்பனிப்ப நின்று சோர்ந்து நெடிதுயிர்த்து
மன்றுடி நின்ற கோவை முறுவலுடன் வள்ளல்
பஞ்சியன்ன திருக்கரத்தால் கட்டியணைந்துச்சி மோந்து,
பரதா, நந்தாதை வாக்கியமெனைக் கான் செலுத்தி
குஞ்சிக் கோமளமைந்தா வுனக்காளும் பரமேற்றியடைத்த
தேயாக; தாதையானை யெனக்கு முனக்குமொரு சீரலவோ
கெஞ்சிப் பயனென்னே. யிதோ யிணையடிக் கீழுமரும் நற்
பாதுகை யெடுத்தேகி யாண்டளிப் பாயயோத்தி யென்றான்.

அறப்பொருளை விரித்து நடிப்பான் உற்றனம்யாம் இம்மர் மமதை மறந்தனையோ பரதா, மாபாக்யா. தருமத்தின் தனித்தேவாம் தயரதராணை மறுப்பது அறமலவே. உணர் வாயென ஓதினன் ஓதநீர் வண்ணனி ராமனும். புன்முறுவலொடு புனிதநறும் போக்யத்தானைக் கட்டிய ணைந்தனன். காதலாதரம் பெருக்கினன். கருணையெனுங் கடல் பெருக்கால் அபிஷேகித்தனன். உள்ளங் குளிரச் செய்தனன். தாதை வாக்யமே நம் பாக்ய மென்றனன். ஈதேயறமென வுணர்த்தினன். தன்னடிக் கீழமர்ந்த பாதுகை யீந்தனன். இது துணையாக் கொண்டு நாடாள் வாய் நான் வருமளவு மென்றனன். உலகுதனை யுய்விப்பா யிவ்வண்ணமென வாணையிட்டனன்.

32

39. ஸ காம மனவாப்யைவ
ராம பாதாவு பஸ்ப்ருசன் ||
நந்திக்ராமே அகரோத் ராஜ்யம்
ராமா கமன காங்க்ஷயா |

சீராளன் சிராமன் சிறுநவ்வொடுரைத்த மாற்ற மேற்றவன்
பொன்னடி புனைந்தமணி பாதுகை சிரந்தாங்கிப்
பேராளன் மனமுளைந்து வினைநினைந்து தனைநொந்து வனங்
கண்ட நன்மேனியனின்றி யவன் நாடணுகேன்
பாராளப் பிறந்தானவனே யாகுமப் பெருமனத்தனுணை
கொடவன் நல்லடி துணையாக் கொண்டு பாரையாளும்
பேராளன் வருமளவுமிருந் தொழிவன் நந்திக்ராம மதிலென
நின்றானிவனைப் பாரில்லை யென வையத்தே.

என் செய்தும் பயனில்லை. பரதவாக்ய மேற்கவில்லை. தன் மனோரதங்கிட்டவில்லை. தன் செய்ய திருவாக் காலாணையிட்டனன். இனி வழக்கில்லையெனச் சிரமேற்றான் பரதன். பாதுகைகள் சிரஸாவஹித்தான். ராமனை வலம் வந்தான். அடிபணிந்தான். ஈரேழாண்டளவே இப் பரந் தாங்குவேன். அப்புறம் நீ வாராயேல் அக்கினியில் வீழ்வேன். ப்ரபோ வெனப்ரார்த்தித்து நாட்டினிற்கேகினான். ராமனில்லாவயோத்தியேகாது நந்தி கிராமத்தே நின்றான். பாதுகைக்குப் பொன் முடிசூட்டினான். அதனைச் சுற்றி வலம் வருவன். ராமனங்கிருப்பதாக நினைப்பன். பரிவாரங்களொடு பணிவன். கவரி வீசுவன். குடைபிடிப்பன். அரசியல் அதனுக் குரைப்பன். அதனுணையென நினைத்து நாடாள்வான். ஸ்ரீராமன் வரவினை ஆதாரவொடெதிர் நோக்கி நின்றனன் சீமான்.

33

40. கதேது பரதே ஸ்ரீமான்
ஸத்யஸந்தோ ஜிதேந்த்ரிய: ‖
ராமஸ்து புநரால க்ஷ்ய
நாக ரஸ்ய ஜநஸ்யச |
தத்ர ஆகமனமே காக்ர:
தண்டகான் ப்ரவிவேச ஹ ‖

பூமருவி யினிதமர்ந் துலக்காள்வாய் பரதா வென்ற
பொன்னுரை முடியேற்று தொழுமி தழுதடி நினைந்து
தீமருவி நெய்வார்த்து வளர்த்திட்ட வோமாக்னி யொத்த
தேசுடை பரதன் போயினபின் கமல நயனன்
நாமருவியினிவணுறைந்தக்கால் நகருளாரு மொவ்வொரு
வராய் சங்கிலி கோத்திடுவரிக் கானிற்கே.
தேமருவு பொழிலிடத் தடர்ந்தகானே கிடுவமென விரைந்
தனன் பூங்கோதை நல்லிளை யோனிருவருடன்.

தருமதேவதை தவமிருந்து பெற்றதாமிப் பெரியான் பரதனை. பரம பக்தியெனப்படும் அமுதினுக்கு ஓர் உதாரணமாமிப் பேராளன். அவனேகியதும் அயோத்தியா வாசிகள் தன்னிருப்பிட மறிந்தார்கள். இனி சங்கிலி கோர்த்தாற் போலிங்கு வருவார்கள். நம்முடைவன வாசம் அயோத்யாவாசமாகிவிடும். பித்ருவாக்ய பரிபாலனத்திற்கு இழிவுண்டாகுமென நினைத்தான் ராமனும். இனி இங்கிருக்கலாகாதெனத் தீர்மானித்தான். உடனே புறப்பட்டான் தம்பியொடும் நங்கையொடும் அடர்ந்த அடவிக்குள் போகவே.

34

41. ப்ரவிஸ்யது மஹாரண்யம்
ராமோ ராஜீவ லோசன: ।
விராதம் ராக்ஷஸம் ஹத்வா
சரபங்கம் ததர்ஸ ஹ ॥

தண்டகமெனுங் கொடுங்கானிடை நன்றிருந்து
கண்டிதமாயிவணேகுவரைக் கொன்றொழிப்பன்
திண்டியாகும் நற்சுவை யொடென நின்றவிராதன்
தண்டித்து, மாமுனி சரபங்கர் தரிசித்தான்.

வனம் புகுந்ததுமே விராதனெனும் அரக்கன் எதிர்ப் பட்டான். அவனைக் கொன்ற பின்னர் மூவருமாய் சரபங்க ரெனும் முனிஸ்ரேஷ்டரை தரிசித்தனர்.

35

42. சுதிக்ஷ்ணம் சரபி அகஸ்த்யம்ச
அகஸ்த்ய ப்ராதரம் ததா |
அகஸ்த்ய வசனாச் சைவ
ஜக்ரா ஹைந்த்ரம் சராஸனம் ||

43. கட்கம் ச பரமப்ரீத:
தூணீச அக்ஷய சாயகௌ |

முனிபுங்கவர் சுதிக்ஷ்ணர் தென்கலைக்கோர் முழுமுதலா
மகஸ்தியர்வர் சோதரர் கண்டு காகுத்தர்
துனிதீர்த்தின்பந் தருந்தமிழரசரகஸ்த்யர் நல்லன்பு
பெற்றமன்னர் பிரானும், வானவர்கோன்
நனிவுடனீந்த கட்கமொடம்பறாத் தூணியு மென்றுங்
குறையா சரவகையுடைத்தாயதுங் கத்தியும்
இனியெங்கள் குறைமுடிப்பாய் ரகூத்தமா தீயவரக்கர்
குழாங் கொன்றேயென வுதவியை, பெற்றார்.

சுதிக்ஷ்ணாஸ்ரமம் சென்றனர் பிறகு. அகஸ்த்ய மாமுனிவரை தரிசித்தார்கள். அகஸ்த்யரிடமிருந்து இந்திர சம்பந்தமான தனுஸ்ஸையும் கத்தியையும் அடைந்தார்கள். எடுக்க எடுக்கக் குறையாது வளரும் அம்பறாத்தூணி ஒன்றும் கொடுத்தார் முனிவரும்.

இம் மாமுனிவர்கள் தவமிருந்த பலன் கண்டனர். ஆதியஞ்சோதி யுருப் பிரிந்த சுடர்சோதி வள்ளலைக் கண்டனர். மனனகத்தே முளைத்தெழுந்த பரஞ்சோதி யின்னுருவினை நேரே கண்முன் கண்டனர். காலமெல்லா மிதற்காக

வன்றோ ஊண்விடுத்தனர். பொருள் வெறுத்தனர். சுற்றம் விடுத்தனர் நல்லுடலமு முலர்த்தினர். உறக்கமது காணார். நலமொன்றும் பேணார். போகமொன்றும் பாரார். சுக மொன்றும் வேண்டார். துக்கமென்று நோக்கார். கானிடை கிடந்தனர். மரத்தடியே பெருகினர். உபவாச மிருந்தனர். படாப்பாடு பட்டனர்.

இப்பொழுது காணுக்காக்ஷி பெற்றனர். பேணுப் பெருஞ் செல்வ மணுகிற்று. வான்பரப்புங் கொழுஞ்சோதி கண்டனர். பேராப் பேரின்பத் தாழ்ந்தனர். தம்முடைச் சிறு குடில் புனிதமாகத் திகைத்தனர். அவாவறப் பருகி நோக்கினர் எம்பிரானை.

36

44. வஸதஸ்தஸ்ய ராமஸ்ய
வனேவனசரைః ஸஹ ‖
ருஷயோ அப்யாகமன் சர்வே
வதாயாசுர ரக்ஷஸாம் |

பழித்திட்டவின்பப் பயன்பற்றறுத் தைம்புலன் களவை
கண்டவா வுழலாதடக்கிக் கானிடத்தே
கழித்திட்டெம் வாணுளை வீணுக்காதெம்பிரானை மனத்
தகத்தே நிலை நிறுத்துவ மென விருந்தார் தமையு
மொழித்திட்டிவரை யித்தரணியில் நலமொன்றில்லாது
துடைத்திடுவமென முனைந்து தவமழித்து விரத
மழித்திட்டதீய வரக்கர் குலங்களை வானேகியன்
வீரராகவனென முனிவரர் வரவேற்றனர் ராமனை.

இன்னும் அவ்வனத்திடை யுற்ற ரிஷிகளெல்லாரும் கூடினர். காலமெல்லாம் தாம் வாடித்தவஞ் செய்த யோகி யர் கூடினர். ஐம்புலன் களவை தம்வசமிருத்திய பெரி

யோர் அணுகினர். ஞானப்பெருவிளக் கேற்றியர் வந்தனர். வாணாளை வீணாளாக்காத முயற்சியோர் வந்தனர். எம்பிரான் தூய திருக்குணங்களுணர்வோர் அணுகினர். நாளுமவை நினைந்துருகியேத்துமவர் ஏகினர். கோலமா மணி வண்ணனைக் காணுநாளு முறுமென வுணர்ந்த யோகியர் கூடினர். ஆனந்த வடிவனைக் கண்டனர். திருவுருக் கண்டுளம் பொங்கினர். அகம்விண்டனர். மனனகத்தே மலமறத் தோன்றியனை முந்துறக் கண்டனர். உள்ளந் துள்ளியெழ உடலம் பரவசமாயினர். அர்கியபாத்யாசமனீயமீந் துபசரித்தனர். பலமூலம் பலவுதவினர். வரவேற்றனர். திருவடிவிலும் திருக்குணங்களிலும் ஆழங்கால்பட்டு அனுபவித்தனர். அஹோ எம்பாகிய மெனப்புகழ்ந்தாடினர். தோத்தரித் தாரவாரித்தனர்.

37

45. ஸதேஷாம் ப்ரதி சுஶ்ராவ
ராக்ஷஸாநாம் ததாவனே ‖
ப்ரதிக்ஞா தஸ்ச ராமேண
வதஃ ஸம்யதி ரக்ஷஸாம் ।
ரிஷீணமக்னி கல்பாநாம்
தண்டகாரண் யவாஸிநாம் ‖

அஞ்சலென்றடி தாழ்ந்தார்க் கபய மென்றோதுங்
காருண்யக் கடலே. யிராமவென நயந்தார்க்கு
அஞ்சேலினித் தீயோர் வலுவிழியும் வினைவிலகும் தருமமுயருந் தவப்பயனு மாகுமென
நெஞ்சாரப் பகன்று வனமடுத்த மர்மமு மதற்கேயாம்;
புண்ணியமுங் கண்ணியமு முறு
நெஞ்சமுணர்ந்தது வளர்ப்பானுடல் கொண்டேன்
முனிவரரே யெனச் சபதஞ் செய்தனன்.

பிரமன் படைத்தான் பல்கோடி ஜீவராசிகளை. நாராயணன் அவைகளைக் காக்கு மியல்பு பெற்றான். காக்க முயல்வானும் இவைகள் சுகமேயிருக்க வேதமெனும் நீதி நூலை உதவினான். உயர் தர்மங்களெல்லாம் அவற்றில் விவரித்தான். துன்பம் துடைத்து இன்பம் பெருக்கி வாழும் வழிகளை அவற்றுள் பல உரைத்திட்டான். மழையழைக்கும் வழிகாட்டினான். தன தான்யம் பெறும் வகையுணர்த்தினான். போகமும் பொருளும் அடையும் முறையுரைத்தனன். அதன் வழிநடந்தால் சர்வ ஐஸ்வர்யமும் படைத்து இன்பம் அனுபவிப்பார்கள். எல்லோரும் செய்யா விடினும் சிலரேனும் செய்தக்கால் சோபனம் உண்டாகும். நல்லார் ஒருவர்க்காய்ப் பெய்யும் மழையாவர்க்கும் பயன் படவில்லையா. நெல்லுக்கு இரைக்கும் நீர் வாய்க்கால் வழியுற்ற புல்லுக்கும் உதவவில்லையா. ஆகையால் ஏதோ சிலர் யாங்கள் யாகம் முதலா நலமியற்ற நிற்றோம். எங்களுக்கென்று ஒரு நலமும் வேண்டாது பாவுந்துறந்து தவமிருப்போம். எங்களை செய்வன செய்ய வொட்டாது குறுக்கிடுவார்கள் அரக்கர்கள். யாகபூமியைக் கலைப்பார்கள். உதிரத்தைப் பொழிவார்கள். தவமிருக்கும் யோகியரைத் தின்றொழிப்பார்கள். கொன்று கிடத்துவார்கள். நன்னெறியில் நிற்க விடார். அக்ரமங்கள் எண்ணித் தொலையா. நாங்கள் சகிக்க முடியவில்லை. ப்ரபோ துஷ்டர்களைத் துலைக்கவந்த நீ எங்கள் இடர் நீக்கவேண்டும். முறை கவனிக்க வேண்டும். ஆபத்பாந்தவா. அனாதரக்ஷகா. கருணைகூர்ந்து எங்களைக் காப்பாற்றுவாய் என்று சரணடைந்தார்கள்.

அடியார்க்கு என் செய்வனெனக் காத்திருக்குஞ் சீராளன் மனமிளகித் தான் பிறந்த வண்ணமதற்காயே யென்றான். சீக்கிரம் இடர்களைவனென்றான். துன்பந் துலையு

மென்றான். அரக்கர் குலங் களைவேனென்றான். உங்கள் நலம் பார்ப்பனென்றான். அக்னி சாக்ஷியாய் ஆணையுமிட்டானரோ.

38

46. தேன தத்ரைவ வஸதா
ஜனஸ் தான நிவாஸினீ ।
விரூபிதா சூர்ப்பணகா
ராக்ஷஸீ காமரூபிணீ ॥

கண்டவர்தம் மனம்மகிழ, வடைபவர்தம் வினைவிலக,
தண்டக வனந்தன்னில், காமெனல்லா மொளிபரப்பும்
வண்டமர் சோலைதன்னுள், ளொளிமணி வண்ணன் தன்னை
கண்டுதாம் பெண்டிராகாப், பெருவுடல் படைத்துமென்னென

வண்டினள் சூர்ப்பணகி, யரக்கர்குல நாசத்திற்காய்
கொண்டல் வண்ணனனுகி, யெனையாண்டருள்வாய் வீரா
எண்டிசையுங் கடலேழு, முலகேழு மென்னுடைத்தாம்,
தண்டக வனந்தன்னில், சுகமுறுவமென வேடினளை
மண்டியெரி மனத்த, னிலக்குவனுஞ், சீறிநிற்ப
வேண்டிய வுருக்கொள்வ, ளுருக்குலைந் தோடினளே.

அவ்வனத்தினிற்கதி பதியாம் சூர்ப்பணகியெனு மரக்கி. லங்கைக்கரசன் ராவணேஸ்வரன் ப்ரிய சகோதரி. அதிக்ரூரை. நரமாம்ஸப்ரியள். பெருவயிறள். தொங்கு முலையள். பெருத்தநாசி. செவியும் பெருத்தவே. தலை ரோமம் ஊசிபோல் நிற்குமாம். சிங்கம் புலிபோல் கடைவாய்ப் பற்கள் நீண்டு வெளியே தொங்குமாம். இஷ்டப்படி ரூபந்தரிக்க வல்லவள்.

ஒருக்கால் கண்டனள் கமலக்கண்ணனி ராமனைத் தன் வனத்தே. செந்தாமரைக் கண்ணினைக் கண்டனள். விசால மார்பு கண்டனள். வண்டொழுங்கு படிந்த தொத்த சிகை கண்டனள். மரகதமேனி கண்டனள். செம்பவள வாயுங் கண்டனள். சக்கொத்த கண்டங்கண்டனள். கோமளவாயுங் கண்டனள். அழகிய நவ்வுங் கண்டனள். ஆனந்த உரு வங்கண்டனள். செல்வநாரணனைக் காணுமோர் பாக்யம் பெற்றனள் தீயவரக்கியும். தனை மறந்தனள். தன்கோர உருமறந்தனள். தன் தீய பண்பினை மறந்தனள். தன் குலம் மறந்தனள். தூயதிருமேனிப் பண்பினை நெஞ்சுள் புதைத்தனள். இருத்தினள். துள்ளினள். ஓடினள் இங்கு மங்கும். என்செய்திப் பொன்னுருவை யணைவமென நினைக்கலாயினள். காமப்பேய் மூடிற்று. சுந்தரச் சிறுவனைக் காதலித்தனள் மனமார. சுகுமாரமேனியனைக் கட்டியணையப் பெறுவனோவென ஏங்கினள். காரார் கடல் வண்ணனை மடலூர்ந்து தொண்டு பூணுவனெனத் தீர்மானித்தாள்.

தன் கோரஉரு மறைத்தனள். சுந்தர மேனிபடைத்தனள். எழிலெல்லாம் பூண்டனள். அன்பெல்லாம் பெருக்கினள். பெரு விலாசம் படைத்தனள். உலவினள். அங்குமிங்கும் நோக்கினள். நறுமணம் விசிறினள். நாறுசாந்தம் அமைத்தனள். மேனி நன்குறுய் குலுக்கினள். கண்ணடித்து நோக்கினள். சற்றேபுவியினைக் கீறினள். தளர்நடையிட்டசைந்தனள். காணாததேபோல் நடித்தனள். தனியிடம் போல் உலவினள். தனதிடமென விறுமாந்தனள். முலைத்தடத்தே குங்குமக் குழம்பு பூசியள். ஸ்ருங்கார நடை பழகினள். கைவளைகள் ஒலித்தனள். கால் சிலம்பை

உதறினள். கொங்கை குலுங்க விசைத்தனள். உலவிய கண்ணோட்ட முற்றனள். கடைக் கண்ணோக் கொடணு கினள். சுந்தரமனோஹரனும் சிறு நவ்வொடு நோக்கினன். உளங்குளிர வுரைத்தனன் தன் வரலாற்றை யவள் கேட் கவே. மாணிக்கமேனி கண்டுதாளாதாள் உள்ளக் கிடக்கை உணர்த்தினள். அடி தாழ்ந்தனள். முடியுடை வீரா நீ யிக்கானிடை கிடக்கவோ வென ஆசை காட்டினள். தன்னண்ணண் சீரும் நேருமுரைத்தனள். மரபும் பொரு ளும் நவின்றனள். வீரமு முயர்வும் பகன்றனள். தனை யேற்க மன்றுடினள். பிதற்றலெல்லாங் கேட்ட கோதண் டபாணியும் சற்றே நவ்வினன். நவ்வும் நமக்காயே யென வணுகினள். அவனுடலம் காக்க நின்ற வீரன் பொறுக்க கில்லான். மீறுக் கோபங்கொண்டன். இவள் கொடி மூக்குங் காதிரண்டும் அறுத்திட்டான்.

39

47. ததஃ சூர்ப்பணகா வாக்யாத்
உத்யுக் தான் சர்வ ராக்ஷஸான் ।
கரம் த்ரிஸி ரஸம் சைவ
தூஷணம் சைவ ராக்ஷஸம் ॥
48. நிஜ கான ரணே ராமஃ
தேஷாம் சைவ பதா நுகான் ।

முலைத்தடமும் பெருமூக்கு மறுப்புண்டவத் தியள்
மலையொத்த கா தூஷண திரிசிரஸ்ஸனுகிநிற்று
சிலைத்தடக்கை வீர ரிருவருற்றுர் நங்கானில்
அலைதலுற்றுரவர் சுந்தரத்திரு மங்கையொடு
கலைவலவர் சுகுமாரர் அந்தரத்தமர ரொப்பர்
துலையிலா வழகுடைய ரெழில் பரப்புஞ் தேசுடையர்

அலையற்றவாரமுதம் தெவிட்டாத தேனெப்பர்
இலையிணையென நின்றானை யணுகியதே குற்றமதாய்
சிலைவலவா வென்னழகு தலைத்திட்டார் கூர்வாளால்
அலைகடல்போலலற்றியென் னெனுங் கூக்குரல் கேட்டாரும்
சிலையொன்றிற் கிரையானா ரொருவனி ராமனுடை
மலையொத்ததிண்தோள ரீரேழாயிரவரொடே.

மூக்குங் காதுமில்லாதாள் ஓடினள் ரத்தப் பெருக்குடன். அவ்விடத்தே ஜனஸ்தானத்தே அவள் சகோதரரிருவர் கரதூஷணரெனப் படுவருற்றார். த்ரிசிரஸ்ஸென்னும் வீரனோடும் பெருத்த சைன்யத்தோடும் அவர்களிருவரும் சண்டைக் கேகினர். தங்கையின் வரலாறு கேட்டுப் பொங்கினர். அடங்காக் கோபமோடு ஸ்ரீராமனொடு போர்புரிய வேகினர். ராமபிரானும் லக்ஷ்மணனை சீதையை யொருபுறம் காத்திருக்கும்படி ஆணையிட்டனர். தானுமொருவிற்கொண்டு அவ்வரக்கர்யாவரோடும் பொருது நிற்றனர். ஒரு முகூர்த்த நேரமதில் ஒரு வில்லால் அவ்வரக்கரொருவருமின்றி வதைத்திட்டனர். சூர்ப்பணகியும் பார்த்திருந்தாள்.

40

49. வஸே தஸ்மின் நிவஸதா
ஜநஸ்தான நிவாஸி நாம் ‖
ரக்ஷஸாம் நிஹதா ந்யாஸன்
ஸஹஸ்ராணி சதுர் தச ।

கருமுகில் போல்வதோர் மேனிச் சிறுவனென
நினைந்தெதிர்த்தனர்.
பெருவீரர் மூவருமீரே ழாயிரவருஞ் ஜனகன்
செல்வி பார்த்திருப்ப

ஒருவில்லா லொருயாமமதில் யாவரையும் வென்றனனெம்பிரானும்

பெருவீரனென் றுணைவனென வணைந்தனள் பார்மகளும் ஜனஸ்தானத்தே.

ராவணன் ஜனஸ்தானத்தைக் காப்பதற்காக ஈரேழாயிரவரக்கர்கள் வைத்திருந்தான். அவர்கள் யாவரும் போரில் மாண்டனர் கரதூஷண திரிசிரஸ்ஸோடு. பிராட்டியும் பார்த்து நின்றளொருபுறத்தே தன் நாயகன் வில்திறன் கண்டனள் அன்றே. கைவலு நோக்கினள் அன்றே. பதினாலாயிரம் அரக்கரும் ஏககாலத்தில் போர் புரிந்தார்கள் ராமனொருவனோடு. அவர்கள் கரங்களெல்லா மறுத்தெறிந்தான். அவர்கள் சிரஸ்ஸும் மறுத்தொழித்தான். ஆகாயமெங்கும் சரமயமாயிருந்தது. யாவருந் தீர்ந்தபின் னோடியணுகிக் கட்டியணைந்தாள். நாதாவெனக் கண்ணீர் சொரிந்தாள். இத்தனை ப்ரபல வீரர் கண்டு உடலம் நடுங்கினேன். சரமாரிகண்டு குடல் கலங்கினேன். என்னுகுமோவென உயிர் உலவியது. நின்வலுக் கண்டேன். ஆற்றலுணர்ந்தேன். பெருவீரம் மெச்சினேன். போர்த்தோற்றம் பொங்கக் கண்டேன். தீயவரக்கர் நின்வலு வுணராது மாண்டனரந்தோ வென்றாள்.

41

50. ததோ ஞாதி வதம் ஶ்ருத்வா
ராவண: க்ரோத மூர்ச்சித: ॥
சஹாயம் வரயாமாஸ
மாரீசம் நாம ராக்ஷஸம் ।

ஒருவர் மிகுதியின்றி ஜனஸ்தான வரக்கர் யாவருந்
தன் சோதரரும் மாண்டனரெனக் கேட்டப்
பெருவரங்களவை பெற்றவரக்கர் கோனுஞ் சீறியெழுந்
தனன், மாரீசனெனும் மாயனைக் கண்டனன்
திரிதருவராம் நங்கானில் ராமலக்ஷ்மண ரென்பார், சீதை
யெனுங்கோல மேனியளோ டல்பமானிடராம்.
விரிகானுக்கணியாயுற்ற நங்கர தூஷண திரிசிரஸ்
ஸொடு யாவரையு மழித்தனராந், துணையாவா யென்ருன்.

ஓடினுள் லங்கை யரசனிடம் சூர்ப்பணகி. அலறி வீழ்ந்தனள். அடிபணிந்தனள். ப்ரபோ உருக்குலைந்தேன். பண்பு அழிந்தேன். நின் கீர்த்திக்கு ஹாநி ஏற்பட்டது. புகழினுக்கு அழிவு காலம் கிட்டியது. இரு சிறு மானிடர் நம் மரண்யத்திலுற்ருர். மகா உத்தம லக்ஷணங் களமைந் தவர். அரசர் குலப்பெரியோர். சுந்தரமேனியர். அற்புதகாத்ரர். ஆநந்தநேத்ரர். இருவரும் சோதரர். இணைபிரியா அன்பினர். அவர் நடுவண் ஓர் சுந்தராங்கி. கற்பே அவள் வடிவம். பிரமன் படைக்க இயலான் அச் சுந்தரியை. தானே தோன்றியவள்தான். அபூர்வ லக்ஷணங்கள். ஆநந்த விலாஸம். கண்ணென்றே போரும். கூந்தலழகே அழகு. அற்புதலாவண்யம். ஆச்சரியத் திருமுகம். இடையே காணேன். அவர்களைக் கிட்டினேன் காணுமாறு. கிடைத்தது. இப்பரிசு. நஞ்சோதரர் கரதூஷணரிடம் முறையிட்டேன். அவர் த்ரிசிரஸ்ஸோடும் பதினுன்காயிரம் ராக்ஷஸரோடும் சென்று மாண்டனர். ராமனெருவனுடை வில்லினுக்கிரையாயினர். போர்க்களத்தில் கண்டு நின்றேன். சரமாரி பொழிந்தது. ராமனை நோக்கியவா றிருந்தேன். அம்பெடுத்ததைக் காணேன். வில்வளைத்ததைக் காணேன்.

சுந்தரத் திருமுகத்தில் நவ்வினையே கண்டேன். அம்புகளி ளேட்டம் நின்றது. அரக்கர்களின் கூட்டம் ஒழிந்தது. இவனேடிவந் தேனென்றனள்.

என்றலுமே பொங்கி யெழுந்தான். நடுவே விஸ்தரிக் காதுரைத்த சீதையைக் குறிக்கொண்டான். காமப்படு குழியிவிழிந்தான். அடங்கா ஆத்திரங் கொண்டான். மாரீச னெனும் மாமனைச் சகாயத்திற்கு வேண்டினன்.

42

51. வார்ய மாண ஃ சுபஹுச ஃ
மாரீ சேந ச ராவண ஃ ‖
நவிரோ தோ பல வதா
க்ஷமோ ராவண தே நதே ।

முனைத்தசீற்றம் வீணேயெயத்தீ ராவலிபடைத்தானிடம் ராவணு, தினைத்துணையு மவ்வீரனுக் கிடருறுத்தகில்லாய் வீராநீயும் அனைத்துலகுமறியுமவ்விராமன் வில்லினுக் கோரெதிரிலையென எனைத்துணையாக்கொண்டும்பயனிலையேயானுமறிவனவன்திறன்.

ராமனுடை வில்வலி பால்யத்திலேயே கண்டனன் மாரீசன். ராவணனை வேண்டினன் அந்தப் பலவானேடு விரோதம் வேண்டாமென்று. மன்றுடினன். நல்வார்த்தை கூறினன். தன்னுடை அனுபவமெல்லாம் எடுத்துரைத் தனன். அரக்கர்குல நாசம் வேண்டாம். ராமனை எதிர்க்க வேண்டாமென விரித்துரைத்தனன்.

43

52. அநாத் ருத்ய துதத் வாக்யம்
ராவண ஃ கால சோ தித ஃ ‖
ஜ காம ஸஹ மாரீச ஃ
தஸ் யாஸ்ரம பதம் ததா ।

அரிதரிது வல்வினைப் பயனவை மாற்றலரிது, முனநாள்
செய்தவை திரண்டெழுந் துறுத்தப் புகுந்தக்கால் ;
பெரிது பெரிதவைதம் வலுவும் ; வினைவழியிழிந்த கூற்றால்,
மாரீசநற் போதந் தீயினிற்றாசாகி மறைந்திடவே,
துரிதமாயவன்துணை கொடே தண்டகவன மேகினன்,
தவநெறியர் நற்றுணையா யறம்நிறுத்தப் பாருகித்துத்
திரிதந்த விராமலக்ஷ்மண சீதை மூவருமுற்ற சாலைக்கேகி
னன்கொல், பொல்லா வரக்கர் கோனி ராவணனும்.

காமத்தால் தூண்டப்பட்டான். விதியினால் வெல்லப் பட்டான். மதியினால் விலக்கப்பட்டான். பிடிவாதத்தினால் பிடிக்கப்பட்டான். போவேன். நிச்சயமாகச் செல்வேன். நீ வருவாயா. இல்லையேல் என் கத்திக் கிரையாவாயா என்றனன். பூஜ்யன் ராமனால் எனக்கு மரணம் கிட்டட்டுமெனத் துணிந்தான் மாரீசனும். ராவணன் பின்னேகினன். வல்வினையுந் தீர்ந்ததெனநினைந்தனனே. ஒளிந்திருந்து பற்றியதே அதுவுமெனப் பதைத்தனன். இருவருமாய் ராமலக்ஷ்மண சீதை மூவருமுற்ற ஆஸ்ரமத்தருகே வந்துற்றனர்.

44

53. தேக மாயா விநா தூரம்
அப வாஹ்ய ந்ருபாத் மஜெள !
ஜஹார பார்யாம் ராமஸ்ய
க்ரத்ரம் ஹத்வா ஜடாயுஷம் !

வஞ்சனையால் மாமாயப் பிணக்கடுத்த மாரீசன்
துணைவலுவா லாண்தகைய ரிருவீரரையும்
வஞ்சநெஞ்சன்கானில் வெகுதூரங்கடத்தியபின் னாஸ்ரமந்தன்
நுழைந்து மாறுவேடமொடு

பஞ்சவடியை மெல்லியளை யெடுத்தேகிய க்ரூரனைத்
தடுத்துநின்ற ஜடாயுவெனுங் கழுகரசை
யஞ்சாது கொன்று கற்பெனும் பெருநெருப்பை
யொளித்திட்டா னிலங்கையின்கண் ணல்பமதியன்.

மாயமானாகக் கொண்டான் மாரீசனும் ஆஸ்ரமத்தின்முன் வந்து துள்ளிக்குதித்தனன். மாயமானென்றறியாத சீதை அதைப் பிடித்துத் தரவேண்டினள். ராமனும் விற்கொடு அதைத்துரத்தினன். வெகு தூரம் அழைத்துச் சென்று அவன் சரத்திற்கிரையாயினது அந்த மானும். இறக்கும் பொழுது லக்ஷ்மணனைக் கூவியது ராமன் குரலில். சீதை பயந்து லக்ஷ்மணனை ஏகச்செய்தனள். அவர்களிருவருமில்லா சமயம் பார்த்து சீதையைக் கவர்ந்தெடுத்தேகினன் ராவணனும். ஜடாயுவெனுங் கழுகரசு எதிர்க்க அதை அடித்து வீழ்த்திவிட்டேகினன்.

45

54. க்ரத்ரம் ச நிஹதம் த்ருஷ்ட்வா
ஹ்ருதாம் ஶ்ருத்வா ச மைதிலீம் ।
ராகவ: சோக சந்தப்த:
விலலாபா குலேந்த்ரிய: ।
ததஸ்தேனைவ சோகேந
க்ரத்ரம் தக்த்வா ஜடாயுஷம் ॥

கடல்நிற வண்ணனு மவனிளையோனுங் கபடநாடகமொன்
றேறிட்டதென வுணர்ந்து, கழுகரசு
கிடக்கை கண்டு மண்மகளுங் காணாது பரிதபித் திடருற்று
ளிடர்தீர்க்க வந்த புண்ணியன்
கடன் தீர்ப்பான் ராமன் தன் திருக்கரத்தாலவன்றன் னுடலைத்
தீயிலிட்டவனுக்கு நற்கதியளித்து
முடன் பிறந்தானொருவனுடன் திரிந்தனன் கொல் கானிட
மெலாந் தன்னினியளைத் தேடியவண்ணம்.

மைதிலியை அபகரிக்கப் பட்டவளாக அறிந்தார். அடிப்பட்ட கழுகையுங் கண்டார். சோகத்தால் பீடிக்கப் பட்டவரானர் ராமனும். இருவருமே சுதறினர் அலற்றினர். தனக்காக உயிர் துறந்த கழுகரசனைக் கண்டு மனந் துடித்தார். பெற்றெடுத்த பிதாவுமடையாத பாக்யந் தன்னை இவருக்கு அளித்தார். புண்ணியர் உடலினைத் தன் கரத்தால் தகனஞ்செய்தனர். பன்னாட்கள் தவமிருக்கும் யோகியர் பெறும் பதவி யிவர் பெறட்டுமென்றனர்.

46

55. மார்கமாணோ வனே சீதாம்
ராக்ஷஸம் ஸந்ததர்ஸஹ ।
கபந்தம் நாம ரூபேண
விக்ருதம் கோரதர்சனம் ॥

உளைந்தழிந்த நெஞ்சினராய் நல்சோதரரிருவரும்
வைதேஹி யெங்குறுவளோ வெங்கன முறுவளோ
விளைந்தகூற்றினு லம்மெல்லிய னுடலமும் நொந்து
நைந்தயர்ந் தழியாதோ வெனப்பதைக்க
வளைந்தபுஜ மிரண்டு தமையீர்க்கக் கண்டு விண்டனராம் கபந்தனெனுங் கோரவரக்கன்
களைந்தநல் ஞானத்தரைத் தன்வயிற்றடக்கிடுவனெனநினைந்
தல்லலுக் காட்படுத்துவானை.

இருவரும் பிறகு மைதிலியைக் காட்டிட மெல்லாந் தேடியலைந்தனர். அலைந்தபொழுது கபந்தனென்னுங் கோர வரக்கனைக் கண்டனர். சாபக்கேட்டினல் பெரிய வாய் படைத்தனன் வயிற்றிடையே. பசியால் பீடிக்கப் பட்டு இருகைகளையும் இருந்தவிடமிருந்து நீட்டுவன். பலமைல்கள் நீளமுள்ளவவை நடுவேயகப்படும் ஜெந்துக்

களை யெல்லாம் நெருக்கி குகையொத்த வாயினுள் புகவைக்கும், இப்படி யுண்டும் ஆராத பசிப்பிணி யுற்றனவன். அவன் கரங்கள் நடுவே யகப்பட்டு நெருக்குண்டு அவனைக் கிட்டினர் இருவரும்.

47

56. தம் நிஹத்ய மஹாபாஹூ:
தகாஹ ஸ்வர்க்கதஸ்சச: |
ஸ ச அஸ்ய கதயாமாஸ
ஸபரீம் தர்ம சாரிணீம் ||

57. ஸ்ரமணீம் தர்மநிபுணாம்
அபிகச்சேதி ராகவம் |

கானுலாவிக் கடுந்துயரடைந்த கபந்தனெனு மரக்க
னானிருந்தப் படாப்பாடுபட்டு மின்னுயிர் தரித்தானை
வானுலகம் செலவைப்பா னவனுயிர் செகுத்த வள்ளலை
வானுயர் வழிநின்று சபரியாஸ்ரமமே குதிரென்றான்.

அவன் ஆயுளை முடித்து அவனை ஸ்வர்க்கம் ஏகச் செய்தனர் ராமலக்ஷ்மணர்கள். பொல்லா உடலத்தானை நல்லானக்கி விட்டனர். அவனும் வானிடமேகு முனம் கொஞ்ச தூரத்தில் சபரி யெனுமுத்தமி யுற்றுளென்றனன். அவள் நம் வரவு எதிர்பார்த்திருப்பாள் அங்கு போங்களென்றனன்.

48

58. ஸோ அப்யகச்சன்மஹாதேஜா:
ஸபரீம் சத்ரு சூதந: ||
ஸபர்யா பூஜித: ஸம்யக்
ராமோ தசரதாத்மஜ: |

காணத்தான் புகுவமோ வெம்பிரானை யென்றேறு
மெனநினைந் துருகினாளும்

நாணமின்றித் தான் சுவைத்த வெச்சில் கனியவை
சேகரித்தாளும்

ஆறேனுப்பா ரிவரில்லை காணெனக் கண்டுவிண்டடி
பணிந்தாள் சோதரரை

நீரேனுக்கு நயனத்தன் நெஞ்சத் திருந்தானை
முந்துறக் கண்டனைவரோ

சபரி யென்னுந் தவவடிவள் பன்னாட்களாய் ராமனைக் காண நின்றனள். யோகுபலத்தால் ஸ்ரீராமனணுகுவனென உணர்ந்தனள். உணர்ந்ததுமே தான் சுவைத்து ருசியாயுற்ற பழங்களை அவனுக்காய் வைத்தனள். ராமலக்ஷ்மணர் சென்றனர் ஆங்கே. கண்ணுக்கினியானைக் காணத்தான் பெறுவமோ என நினைந்தாள் கண்மலர் திறந்து நோக்கினள். செங்கண்ணனை. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியேங்கி யிருந்தாள் பன்னாட்கள். எம்பிரானைக் காணுநாளென்னாளோ வென்றிருந்தாள். கண்படைத்த பயன் பெறுவமோ என ஏங்கியிருந்தாள். உடல் பெற்றபலன் காணுவமோவென மனம் புண்ணானாள். கண்ணாரக் கண்டு உளம் பொங்கினள். உவகை பூத்தனள். உடலம் பூரித்தது. தாஞ்சுவைத்த கனிவர்க்க மீந்துபசரித்தனள். தம் வரவு நல்வரவாகட்டுமென வரவேற்றனள்.

இவர் படும்பாடுணர்ந்து பம்பாநதிக் கரையே சுக்ரீவனெனும் வானரர் கோனுற்றானென வுணர்த்தினள். அவன் வேண்டிய உதவி புரிவானென வியம்பினள். உள்ளங் கனிந்துயர்பதமேறினள் தம்பணி முடிந்ததெனவே.

49

59. பம்பாதீரே ஹநுமதா
ஸங்கதோ வாநரேண ஹ ॥
ஹநுமத் வசநாச்சைவ
சுக்ரீவேண ஸமாகத: ।

நலங்கொள் ஞுத்தமி பூசனை பெற்ற பின்னர் சோதரர்
புலங்கொள் நன்னீர்ப் பரப்புடைப் பம்பாதீரமடைந்து
வலங்கொள் ஹனுமனெனும் வானரோத்தமன் கண்டு
நலங்கொள் மதியெலா முடையனிவ னெனநினைந்தார்.

உத்தமியினாஸ்ரமம் விடுத்தேகின ரிருவருமே. பம்பா தீரஞ் செலுமுனம் அணுகினன் அனுமனும். தூரத்தே மலைமுடியிலிருந்து கண்டனன் இவ்விருவரையும் சுக்ரீவன். வாலிக்குப் பயந்து ஒளித்திருந்த அவன் இவர்கள் வாலி ஏவலால் வந்தவர்களோ என மிரண்டான். தன் நல்லமைச்சன் அனுமனை முன்னனுப்பினன் இவர் நலங்கேடறிந்துவர.

வரையுச்சியிலிருந்து நோக்கியவா வந்தனன் அனுமனும். சுந்தரமேனியர்; திடகாத்ரர் அத்புதாகாரர்; ஆனந்த வடிவர்; மின்னொத்த திருமேனியர். இவர் அல்ப மானிடரல்ல, அந்தரத்தமரர்க்கு மாதிதேவரென நிச்சயித்தாராஞ்ச நேயர். கிட்டிநெருங்கியதும் இருகரமு முயரெடுத்தனர். புவிபடியப் பணிந்தனர். பன்முறை வணங்கினர். உளங்குளிர நோக்கினர். அகங் கரைந்து நைந்தனர். கைகட்டி வாய்புதைத்து உடலம் வளைத்து முன்னின்று வினவினர்.

சுந்தரத்திருவுருவால் அந்தரத் தமரரை யொப்பீர்.
மந்தஹாஸ மலர்முகத்தால் அந்த மாயபண்பினை யுணர்த்து

வீர். லாவண்ய வடிவழகால் மன்னர்மன்னர் மரபுற்றீர் போலும். தளர்நடையிட்டு வருதல் நோக்கியக்கால் காருண்யசாகர மொப்பீர். ஆழ்ந்ததிரு நோக்குக் கண்டால் ஆதரம் பெருக்கும் அருளமுதமொப்பீர். திருமேனிப் பண்பு கண்டால் கானிடைத்திரிசரும் யோகியர் நீவிரல்லீர். அந்தரத் திருந்திழிந்த கொழுஞ்சோதியோதாம். உலகெலா முயர்த்தவந்த பேரருளாளரோதாம். பல கற்ற மெய்யடியார்க்காய் அவதரித்தவரோதாம். உலகத்துறு தீமையழிக் கவிழிந்ததேவோதாம். பதுமமலர்க் கண்கள் கண்டார் நுமைத்தவிர்த்து மற்றொன்று காண்பரோ. உளங்குளிர நோக்குவது கண்டார் நுமையென்றேனும் மறப்பரோ தாம். அன்பார்ந்த சிந்தை நுந்திருமுக ஒளி யுணர்த்தும். ஆதரம் பெருக்கும் நீர்மை நுந்தூய திருமேனி விளக்கும்.

ப்ரபோ! பாக்யம் பெற்றேன். பிறவிப்பயன் பெற்றேன். இறப்பினையறப் பெயர்த்தேன். நுந்திருவடிகதி யாக்கினேன். இதோ சற்று தூரத்தில் எம்மன்னன் சுக்ரீவன் நும்வரவு நோக்கி நின்றான். வாலியெனும் குரக்கரசனிளையோனிவன். அவனால் துரத்தப்பட்டு இங்குற்றான். நுந்தரிசனம் பார்த்து நின்றான். இன்றே புனிதரானோம். கருணை புரிவீரென மன்றாடி ப்ரார்த்தித்தான்.

பூமாரி பெய்தாற்போலுளங் குளிரப் பேசிய வாற்றை கவனித்த ராமபிரான் இளையோனுக் குரைத்தனன். குரங்கினத்தனேனும் பலகற்ற மெய்யடியனிவன். மெய்ஞானப் பண்பினனிவன். தத்துவ நிலையறிந்த மாயோகியிவன். வேதவேதாந்தங்கள் கற்றுணர்ந்த புனிதனிவன். தர்க்க சாஸ்த்ர நிபுணனிவன். உள்ளன்பனிவன். மெய்யன்பனிவன். கூறும் மாற்றமெலாம் நோக்கு. முன்பின் முரணி

லாது சிறிய வார்த்தையுள் பெரியவர்த்தம் புணர்த்தியுள்ளங் கூசாது பேசுவன். பேசுந்திறமை பெற்றான். உள்ளவா உணர்த்து வாயிவனுக்கு நம் வரலாறெலாம் என்றான்.

என்றலுமே பிறந்தவாறும் வளர்ந்தவாறும் கான் புகுந்தவாறும் உரைத்தனனிளையோன். பிராட்டியைக் கவர்ந்தவாறும் உணர்த்தி வானரர்கோனைக் காணவே தாமுந் துடியோடிருப்பதாகவும் நவின்றனன்.

உடனே இருவரையுந் தன் தோள்மேலேற்றித் தாவிச் சென்றனனனுமனும். தங்கோனிடமிவர் வரலாறுரைத் திருவரையும் பணிந்து நின்றனன்.

50

60. சுக்ரீவாயச தத் சர்வம்
சம்ஸத் ராமோ மஹாபல: ॥
ஆதிதஸ் தத் யதாவ்ருத்தம்
சீதாயாஸ்ச விசேஷத: ।

அனுமன் நீர்மை தன்னாலலகிலா வாற்றலா னிராமனும்
நனிமிகு வானரர்கோன் சுக்ரீவநன் னண்பன் கண்டு
தன்வரலாறெலா மவன்செவி மடுப்பவுரைத்து மேலும்
இனியிவர் நம்மவராமெனுந் துணிவுபெற் றுகந்தார்.

சுக்ரீவனும் ராமனைப் பணிந்தனன் முறையே. சீராமரும் நடந்த சமாசாரம் யாவு முரைத்தனர். முக்கியமாய் சீதையைப் பற்றிய வெல்லாம் விவரமாயுரைத்தனர். கவனமாய்க் கேட்டனன் வானர புங்கவனும்

## 51

61. சுக்ரீவஸ் சாபி தத்சர்வம்
ஶ்ருத்வா ராமஸ்ய வாநர: ||
சகார ஸக்யம் ராமேண
ப்ரீதஸ் சைவாக்னி சாக்ஷிகம் |

மாறாக் காதலுற்றா னிவனெனக் கிதம்பயப்பானினியெனத்தகவு
பூண்ட காகுத்தன் தனக்குற்ற வெலாம்
தாராள மனமுடையனுக் கறிவித்தான்;வனமதைத்தானேற்ற
வாறும், ப்ரியப்ராதா தனைத் தொடர்ந்த வாறும்
பேராக் காதலுற்றான் தன்ப்ரியை ஜானகி கற்பினுக்கோரணி
கலமாம் மெல்லியள் தனைப்பற்றி யேகியளைப்
பாரேய பெருங்கானிடையே தனியுற்றக்கா லெவரோ
வெடுத்தேகிய துமுரைக்க விருவரு மருநட்புடையரானார்

ஸ்ரீராம சரித்திரமெல்லாங் கேட்ட சுக்ரீவனும் உளம் நைந்தான். மனம் வெதும்பினான். இங் சுந்திர புருஷர்க்கும் இவ்வவதியோ வென்றான். இவ்வற்புதாகாரனுக்கும் இவ்விடரோவென நொந்தான். இவ்வாநந்த சாகரனுக்கும் இத்தீமை யெலாமேயோ என வயிறுபிடித்தான். துணை நின்று இவனிடர் விலக்குவேனெனவு முறுதிகொண்டான். நமக்கு மொருகாலம் உதவிற்றே உதவிபுரியுமாறு என உவகை பூத்தான். அக்னி சாக்ஷியாய் இருவரும் அருநண்பரானார். ஒருவரிடர் ஒருவர் களைந்து ஒருவர் சுகமொருவருடையதாய் பாவிப்ப மென்றார்கள். மாறாக்காதலுற்றார். ஒருவரை யொருவர் கட்டியணைந்தார். உளங்களிந்தார். இணையிலா தீரரிருவரும் எதிரில்லா ஸ்நேகப்பான்மை யுற்றார். இருவரும் மனத்ருப்தியுற்றாரரோ.

52

62. ததோ வாநரரா ஜேந
வைரானு கதனம் ப்ரதி ॥
ராமாயா வேதிதம் சர்வம்
ப்ரணயாத்துக்கிதேநச ।

முற்றிலா நண்பராவோ மினிக்குறையொன் றுமிலேயெனவிரு
வீரரு மெரியழல் முனமுரைக்கக்
குற்றுயிராய்த் தனேயிருத்தி யண்ணல் வாலிசெயு மிடுக்க
ணெலா மறிவித்தனன் கொல்
பற்றலார் பற்றநின்ற பிரானிடந் தனேயளிக்கு மிக்காருண்ய
னெனுமவாவொ டுரைக்கு முன்,
னற்றது நும்மிடரென்ருனிராமன், வாலியினி யிரானென்ருன்,
வானரேறே நீயினி கோனுவா யென்ருன்.

பிறகு வானரேந்த்ரன் தான் பட்டபாடெல்லாம் விவரித் துரைத்தான் ரகுநந்தனனிடம். உள்ளக் கிடக்கை உள்ளவா உணர்த்தினன். சகோதரனிடம் தனக்கிருந்த அன்பும் ஆதரவும் மரியாதையையும் உரைத்தனன். பிறகு விதிவசத்தால் இருவருக்கும் ஏற்பட்ட விரோதத்தையுமுணர்த்தினன். தன்னேப் பிறகு அவன் எப்படியாவது கொல்ல நினைத்து எங்குகண்டாலும் பிடித்துக் கசக்கவிருப்பதையுங் கூசாது நவின்றனன். சாபக் கேட்டினுல் அவனணுகமுடியாத மலேயில் தான் காலங்கழிப்பதையுங் கண்ணீர்ப் பெருக்கி பகன்றனன்.

53

63. ப்ரதிக் ஞாதம் ச ராமேண
ததா வாலிவதம் ப்ரதி ॥

வாலி நஸ்ச பலம் தத்ர
கதயாமாஸ வாநர: |
சுக்ரீவ: ஸங்கிதஸ்சாசீத்
நித்யம் வீர்யேண ராகவே ||

மாண்டனன் வாலியென்றபோழ்தே, ப்ரியளைப் பறிகொடுத்
கல்லொத்த திண்டோளன், [தானுங்,
வேண்டியவுருக் கொள்வா, னல்லொத்த பெருவுடலின்
வீர்யமெலாங் கண்டிலனை ராமன்,
தாண்டிடுவன் சாகரமெலா மொருகணத்தே, பாய்ந்திடுவன்
வானுலகேயரைக் கணத்தே
வேண்டியே யெனைக்காக்கப் பேருப் பெருநெஞ்சுடை
யாயாயிடினு மவனுற்றலோ பெரிதென்றான்.

ராகவனும் வாலியைத் தான் வதம் செய்வதாக ப்ரதிக்ஞை பண்ணினன். சுக்ரீவனிடர் விலக்குவேனென ஆணையிட்டான். சுக்ரீவன் வாலியின் பலமெல்லாம் விவரித்துரைத்தான். மலையொத்த திண் தோளினுக் கெதிராவனோ இந்த சுகுமாரச் சிறுவனென நினைந்தான். அஸஹாய சூரனை யெதிர்க்க வல்லனோ இந்தச் சிறுவாலிபனென மயங்கினன். பலயானைகள் வலுக்கொண்ட அவ்வீரன் முன் இவ் வில்லும் அம்பும் என்ன செய்ய வல்லவையென விண்டான். ஒருமலை பெயர்ப்பான் முன்னிச்சிறுவன் நிற்க வல்லவனோ. இச் சுந்தர மேனியைக் கசக்கிப் பிழிவனே. அந்தோ என் நிமித்தம் இவ்வுதாரன் இறக்க நேரிடுமோ வெனத் துயருற்றான்.

54

64. ராகவப்ரத்யயார்த்தம் து
துந்துபே: காயமுத்தமம் |
தர்சயாமாஸ சுக்ரீவ:
மஹாபர்வத ஸங்நிபம் ||

65. உஸ்மயித்வா மஹாபாஹு:
ப்ரேக்ஷ்ய சாஸ்தி மஹாபல: |
பாதாங் குஷ்டேந சிக்ஷேப
ஸம்பூர்ணம் தசயோசநம் ||

அறிவதரியா னனைத்துலகுமுடையா னரவிந்த லோசனன்
விபவமொன்று மறியா வானரர் கோன்
சிறியமானிட வுருக்கொண்ட பேராளன் பெருமனத்தன்
மாற்றமுண்டு மனம் பொரு தானருகுற்ற
பெரியதோ ரென்புக் கூட்டினை நோக்கியக்கா லிராமனும்
நகைத்துக் காற்கட்டை விரல் நுனியால்
குறியொன்றுமிலா ததனை யிரைந்து யோசனைக் கப்பால்
விசிறினன்கொல் கோழை நெஞ்சனுக்காய்.

தன் மனதை உறுத்தும் சந்தேகமதை ஒளிக்காது உணர்த்த நினைந்தான். பாவம் சிறியதோருருக் கண்டு ஏமாந்தனன் முன நாள் மாபலியும். உள்ளுள் ஒளித்த பரந்தாமனை யுணர்ந்தாருமுளரோ காண். அவனிலை யென்றேயலவோவினை தமைப் பெருக்குவர் மாந்தர். உணர் ஞானத்தரும் எங்கோ இருப்பதாகவன்றோ நினைத்துக் கள்ள வேடம் புனைவர். நன்று கேட்டும் உணர்ந்து முற்ற மாபாக்யர்கூட நேரில் கண்கூடாகக் காணு விசேஷத்தால் உள்ளுள னெனும் ஞானத்தை யுணரும் போதே மறந்திடுவாரல்லவா.

அந்தோ இவ்வானர புங்கவன் கரந்தும் பரந்தும் உளனுய பரம்பொருளே ராமனென உணராதான். வல்லமைக்கு ஓர் அளவில்லாத் தூயோனே நம் பிராமனென அறியாதான். அரவிந்தலோசனனே அரவணைப் பள்ளி கொள்ளும் பரந்தாமன் என எண்ணுதான். சிறிய மானிட உருவே பெரியதோர் விண்ணகராளுஞ் சீராளனெனத் தேருதான். பார்படைத்துப் பாரளிக்குஞ் சீராளனும் நம் முன்னுற்றக்கால் நம்முள்ளொருவனென நினைக்கு மியல்பென்னே.

இம்மாயமும் அவன் விசிறிய வலையன்றே. முனநாள் பெருவாலியால் கொல்லப்பட்ட துந்துபியின் எலும்புக் கூடு அங்குற்றது. அது ஒரு பெருமலை யொத்தது. அதைநோக்கினன் சுக்ரீவனும் எம்பெருமானுக்கு உணர்த்துமாறு. உள்ளக் கிடக்கை உள்ளவா உணர்ந்த ராமன் தன் கால் கட்டை விரல் நுனியாலெற்றினன் அக் கூட்டினை. அதுவும் ஈரைந்து யோசனைக் கப்பால் சென்று வீழ்ந்தது.

54

66. பிபேத ச புனஃ சாலான்
சப்தைகேந மஹேஷுணா ।
கிரிம் ரஸாதலம் சைவ
ஜநயன் ப்ரத்யயம் ததா ॥

வானரோத்தமன் சூரியபுத்திரன் சிறுமுகத்தே
சிறுநவ்வுங் காணுகிராகவனும்
வானளாவி முன்னிருந்த வேழுசால வ்ருக்ஷவகை
தமைக் குறிகொண்டுதன் கைவில்லிடைத்

தானொரு சரமுமிழ வதுவுமவ் வேழு மூடுபுக்கு
வெளியேறி கிரியொன்றினை யூடுருவி
வானவருந் திகைத்து நிற்பரஸாதலமும் பிளந்ததா
மரோ வானரர்கோன் பூரிக்க.

சுக்ரீவன் முகத்தே சிறுநவ்வங் காணவில்லை ரகுநாதன். உயிருடனுற்றக்கால் மாம்ச புஷ்டியுடன் ரெத்தந்தோய்ந் திருந்த சரீரமது. வலுவெல்லாங் கொண்டது. இப்பொழுது காய்ந்துலர்ந்த என்புக்கூடென நினைந்தான். அதை உணர்ந்தான் உணர்முழுநலத்தானும். தன்கைவில் லினின்று ஒரு சரம் உதிர்த்தனன் கோணலாயிருந்த ஏழு சாலவ்ருக்ஷங்களையும் பிளந்து பெருமலையொன்றையும் கீழுலகினையும் ஊடுருவிச் சென்றது அது.

சுக்ரீவன் கண்டு விண்டனன். கைவலுக்கண்டனன். வில்திறங்கண்டனன். சரமதைப்புகழ்ந்தனன். ஒரு வில்லால் உலகத்துறுமிடரெல்லாம் விலக்குவனிவனென நினைந்தனன். நமக்கினி நமபயமிலையென நின்றனன். உவகை பூத்தனன். உள்ளம் பூரித்தனன். நல்துணைவனிவனே. நல்தீரனிவனே. சுத்தவீரனிவனே. அஸஹாய சூரனிவனே. அரும்பெருஞ் சோதியிவனே. அருள்பெருஞ் சோதி ஒருருவாய் முளைத்தது. முளைத்து எந்தனுக்காய் உற்றது. எனை உற்றவிடத்தே அணுகிப் பேணியது. என் பாக்கியமே பாக்கியம். வினைத்திரள் இன்றோடு மாய்ந்தது. எம்பிரானுக்கு என்னிழைத்து என் ஆற்றுமைதோற்றுவிப்பனெனக்கரைந்தான்.

56

67. ததஃ ப்ரீதமனஸ்தேந
விஸ்வஸ்தஃ ஸ மஹாகபிஃ ।
கிஷ்கிந்தாம் ராமஸஹிதஃ
ஜகாம சகுஹாம் ததா ॥

இணையிலா தீரனேயிவன், சளையிலா காளையேயிவ
னெதிர்க்கலுமாகா வாற்றலானேயிவன்,
துணையொன்றிலா தவனியிலுறு மிடரெலாங்களைய
வல்லானிவன், எனையளிக்குநல்
துணைவனிவனென வுளம்பூரித்த வானரபுங்கவன்
சுக்ரீவனும் கிஷ்கிந்தை நந்
துணைகொ டேகுவனினி, யெங்குஞ் செலவல்ல
நஞ்சர வலுவொன்றே போதுமென நடந்தான்.

ப்ரபோ! அல்பமதியன் அபசாரம் பலபடைத்தேன். அனாதரக்ஷகா! நின்னாற்றல் அறியாது அலமந்தேன். அக்ஞான அந்தகாரத்தில் ஆழ்ந்து அயர்ந்தேன். தத்வநிலை யறியாது தத்தளித்தேன். உண்மை உரையாமோ எனை யளித்தலுமென விண்டு நிற்றேன். வினைப்பெருக்கில் ஆழ்ந்தயான் மதியிழந்தேன். துன்ப ஆற்றினில் தாழ்ந்த யான் இன்ப உயர்த்தியை உணரும் பண்பிழந்தேன். மெய்யன்பினைப் பொய்யனேன் மெய்ப்பிக்கக்கருதினேன். காருண்யா! கமலக்கண்ணா! நின் திருப்பாத கமலம் பணிந் துயர்வேன். கோலமாமணி வண்ணா! நின் தூயநோக் கொன்றேபோதும் இவ்வுலகெலாமளித்துதவ. மாயவரக்கர் மாமாய மென்னாகும் நின் தூய சரம்பிரிந்தால். பெரு மனத்தோய்! இத்திமனத்தினனைப் பொறுத்தருள்வீர். இதோ வாலியிருக்குமிடம் செல்வோமெனக்கிளம்பினான். நீலமாமுகில் வண்ணன் முன்னேகினன். அவனுக் கோர ணிகலனாம் பின்னவன் பின்னேகினன். வெற்றி யெனும் பிருது இவ்விருவர் முன்னேகிற்று. அதன் முனமேகினன் சுக்ரீவன் கிஷ்கிந்தைக்கே.

57

68. ததோ அகர்ஜத்தரிவர:
சுக்ரீவோ ஹேமபிங்கள:
தேன நாதேன மஹதா
நிர் ஜகாம ஹரீஸ்வர: ||

அஞ்சன மாமணி வண்ணன்பின் னேகப் பொன்னுருக்கி
வார்த்திட்ட நன்மேனியனவனணைந்தேக
வெஞ்சின வேழம் மதங்கொண்டு திரிதருமாபோ லாதவன்
புத்ரன் கிஷ்கிந்தைக்கேகிக் கூவினன்.
நஞ்சுடைத் திவர்வாக்கு மின்றெனவும் பேராளன்
துணைநின்றன னின்றெனவு மறியாதான் வாலியு
மஞ்சினறப் புள்ளே போலலற்றி யெழுந்து முன்வந்து
நின்றனன் தன்னிளையானொடு பொருதற்காய்.

அங்கேவாலியுற்ற குகையை யணுகினன். விண்ணும் மண்ணும் எதிரொலிபரப்பக் கூவினன். வாலியைப் போரினுக்கழைத்தனன். அட்டஹாசமுள்ளளவுஞ் செய்தனன். தோள் தட்டினன். தாவிக்குதித்தனன். வாலினையுதறினன். உயரெடுத்ததனைப் புவியிலறைந்தனன் அதனைச்சற்றே கடித்தனன். இங்குமங்கும் நோக்கினன். உறுமியவா நின்றனன். வாலியும் வெளிக்கிளம்பினன் யுத்த சன்னத்தனாய். பாவம் யாதொன்றும் உணராதான். வினைவலுவுந் தூண்டியதே.

58

69. அனுமான்ய ததா தாராம்
சுக்ரீவேண ஸமாகத: |
நிஜகான ச தத்ரைநம்
சரேணை கேந ராகவ: ||

வென்றிசேர் திண்டிறல் மேனிபடைத்தானு மேகுமுனங்
கற்பினியள் தாரைதாங் குறிக்கொண்டாள்
நன்றியொன்று திண்ணமின்றி சூரிய சுதன் தானே
வெளிவந்து கூவும் பயனிலே காணெனத் தடுத்தாள்.
ஒன்றிய வல்வினையான் காலபாசமேற்று நிற்றுன் வாலி
யும் பொருட் படுத்தா தேகிக்கை கலந்தான்
நன்றி யொன்றே நோக்காயுற்ற வீரராகவனு மொரு
கணையால் வானுலகே செலுத்தின னன்னுனேயே.

மஹாபதிவ்ரதா சிரோமணி வாலிபத்னி தாரை யென்பாள். சுக்ரீவன் விண்ணிடியக் கூவுவது கேட்டாள். அவன் அட்டஹாஸ முணர்ந்தாள். வீரகர்ச்சனே செவிமடுத்தாள். உறுமலதுவுங் கேட்டயர்ந்தனள். ஏதோ வலுவிலலாது இத் தீவ்ரமதிபெருனிவன். இவ்வளவு உத்ஸாஹத்தொடு போரினுக்கழையான் பக்கபல மில்லாமல். இதுவரையிலோடி ஒளித்தவன் இப்பொழுது தானுகவந்த மர்மம் ஏதோ. ப்ராணபதே இத்தருணம் ஏகவேண்டாம் என்று தடுத்தாள். விதிவலு பொல்லாதலவா. மதியினேக் கெடுத்தது. வாலியினேத் தூண்டியது போரினுக்கே. விரைந்து சென்றனன். பொருது நிற்றனன் சுக்ரீவனெடு. ராமனுடைய சரமொன்றினுல் உயிர் துறந்தான் வல்லாளன் வாலியும்.

59

70. ததஃ சுக்ரீவ வசநாத்
ஹத்வா வாலிநம் ஆஹவே ।
சுக்ரீவமேவ தத் ராஜ்யே
ராகவஃ ப்ரத்ய பாதயத் ॥

வானரோத்தம னுரைகொடு வலிமையால் வாலியை
நலியச்செய்த ராகவனும் பின்னமின்றி.
வானரர்கோ னிவனேயாகுக வினியெனக் கருணை கூர்ந்து
மல்லிகை, ரோஜா, பதுமமலர்
வானரகணங் கொணர்ந்து நிறைப்பக் கமலத்தனி
மலர்ப் பீடத்தே வெண்குடை நிழலில்
வானவரும் பொங்கி மகிழக் கானுலாவும் மயிலினம்
நின்றாட முடிசூட்டினன் கொல்.

பல நாட்களாய் ராஜ்யம் விடுத்து போகம் விடுத்துத் தவித்த மன்னன் பொருள் பெற்றான். போகம்படைத்தான். நன்மனையடைந்தான். மனைவியரைத் திரும்பியும் பெற்றான். ராகவன் அவனை கிஷ்கிந்தைக்கு அரசனுக்கி முடி சூட்டினன். நிலையாப் பதவி பெற்றான். பேராநந்தம் படைத்தான். சுக மேவீற்றிருந்தனன் சில நாள்கள்.

60

71. ஸ ச சர்வான் சமாநீய
வாநரான் வாநரர்ஷப: ।
திச: ப்ரஸ்தாபயாமாஸ
தித்ருக்ஷுர் ஜநகாத்மஜாம் ॥

இடர்களைந்தா னிடரொழிப்பான் வானரர் கோன்
படருலகி லெவ்வணுற்றாள்கொலோ மைவண்ணன்
தடங்கண் ணாளுமெனக் கண்டுரைமின் னெனுமானை
கொடுநாற்றிசைக்கும் பல்லாயிரவ ரனுப்பினன்.

வர்ஷாகாலம் முடியவே சுக்ரீவனும் பல்கோடி வானரரைத் திரட்டினன். சீராமன் அருந்தேவி யுற்றவிடங் கண்டு வருவீரென நாற்புறமு மனுப்பினன் அவர்களை. திரள்

திராய் அவர்கள் எண்டிக்கும் ஏகினர். விண்ணிடமும் மண்ணிடமெங்கு மலைந்தனர். ஓடினர். தாவினர். குதித்த னர். பறந்தனர். மலையிடமேறினர். குகையுள் புகுந்தனர். நதியுள் குதித்தனர் மாடமாளிகை தேடினர். கூடகோபுர மிடித்தனர். நாடுநகரெலாம் நாடினர். எங்கெங்கு மோடி யுஞ் சீதை காணுது தவித்தனர்.

61

72. ததோ க்ரத்ரஸ்ய வசனத்
ஸம்பாதேர் ஹனுமான் பலீ ।
சதயோசன விஸ்தீர்ணம்
புப்லுவே லவணார்ணவம் ॥

தேனமர் பூம்பொழில் சூழ் கானக மெல்லாந்தேடிய
வானரபுங்கவ னனுமனுஞ் சம்பாதியெனுங் கழுகு
வானளாவிப் பறந்துகண் டுரைத்த மாற்றமுண்டு
வானிடத்தேகி சதயோசனைக் கடல் கடந்தனனரோ

இப்படி தேடச் சென்றவர்களுள் தென் திசைக்கேகும் பாக்யம் பெற்றனன் அனுமனும். தேடிச் செல்கையில் சம் பாதி யெனுங் கழுகரசனைக் கண்டனர். அவர் உரைத்தனர் சீதை ராவணனல் அபகரிக்கப் பட்டு லங்கையுள் சிறை யுற்றன ளென்று. உடனே அனுமனும் நூறு யோசனை அகலமுள்ள கடலினைக் கடந்து லங்கையுள் புகுந்தனன். லங்கை மாநகரெல்லாந் தேடினன்.

62

73. தத்ர லங்காம் சமாசாத்ய
புரீம் ராவண பாலிதாம் ।
ததர்ச சீதாம் த்யாயந்தீம்
அசோக வனிகாம் கதாம் ॥

கடல்கடந்தானு மிலங்கைமா நகர்புக்காங் கசோக
வனந்தன்னில் வல்லரக்கர் பலர்
நடுவண் சிறையிருந்த வேற்றத்தாள், கற்பினுக்
கோரணிகலனும் சீதை, யுளமகிழ்ந்து நைந்
துடலஞ் சிதைந்து, கண்ணுள்ளும் வாயுள்ளுந் தூய
நெஞ்சுள்ளு மெம்பிரானைக் கோயில் கொண்டு
சுடர்சோதி வெள்ளத் தனியுருவாய் விளங்குந் தேசினைக்
கண்டு விண்டா னனுமனெனுந் தூயோனும்.

இரவெலாஞ் சுற்றினன் நகரெங்கும். எங்கும் கண்டி லன் கமலலோசனியை. ராமா என் செய்வதென வேடினன். உடனே நினைந்தனன் சம்பாதியுரைதனை. அசோக வனந் தனிலுற்றனளென்றனனேயென அங்கு விரைந்தனன். அங்கோர் அசோகமரத்தடியே கண்டனன் கற்பினுக் கணிகலனை.

மின்னற் கொடிபோன்று வனமெலா மொளிபரப்பிய உயர் தேசினைக் கண்டனன். சாமுத்ரிகாலக்ஷணங்கள் ஒருங்கிழைத்தமைத்த சுந்தரியைக் கண்டனன். கமலலோசனியைக் கண்டனன். விசாலாக்ஷியைக் கண்டனன். மண்ணிடத்தே படிந்ததோர் கொழுஞ் சோதியினைக் கண்டனன். பார்படைத்த பிரமன் படைப்புக்கு மீறியளைக் கண்டனன்.

கண்டதுமே மாணிக்கமணி யுருவினுக்காயமைந்ததோர் நந்தாவிளக்கிதுவே யெனத்தேர்ந்தனன். கோலமா மணிவண்ணனுக்கிசைந்த கற்பகத்திரள் நலமிவளேயென நினைந்தனன். காரார்மேகவண்ணனுக்கேற்ற கோமளமேனி யளிவளேயெனத் தீர்மானித்தனன். சர்வலோக சுந்தரனுக் கமைந்த சர்வாவயவசம்பன்னையிவளேயென வுறுதி கொண்

டனன் கண்ணாரக் கண்டுருகினன். கைகளாரத் தொழுதழு தனன். கண்டேனென் னெஞ்சுங் கண்ணிணையுங் களிக்கு மாறெனத் துள்ளினன்.

துள்ளி நோக்கியக்கால் புழுதியடைந்த பொன்மேனி. வாடிவதங்கிய திருமுகம். அழுக்கடைந்த ஆடை. ஒற்றைப் பின்னலொடு மரத்தடியே புவியிடையிருந்தனள். கண்ண நீர்ப்பெருக்கால் புவியெல்லாஞ் சேராக்கினள் பேராளன் ராமன் பேரோதுவள். நீர்மல்கு கண்ணினளாய்ப்பங்கயக் கண்ணாவெனவலற்றுவள். அஞ்சன வண்ணாவெனப்பிதற் றுவள். பவளச்செவ்வாயா வெனப்புலம்புவள். பக்கம் நோக்குவள். நின்றலற்றுவள். கரைந்தேங்குவள். விம்மிப் பொருமுவள். நீக்கமில்லாக் கண்ணநீரால் ஆடையெல் லாம் நனைத்திடுவள். இப்படி சோதி வெள்ளத்தினுள்ளே எழுந்ததோருருவனைய சீதைதன்னாயகனையே நினைந்தலமந் தாளைக் கண்டனனனுமனும்.

63

74. நிவேதயித்வா அபிக்ஞாநம்
ப்ரவ்ருத்திம் சநிவேத்யச ।
ஸமாஸ்வாஸ்ய சவைதேஹீம்
மர்தயாமாஸ தோரணம் ॥

உள்ளத்தினுள்ளே மிளிருஞ் சோதிவெள்ளந் தெறிக்குந்
திருமுகம் நோக்கிக் களிகூர்ந்து
உள்ளிச்சுவைத் தூறுந்தேனைப் பருகி யவாவுற்ற
னுங்கிய கண்மணிக்குக் கணையாழி யீந்து

துள்ளிப் பூரித்தவள் விலாப்புடைத் தாழ்ந்து நோக்குங்
கருணை கடாக்ஷவெள்ளப் பாத்ரனுகி
துள்ளிச் சீறியெழுந் றனுமனு மாங்குற்ற வரக்கர்கோன்
தோரண வாயிலைச் சிதைத்திட்டான்.

உள்ளமுமுடலமு முருகி னைந்தனள். தூய நாயகன் திரு நாமமே உருப்பொலிந்த நாவினளாய்ப் பிதற்றினள். உள்ளும் புறம்புமொருபடித்தாயலற்றினள். ஊனும் உடலும் என்பும் உருகி நிற்றனள். கண்களிமை பொருந்தா வீக்கமதால், துன்பக் கடல் புகுந்தனள். அன்புடையாரைப் பிரிந்த நோயால் தவித்துருகினள். கண்டுவிண்டனனனுமனும்.

செந்தாமரைக் கண்ணனையே உண்ணுமூணும் பருகு நீரும் மற்றெல்லாமு மாக்கொண்டாள் இப்புண்யவதியென வுள்ளந்தேறினுன். மெள்ளத் தானணுகினன். உள்ளந் தேறத்தான் சீராமதூதனென் றுணர்த்தினன். தான் மைதிலியைத் தேடியே வந்ததாயுணர்த்தினன். எம்பெருமான் உள்ளங் குளிரவளித்த திருவாழியை யீந்தனன்.

பெற்றதுமே பன்னுட்களாய் நாதனைக் காணுத விடாய் தீரவதனைக் கட்டியணைந்தனள். கண்ணநீர்ப் பெருக்கினுலபிஷேகித்தனள். உள்ளங்குளிரப் பருகி நோக்கினள். ஆனந்த பரவசையாயினள். நாதாயிந்நாட்களாயினவோ நின் திருவாணை காணவென விம்மிப் பொருமினள். காணத் தான் பெறுவமோ வென்றிருந்தாளுங் காணுதது கண்டது போலுள்ளம் பொங்கினள். பெருமூச்செறிந்தனள். நாதன் கரகமலம் நினைந்தனள். திருத்தோளினை நினைந்தனள். திருமார்பிடத்தை நினைந்தனள். சுந்தரத் திருமுகந்தனை

நினைந்தனள். உள்ளங் குளிர நோக்குங் கருணைவள்ளலை நினைந்தனள். உள்ளமுருக்கியணையு மிருகரங்களையும் நினைந் தனள். முன்னின்றுதவுந் திருவடியினை நினைந்தனள். நாதனற்றார்க்கோர் நல்லரணாய் நிற்கும் திருக்குணகணங் களை நினைந்தனள். திக்கற்றார்க்கு நற்கதியாகும் தம்பிரானை நினைந்தனள். நினைக்க நினைக்க ஆராத் துயருற்றுப் பிரிவு பொறாது துக்கசாகரத்திலாழ்ந்தனள். அந்தோ என் னுதனை யென்று கொலோ கண்குளிரக் காணுவனென விம்மினள். கண்ணாரக் காணும் பாக்யந்தான் பெறுவனோ எனப் பொருமினள். கடலனையக்கண்ணீர் பெருக்கினள். அலைத்திரள் குமுறுமாபோல் நெஞ்சந்தேர்ந்த விடர்தாளா தயர்ந்தனள். சற்றே ஓய்ந்தனள். நாதா ஏனோ இப்பராமுக மெனப் பிதற்றினள். இராப்பகல் நீ துஞ்சிலும் யான் துஞ்சேன். ஆராக் காதல் நோய் என்னுவியுள்ளுலர்த்தி யுறுத்தும். ஆழியே எம்மாற்றாமை நீயேனுமுரைத் திலையோ என்னாராவமுதனுக்கு. அருளாலளிக்கும் மாமாயன் கருணைக் கடலும் வற்றியதோ சொல்லாழியென் பாள் காக்குமியல்பினனுங் தன்னாக்கை மறந்தனனோ. உள்ளமுணருமவன் என்னுள்ளமுலர்த்துவனோ. அறியாக் காலத்தே என்னை யடிமைக் கண்ணன்பு செய்வித்தான் மாமாயன். இராப்பகல் வாய்விட்டலற்றுமெனை மறந்த னனோ இலையேல் துறக்க நினைந்தனனோ தூமணிவண்ணன். அவனைக் காணுமோராசையுள் நைகின்றேனைக் காணவாராய் நீயெனக் கூறுவனோ. அப்பொழுதைக் கப்பொழுதென்னா ராவமுதமாய்த் திகழ்ந்தானும் காணலுமாகானோ. என் னுள் புகுந்திருந்து என்னைத் தனக்காக்கிய வள்ளலுமெனை மறப்பதுமேயோ. எல்லாவுலகு மளிக்கும் ஆதிமூர்த்தி யென்றால் ஓரளவாகுமோ எம் வள்ளலுக்கே.

வானரபுங்கவா! நின் பேரே சொல்லியலற்றும். நீ நின்ற திசையே கூப்பும்; பித்தம் பிடித்தாரைப்போல் பிதற்றும். நினைக் காணுமோராசையினுல் உயிர்விரும்பும் இனித் தாளாதவள் மேனி. தீராதவள் சிந்தை நோய். கூவிப் பணிகொள்வாய் வந்தந்தோவென வுரைப்பீரோ வென மன்றாடினுள்.

o உளம் நொந்து நைந்தனுங்கியவனுமனுந்தளர்ந்தனன். அயர்ந்தனன். துயர் தாளாது உள்ளும் உடலும் பதறினன். துடித்தனன். தவித்தனன். உருகினன். வியர்த்தனன். என் செய்வதெனத் தோற்றாதானுயினன். ப்ரபோ! ராமச்சந்த்ரா ஈதென்ன மாமாயமென வலற்றினன். செந்தாமரைக்கண்ணினுனை, செம்பவள வாயினுனை, மாணிக்க மரகத மேனியனை, தஞ்சமாவார்தம் நெஞ்சங் கோவில் கொள்ளுமப்பனை, ஞாலமாளும் பிரபுவினைக் காணுநாளணுகியது தாயே துயருறுதீரெனத் தேற்றினன். பொன்னடி பணிந்தனன். புவியெல்லாஞ் சேறுக்கினன் கண்ணீரால். கண்களால் காணவருங்கொல்லென்றனன். திண்கொள்ளரக்கர் தேய்வரென்றனன். ஆவியேயமுதேயெனக் கூவும் நும் நெஞ்சங்குளிரத் தாவியணைக்குமென்றனன். எல்லையில் குணத்தன் தொல்லையில் வந்தணுகுமெனுமாணை யிட்டனனரோ.

o பின்னரிவ் வரக்கர்கோனைக் காணுவம். கண்டுரையாடுவம். விண்டுரைத்திடுவம், சிராமன் சீற்றத்தினெல்லையிலையெனவே. வீரத்தினளவு மில்லையெனவே. ஆற்றலின் தோற்றங்கூட இல்லையெனவே. ஒத்தார் மிக்காரிலையாய மாமாயனெனவே. செப்புவன். அவன் மதிதிருத்துவமென நினைந்தனன். அதற்கோர் வ்யாஜமாய்த் துள்ளித் தாவினன். ஆங்குற்றதோர் தோரணவாயிலைச் சின்னபின்னமாக்கினன்.

64

75. பஞ்ச சேனுக்ரகான் ஹத்வா
சப்த மந்த்ரி சுதாநபி ।
சூரம க்ஷம் ச நிஷ்பிஷ்ய
க்ரஹணம் சமுபாகமத் ॥

ஈரிரண்டோ டொன்றுசேர் சேனுநாயகர் பிசைந்து
ஈரிரண்டொ டொரு மூன்றமைச்ச புத்ரர் கொன்று
சீறியெழுந்தவரக்க னக்ஷகுமரனைப் பிழிந்து
பாரிலொரு குரக்கின மிதுவெனப் பிடியுண்டனன்.

அனுமன் செயல் கண்டாரோடினர். அரக்கர்கோனுக் குரைத்தனர். குரங்கினைப் பிடித்துவர ஐந்து சேனுபதி களையனுப்பினன். அவர்களைப் பொடி செய்தனர் ஆஞ்ச னேயர். ஏழு மந்த்ரி குமரர்களை யனுப்பினுன். அவர்களை யமபுரிக்கனுப்பினுர் அனுமார். தன்னுடைய அக்ஷகுமரனை அனுப்பினுன். அவ்வீரனையும் பிழிந்திட்டார் வானரபுங் கவர். பிறகு இந்திரஜித்தின் ப்ரும்மாஸ்த்ரத்தால் கட் டுண்டார்.

65

76. அஸ்த்ரேணுள் முக்தமாத் மாநம்
ஞாத்வா னபததாமஹாத்வராத் ।
மர்ஷயன் ராக்ஷஸான் வீர:
யந்த்ரிணஸ்தான் யத்ருச்சயா ॥

வலங்கொண்ட ப்ரும்மாஸ்த்ரமதால் கட்டுண்ணப் பண்ணிய
வாற்றல்மிக்கானை யரக்கரும்
நலங்கொள்ளுமிது வெனவறியாது கயிறுகளாலிறுக்கச்
சரவணு விலகக் காலின் மைந்தன்

வலங்கொண்டு வல்லரக்கர் குழாம் புடைத்துப்
 பொடியாக்கினன் கொல் லிலங்கை மாநகர்
வலம் வந்தாங்காங் குற்றூரெல் லோரையு மொருமிக்க
 வடித்தனன் கடித்தன னிடித்தனன்.

அஸ்த்ரமதால் கட்டுண்டானைக் கயிற்றினுல் வரிந்தார்கள் அரக்கர்கள் அக்ஞானத்தினுல். அஸ்த்ரபந்தம் விடுபட்டது. அரக்கர்கோனுணையினுல் அனுமன் வாலில் துணி சுற்றிப் பற்றவிட்டார்கள். நகரெங்கும் இழுத்துச் சென்றூர்கள். கொஞ்ச தூரம் அவர்களோடு சென்று அவர்களை அடித்துத் துரத்தினன். வாலினுற்ற தீயோடு மாளிகைதோறுந் தாவிப் பற்றவைத்தனன். சீதையுற்ற விடந்தவிர்த்து நகரெங்கும் பற்றியெரிந்தது.

66

77. ததோ தக்த்வா புரீம்லங்காம்
 ருதே சீதாஞ்சமைதிலீம் ।
 ராமாய ப்ரியமாக்யாதும்
 புந ராயான் மஹாகபி : ।

கோடிய மனத்தரா யினத்தொழில்புரிந்து திரிதந் தென்னூ
 மெவ்வெவர்க்கு மிடருறுத்தி
ஓடியு முழன்று முயிர்களை பலகொன்று முணர்வேது
 மில்லாத் தீயவரக்கர் நன்னகர் சுற்றி
நாடியிங்கு மங்குமெங்கும் பிராட்டியுறு மிடந்தவிர்த்து
 நகரமெலாமுந் தீக்கிரையாக்கி
ஓடி விரைந்தேகிக் கடல்கடந்திராகவன் திருவடியினைக்
 கண்டடிதாழ்ந்து கண்டேனென்றனன்.

அரக்கர்க ளலேகுலேயச் செய்தனன். நல்லான் விபீ ஷணக்ருகம் விடுத்தனன் தீக்கிரையாக்காது. பிராட்டியிடம் விடைபெற்றுத் திரும்பினன். கடலினைக் கடந்தனன். எம்பிரானைக் கண்டனன். அவன் பொன்னடி பணிந்தனன். கண்டனன் கமலலோசனியை யென்றனன்.

67

78\. ஸோ அபிகம்ய மஹாத்மாநம்
க்ருத்வா ராமம் ப்ரதக்ஷிணம் |
ந்யவேதயத் அமேயாத்மா
த்ருஷ்ட்வா ஸீதேதி தத்வத: ||

கண்டேன் கமலலோசனியைக் கண்ணுக் கணிகலனைக்
கற்பினுக்கோர் திலகமதை யிலங்கை மாநகரினுள்;
கொண்டல்வண்ணா! நின்னினியை, யழுக்கடைந்த வாடை
யொடினைத்தமேனியொடு கண்ணீர் பனிமல்க,
வெண்டிசையு மொலிபரப்பி நின்னுருப்பொலிந்த
நாவினளாய், காகுத்தா! அசோகமரத்தடியே பல
திண்டிற லாக்கியர்நடுவண் சிறையுற்றனள்
கோமளாங்கி, நெஞ்சிடிந்து நொந்து நைந்தனளாய்.

ப்ரபோவென மேனுமடி தாழ்ந்தனன். வலம் வந்தனன். கரங்குவித்தனன். உடலொடுக்கினன். திருக்கண்டேன். பொன்மேனி கண்டேன். நின்னுருப்பொலிந்த திருமேனி கண்டேன். எழில்பரப்புஞ்சோதி கண்டேன். ஏழ் பிறப்பும் யானறுத்தேன். கற்பினுக்கணிகலனைக் கண்டேன். கமலவதனத்தள் கண்டேன். பேராளா நின் பேரோதி யுருகுமணியினைக் கண்டேன். புவிபடிந்த பொன்மேனி யளைக் கண்டேன். கார்மேனி யருளாளா நின்னினிய கண்

மணி கண்டேன். கண்ணுக்கினியளைக் கண்டேன். விண்ணிடியக் கதறுமவளைக் கண்டேன். மண்குழியப் பெருமூச்செறிவாளைக் கண்டேன். மணிவண்ணா நின் கண்ணினொளியினைக் கண்டேன். கண்ண நீர்க்குமிழியதுங் கண்டேன். அருளாளா நின் அருள்பெருக்கின் னமுதினை யான் கண்டேன்; நின்னையே நினைந்துருகுவாளைக் கண்டேன். நின்னுமமே பிதற்றுவாளைக் கண்டேன். நின்னருளே பேணுவாளைக் கண்டேன். நின்னுருவங் கோயில் கொண்டாளைக் கண்டேன். நீலமாமுகில் வண்ணா ஞாலமெல்லாங் கேட்கவழுதலற்றுவள் நின்திருநாம மிரண்டெழுத்தும். கோலமாமணி வண்ணனைக் காணு நாளென்னாளோவெனப் புலம்பிக் கதறுவள். காகுத்தா கமலக்கண்ணாவெனப் பதறுவள். சுற்றும் நோக்குவள். கார்மேனியருளாளாவெனத் துடிப்பள். உற்றுநோக்கும். ஏதேனும் பற்றிவாடும். உள்ளந் துள்ளியெழும். உடலம் நடுக்குறும், நாக்குறழும். நெருப்பிடை நிற்குமாபோல் உடலம் பதைக்கும். நெஞ்சினுல் நினைக்க கில்லேன். வாயினுல் உரைக்க கில்லேன். நின் ப்ரியை படுதுயரெல்லாம். வாழ்த்தியவாயளாய் நீ நின்ற திசை கூப்பும். நினைக் காணுமோ ராசையினுலுயிர் பேணினேனெனக் கதறும். என்சொல்லியென். கடல்வண்ணா நின்னினிமை நினக்காயேயுறும். வேறு யான் உரைக்கவல்லேனல்லேனெனக் கரைந்தனன் அநுமனும்.

68

79. ததஃ சுக்ரீவ ஸஹிதஃ
கத்வா தீரம் மஹோததேஃ ।
சமுத்ரம் க்ஷோபயாமாஸ
சரைராதித்ய ஸந்நிபைஃ ॥

என்றதுமே பொங்கியெழுந்தன னரவிந்தலோசனனும்
நன்றிசேர் வானரர்கோனுடன் சாகரஞ்சென்றனன்
ஒன்றியுய ரெழுந்தவலைத்திரள் நோக்கிவெகுண்டு
நன்று வளைத்தனன் வில்லதனை நீரினையுலர்த்தவே.

தன்னையே நினைந்து தவித்துள்ளெனக் கேட்டதும் சீறியெழுந்தனன் சீராமன். சுக்ரீவ நன் மன்னனுடன் கடற் கரையேகினன். கொந்தளித்தெழு மலைத்திரளினைக் கலக்க நினைந்து வில்லினை வளைத்தனன்.

69

80. தர்சயாமாச ச ஆத்மாநம்
சமுத்ரః சரிதாம் பதிః ।
சமுத்ர வசனச்சைவ
நளம் சேதும் அகாரயத் ॥

கலங்கிய மாமனத்தினனைக் கடலரசன் தானெழுந்து
மலங்கி யலமந்திராமன்முன் னேகியென் செய்வனென்
நலங் கொண்டென மன்றாடிநிற்ப, ரகுகுலோத்தமனும்
வலங்கொண்டநள றுதவிகொடணை கட்டினன்கடல்மீதே.

கடல் வண்ணனுடை கோபத்திற்குப் பயந்து கடல ரசன் நேரே வந்தனன். பெரு மலையும் மிதக்க வரம் பெற்ற னன் நளனெனும் வானரன் எடுத்தெறிந்தாலென உணர்த் தினன். அவன் துணைகொடு கடலினுக்கணைக்கட்டு முபாயமு முரைத்தனன். ராகவனும் அவ்வாறே அணை கட்டுவித்தனன் வானர சைன்யம் கடக்க.

70

81. ததேந கத்வா புரீம் லங்காம்
ஹத்வா ராவணம் ஆஹவே ।
ராம: சீதாம் அனுப்ராப்ய
பராம் வ்ரீடாம் உபாகமத் ॥

அரக்கர்குலம் வேரறுப்பா னிலங்கைமா நகரினுக்கேகி
குரக்குப்படை கொடாங்குற் றிராவணனையமரில்கொன்று
இரக்கமொன் றில்லான் நகருள்பல்காலஞ் சிறைகிடந்த
சுருக்கிய வுடலத்தாளைக் கண்டது மொதுங்கிநிற்றான்.

வானரகணமொடு கடல்கடந்து இலங்கை சென்றனன் ராமன். அங்கு அரக்கர் குலங்களைந்து அவர் கோனையுங் கொன்றனன். இளையான் விபீஷணனுக்கு முடியுஞ் சூட்டினன். பிறகு வைதேஹி வரவே அவளைக்கண்டு கொஞ்சம் லஜ்ஜையுற்றனன்.

71

82. தாமுவாச ததோ ராம:
பருஷம் ஜநசம் ஸதி ।
அம்ருஷ்யமாணா சா சீதா
விவேச ஜ்வலநம் சதி ॥

கொல்லையானுள், தேசழிந்தாள், வல்லரக்கர் நகர்நடுவண்
தொல்லையேயுற்ற பெண்ணுமானு ளிலங்கைமா நகராண் [கோன்
நல்லயானு னென்றெலாம் நாதனும்பேசக் கேட்டதிருவும்
இல்லையெனக் கினிபிவ்வுடலமெனத் தீயிலிட்டாளத்தேசை.

எரியும் அனலொத்தாளையும் அரக்கர் மத்தியில் இன்னுள் உற்றனையே எனக் கூசாது உரைத்தனன். தான் அணை

யவோவென யோசித்தனன். யாவர்க்காய் இன்னுட்கள் பொன்னுடல்தரித்தனளோ அவர் ஏசி நிற்கவே இனியிருக்க லாகாதென பெருநெருப்பில் குதித்தனள், ஜனகன் வளர்த்த செல்வநங்கை. பூமாதும் திடுக்கிட்டாள்.

72

நாடி யெந்தனுள்ளங் கொள்ளைகொள்ளும் நாதனென்றும்
வேடி யெந்தன்மனங் கோயில்கொள்ளுந் தேவனென்றும்
தேடி யென்னைக்காணும் பாக்யம்யான் பெறுவனென்றும்
ஓடி யுழலும்நாதன் காணுமோர் புண்யளென்றும்
வாடி யிளைத்தமேனி நன்காதரித் தணையுமென்றும்
நாடி யென்னினியன் கார்மேனி காண்பேனென்றும்
வேடியே யிவ்வுடலம் நீடித்திருக்க நினையாப்பாவியாய்
கோடிய மனத்தளாய் யானுயிர் பேணியளேல்
கூடிய வினைதன்னேடு தீயேயெரித் திடுவாயென
வேடியே வீழ்ந்தனள் சோதியனல் நடுவண்.

நாடி யெந்தனுள்ளங் கொள்ளைகொண்ட நாதனென் றும், தேடியென்னை யணைந்தாதரிக்குமெனும் நன்மனங் கொண்டும். பாடிப் பரவசமாகியவன் நாமமே பிதற்றிய வனேயே நினைந்துருகி அவனுக்கா யிவ்வுடன் பேணியது சத்யமிலேயேல் பெருநெருப்பே நீயென உண்டிடுவா யென்ருள்.

73

83. ததோ அக்னிவசனுத் சிதாம்
ஞாத்வா விகத கல்மஷாம் ।
பபௌ ராம ஃ ஸம்ப்ரஹ்ருஷ்ட ஃ
பூஜித ஃ சர்வதைவதை ஃ ॥

இளைத்த வுடலமேனுங் கற்பெனுந் தேசு பெருக்கியவளை
களைந்த நல்ஞானத்த னுலகுக் கோருதாரணமாய்
விளைத்த தோரெழில் கண்டு விண்ட வன்னியும்
உளைந்த நெஞ்சத்தளை யேந்தி யளித் துவந்தனன்
முளைத்த வறப்பெருக்கைத் தீண்டவோ தீயுமெனவேடி
உளைந்த மனமுணர்ந் தேற்றன னிராமனுந்திருவினை.

தன்னையுங் கணிப்பாளாயினளிக் கற்பினியளென உணர்ந்தான் அக்னியும். அவள் நன் மனோபாவமதை நன் குணர்ந்தனன். உள்ளும் வெளியுமுடுருவி யுலர்த்துமவ னன்றோ அவனும். தானுமோர் பதுமமலராயினன். தாயினைத் தாங்கிக் குளிர்ந்தனன். எழிலார் திருமார்பினை யலங்கரிக்கும் தாயினைத்தான் வகிக்கும் ஏற்றமுற்றதே யெனப் பொங்கினன். திருவின் வடிவொக்கு முருவினைத் தானேந்தினன் நல்லன்பொடு. அழகிய பைம்பொன்னின் கோலந்தனை யெழிலோடேந்தினன். கழல்களவை பணிந் தனன். குழல்களவை யணைந்தனன். முன்னைவண்ணமே யிருக்க வுதவினன். வழுவிலா மாணிக்க மிவளென்றனன். அஞ்சனவண்ணா நினையெஞ்ஞான்றும் நினைத்துருகும் நெஞ்சினை நோக்கென்றனன். கண்டவர் கண்குளிருமிச் செல்வியை நோக்கியக்கால், நின்னியல் நெஞ்சமதைத் தீயவரக்கரென் செய்யவல்லார். நினக்கினிய நாகமதைக் கட்டியணைய வல்லரோ தீயோரேயாயிடினும். திருவினைப் பிரிந்த பேற்றால் நின் கருணையும் மறைந்ததே யந்தோ. பஞ்சியன்ன மெல்லடியை நெஞ்சாரப் பற்றும் பண்பு மறந் தனையோ. அஞ்சலென்றொருக்கால் உரைப்பாரை யேற்று தரிக்கும் நீயும் நெஞ்சார நினையே கோயில்கொள்வாளையும் இவ்வண்ணம் உறுத்துவதோ. நண்ணித் தொழுவார் தஞ்

சிந்தை பிரியாதாய் எண்ணியெண்ணி நின் தன்னையணைய
வேங்கியளுக்கும் இப்பரிசோதனையோ. ஒன்றே யுரைப்பன்
ஒருசொல்லே சொல்லுவனென்றதனென வாணையிடுவானை
யின்று நீ மறுப்பதேயோ. இன்பமதனை யுயர்த்துவா
யென்றேனுமென உயிர்பேணியளுக்குத் துன்பத் திரளளிப்
பதும் காருண்யச் செயலேயோ. கள்ளக் கபடொன்றில்
லாது நின் நாமம் துள்ளிச் சுவைத்தாளைத் தள்ளத் துணிவ
தேயோ. பேசிப் பேசி நின்னாமமுருப் பொலிந்த நாவி
னைக் கூசமின்றி யேசுவுமோ. அண்டத்தமரர் பெருமா
னலவோ நீ. நின் திருமார்பத் தெழில் மங்கையலவோ
இத்தேவி. கருவிருந்து மண்ணிழிந்தாய் மண்ணாள நீயும்.
மண்ணிருந்து மிதந்தெழுந்தாளிப் புனிதவதி நினையாள.
சித்திரக்கூடத்தே சிறு காக்கை முலைதீண்ட ஆத்திரங்
கொண்டெறிந்த வத்திரமும் ஒளித்ததேயோ. வித்தகா
இம்மாயப் பிணக்குதானேனோ. உள்ளுவாருள்ளமெலாம்
உள்ளிருந்துணரும் நாதா நீ கள்ளந்தான் கண்டனையோ
வியம்புதி. எவிற்றுச் செய்வாள் நினையிறைப்பொழுதும்
பிரிவாற்ற கிலாவருந்தேவிக் கிப்பரிசேயோ. உண்ணாதுறங்
காது நினை நண்ணா நாள் வேண்டுவதொன்றில்லையெனக்
கண்ணா கதறியளையேற்றெந்தன்னை யுயர்த்துவையோ.
எண்ணுவாரிடர்களைவ னலவோநீ உனக்குப் பணிசெய்
செய்திருக்குந் தவமுடையாளை யிவ்வண்ணமேசுதல் நின்
சாயை யழிவுகண்டாய். ஓதமா மணிவண்ணா! நீ சேது
பந்தஞ் செய்ததெல்லாம் நின்னினியளுக்காயலவோ. வில்
லாலிலங்கை யழித்ததெல்லாம் இந்நல்லாளுக்காயலவோ.
நின் பொன்னடி காண்பதோராசையினால் கண்ணிணை துஞ்
சாதயர்ந்தொழிந்தாள் நின்னினியை பதியாக நினைப்
பெற்று. கதியாக நினை நினைந்த ஓர் பெண்கொடியை வதை

செய்யத் துணிந்தாய்கொலோ. மாமாயா! வையத்தார் நினை மதிப்பதேயோ. இனி நீ யளிக்குந்திறன் படைப்பது எங்ஙனேயோ. நான்மறையினுட் பொருளை விரித்துரைக்க வந்த மெய்ப்பொருளே! அஞ்சலென்பாரை அஞ்சேலென் பாயே. உள்ளேயுருகி நைவாளுக்குக் கதியோ. கொண்டல் வண்ணா ஏற்றிடுவாய் நின்கனியை எனப் ப்ரார்த்தித்தான்!

74

84. கர்மணா தேந மஹதா
த்ரைலோக்யம் ஸ சராசரம் ।
ஸதேவ ரிஷிகணம் துஷ்டம்
ராகவஸ்ய மஹாத்மந: ॥

இலங்கு மணிமாட வயோத்திமா நன்னகர் ராணியாய்
முடியேற்றுயர் சிங்காசனத்துற் றுயர்போகம்பெற்ற
போழ்தும்
விலங்குமலி கடுங்கானில் முள்ளொதுக்கிக் கல்விடைகிடந்து
பலமூலமுணவாக்கொண்டு திரிதந்துழன்றபோழ்தும்
இலங்குமணிமாணிக்க வைடூர்யம் பலபதித்தவுயர்செல்வ
மெலாந்தன்னடிக்கீழ் கிடக்குமெழில் கண்டபோழ்து
மிலங்கெழில்நாத னொருவனின்றி மற்றொரும்வேண்டேனி
றையுமகலகில்லே னவனையெனு மணிக்குமிப் பரிசேயோ.

இவ்வண்ணந் தோத்தரித்து அக்னிகொடுத்த பெண் மணியை அங்கீகரித்தனன் அச்சுதனும். பிரமன் முதலா சகல தேவர்களும் அங்குற்று எம்பெருமான் அடிபணிந் தனர். உவகை பூத்தனர். உலகத்துற்ற சரம் அசரம் யாவும் மலர்க்கண் பெற்றன எம்பெருமானும் பிராட்டியும் நின்ற தூய சேர்த்தி கண்டுகளிப்ப. இந்திரனும் இமைய

வரும் முனிவரும் சதுர்முகனும் உயரரனும் கதிரவனும் சந்திரனும் அந்தரத்தமரர் குழாமும் வந்து கூடினர். அறிவ தறியானே அனைத்துலகுமுடையானை, தன்னடியார் மனத்துத்தேனூறி யமுதாகித் திகழ்வானை, தன்னாலே தன்னுருவம் விரிப்பானை, சரணவார்க் கெல்லாம் நல்லரணவானை, காகத்தைக் காத்தானை, சுக்ரீவ நண்பனை, வீடணற்கு நல்லானை, கல்லினைப் பெண்ணுக்கிய புனிதன் தன்னை, வேதமெலாந் தேடிக் காணலாகாப் பண்பினனை, தருமத்தின் தனியுருவாய் ராமனாய்த் தம்முன் தோன்றிய வள்ளலை யவன் திருவுடன் கண்டு தொழுத பாக்கியத்தாராயினர் யாவருமே. கண்ணாரக் கண்டுருகினர். கைகளாரத் தொழுதெழுந்தனர். வாயார வாழ்த்தினர். பாடியாடிப் பரவசராயினர்.

75

85. அபிஷிச்ய சலங்காயாம்
ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம் |
க்ருத க்ருத்யஸ் ததாராம:
விஜ்வர: ப்ரமு மோதஹ |

மலையிலங்கு வளநாட்டினிற் கோரதிபதியாய்
வீடணற்குப் பொன்முடி சூட்டிச்
சிலையிலங்கு திண்டோளன் தயரதர்தவக்குமரன்
செய்வன செய்திட்டோமெனக்
கலையிலங்கு மதிமுகத்தனாய்க் கவலையொன்று
மில்லாத் திண்சுடர்ச் சோதியுருவா
யலையிலங்கு கடல்சூழிலங்கை மாநகரத்தே
யோர்திலகமெனத் தோன்றினனன்று.

தன்னையேதான் வேண்டி மற்றுள்ளவாய பொன்னும் பொருளுந் துறந்த வீடணனுக்கு லங்காராஜ்யமாள முடி சூட்டினன் ராமனும். பிறகு பூபாரந் தீர்க்கவந்த சீராளன் செய்வன செய்தாய் விட்டதென்று உளம் பொங்கி மகிழ்ந்தான்.

76

86. தேவதாப் யோவரம்ப்ராப்ய
சமுத்தாப்ய சவாநரான் |
அயோத்யாம் ப்ரஸ்திதோ ராமஃ
புஷ்பகேண சுஹ்ருத்வ்ரதஃ ||

வானவர் தங்கருணையெனும் வரம்பெற்றிராமன்
வானரர் யாவரையு முயிர்ப்பித் திலங்கைவிடுத்து
வானிடத்தே செலவல்ல புஷ்பகவிமானமதிலேறி
வானரருமரக்கருஞ் சூழ வயோத்தியேகினர்.

வானவர் தம்மருளால் வானரர் யுத்தத்திலிறந்தவர் யாவரும் உயிர் பெற்று எழுந்தனர். சகல வானரர்களுடனும் விபீஷணர் சுக்ரீவர் ஆஞ்சநேயர் முதலானோருடன் புஷ்பகவிமானத்தில் சீராமன் அயோத்திக்குப் புறப்பட்டார்.

77

87. பரத்வாஜாஸ்ரமம் கத்வா
ராமஃ சத்ய பராக்ரமஃ |
பரதஸ்யாந்திகம் ராமஃ
ஹநூமந்தம் வ்யஸர் ஜயத் ||

பரத்வாஜ மா முனிவராஸ்ரமந்தனிலுற்றுப்
    பரத நம்பிக்குத் தாமுற்ற சேதிதனை மொழிவான்
பரபரப்புடனேகு மனுமனெனு மன்பனைப்
    பரிவுடனேகு மின்னென வாணையிட்டனன்.

நினையாத முடிசூடிய வானரர் கோனும் அரக்கர் கோனும் முடியீந்தான் மூடிசூடக் காணுவமெனுங் குதூஹலத்துடனேகினர். பரத்வாஜ மாமுனிவராஸ்ரமத்தில் சற்றே தங்கி அனுமனை முந்தனுப்பினர் பரதனுக்குச் செய்தி அறிவிக்க.

78

88. புநராக்யா யிகாம் ஜல்பன்
    சுக்ரீவ சஹிதஸ்ததா ।
    புஷ்பகம் தத்ச மாருஹய
    நந்திகராமம் யயௌததா ॥

ஏற்றான் மன்பரமு மென்னின்னுரை சிரங்கொண்டே
நோற்றான் பன்னாளா யெனைக்காண்பதோராசை தன்னால்
தோற்றேனவன் முன்னமன்பெனும் பிணக்கதனால்
ஏற்றான் காண்சடைமுடியென விழிந்தானவனிடமே.

திருவினை தரிசித்துயர்ந்தான் அஞ்சனை புத்ரன் முன்னம் தூதாய்ச் சென்று. இந்நாள் எம்பிரான் திருவுடலக் கூறாய் முளைத்த பரமபாகவத தரிசனங்காண்போமென த்வரித்தான் அனுமனுமே. நந்திக்ராமந் தாவியேகினன். சென்றதுமே கார்மேகவண்ணன் நம் முன்னிவனுற்றனனே நல்லினை யானெடென அதிசயித்தான். பிறகு நெருங்கவே அங்குற்ற இருவர்போல் இங்கிருவருற்றுரென உணர்ந்தான். இதுவும் பிரமன் படைப்பின் அதிசயமோ;

எம்பெருமான் மாயப் பிணக்கோ அறியோம். இங்குள்ள ஒருவன் எம்பிரானை யொப்பான். மற்றொருவன் அவன் பின்னவனை யொப்பான். நால்வரும் அறம் பொருள் இன்பம் வீடெனும் புருஷார்த்த ஸ்வரூபரோ. நால்வேதமே நான்குருவாய்ப் பிறந்தனவோ. நாடாளப் பிறந்தானுக்குஞ் சடைமுடி. நாடாளப்பெற்றானுக்குஞ் சடைமுடியேயோ. நால்வர்க்குந் துறவறமாம். இவனுக்கொரு நல்துணை நிலைமின்னுரு. அவனுக்கோரிணை சுடர்சோதியின்னுரு. இந்நால்வர் சேர்த்தி கண்டார் மற்றுங்காண்பரோ பிறப்பிறப்பெனு மிடரினையே. அஹோ என் பெற்றனம்; கண் பெற்றனம்; கண்பெற்றபயன் பெற்றனம்; கண்ணினுள் மணிபெற்றனம்; மணியினுள்ளொடுருவும் நான்குமணி பெற்றனம். உலகினுக்கோர் நல்லணி யிந்நால்வருமேயென விண்டக்கால் ரகுநந்தனனு முற்றனனங்கே விமானமதில்.

79

89. நந்திக்ராமே ஜடாம் ஹித்வா
ப்ராத்ருபி: ஸஹிதோ அநக: ।
ராம: சீதாமனுப் ராப்ய
ராஜ்யம் புனர வாப்தவான் ॥

எந்தையே என்று மெம்பிரானேயென்று மென்னையாள்வானேயென்றுந் துள்ளி யடிபணிந்த பரதநம்பியும் சிந்தையுள் ளெஞ்ஞான்றும் வைத்துத்தொழுஞ் சத்துருக்னனு மல்லும்பகலு மவனுக்கேயாயுழி தந்து தந்தைதந்தைதந்தையென்று சென்னியேற்றாதரிக்கு மிலக்குவனுஞ் சடைகளைந்தன ரிராமனொடுமாங்கே; நந்திக்கிராமம் விடுத்தயோத்தி நகரேகி சீதாராமனுயர் சிங்காசனமேற்றனன் சோதரரருகிருப்ப.

அஞ்சனவண்ணரிருவருங் கட்டியணைந்தனர். பொன்னிறத்தவரிருவரும் புல்கினர். சோதரரைப் பறிகொடுக்க மன்னரிருவரும் பார்த்திருந்தனர். சோதரர் நால்வரும் ஆநந்தக் கூத்தாடினர். நால்வரும் சடைமுடி களைந்தனர். மரவுரிவீசினர். பட்டாடை புனைந்தனர். நாறுசாந்தம் பூசினர். ஆபரணம் பல பூண்டனர். அயோத்திமாநகரேகினர். சீதையெனுந் தெய்வமோடேகினர். வீதியெலாம் ஊர்வலம் வந்தனர். நல்தாயர் மனம் பூரித்தனர். அரண்மனைக்கேகினர். அவைக்களமுற்றனர். அரியதோர் சிங்காசனத் தெம்பிரான் சீதையொடு வீற்றிருப்ப, சோதரர் குடை சாமரம் பரிமாற, சிறிய திருவடியுந் திருவடியருகிருப்ப, சீராமனுக்கு மணிமுடி சூட்டினர் வசிஷ்டரும்.

80

90. ப்ரஹ்ருஷ்டமு திதோ லோக :
துஷ்ட : புஷ்ட : சுதார்மிக : |
நிராமயோ ஹ்யரோ கஸ்ச
துர்பிக்ஷ பயவர்ஜித : ||

திண்மதியு மொண்பொருளுஞ் செல்வத்திரள் நலனும்
பல்வேறு போகமெலாம் படைத்துப்ரஜை துள்ளினர்;
மண்வளமுந் துளிநலமும் நதிப்பெருக்கு மூண்நிறைதது
லகூட்ட, செடியார்நோய்கள்கெடத், தீவினை தூரசாக,
மண்பொன் மாதெனும் போராசைபெயரக்,களவுசூதுபொய்
வஞ்சகமெனுந்தீதெலாந்தெறிப்ப, வளிக்கின்றான் கமலக்
கண்ணன். யாரற்குறைவுடையமென, வயோத்திமா
நகருளார்தாம் பொங்கிப்பூரித்தனரிராம ராஜ்யமதில்.

ராமராஜ்யமதில் ஜனங்களெல்லாம் மகாபரிசுத்தர். எல்லோரும் மஹா புண்ணியர். எல்லோரும் அதிக சந்தோஷமுற்ருர். எல்லோரும் வெகு குதூகலமுற்ருர். யாவரும் தர்மிஷ்டர். ஒருவருக்கும் வியாதியில்லை; துக்கமில்லை; மனக்கவலையில்லை; பசிப்பிணியில்லை; சோரபயம் இல்லை; துன்பம் ஒன்றுமில்லை. இன்பத்திற்கு அளவேயில்லை. பொருள் யதேஷ்டம். தனதான்யக் குறைவில்லை. போகம் மிக வதிகம். அசூயை பொருமை யறியார். தானதர்மக் குறைவில்லை. பொய்பேசார் சூதறியார்.

## 81

91. நபுத்ர மரணம் கிஞ்சித்
த்ரக்ஷ்யந்தி புருஷா:க் வசித் ।
நார்யஸ்சா அவிதவாநித்யம்
பவிஷ்யந்தி பதிவ்ரதா: ॥

இனியார் புகுவாரெழு நரகவாசலென்னக்
கனிவார் புருஷரெலாம்; புத்ரமரணங்காணுர்
நனிமிகுநாதனே தெய்வமென்பார் பெண்டிரும்
தனிநாயகனிலாப் பெண்மணியிலையா மாங்கே.

புருஷரும் ஸ்த்ரீயும் துள்ளியெழுவார். ஆள்கின்ருன் ஆழியான்யாரால் குறைவுடையோம் என்பார். துன்பந் துலைந்தது. இன்பந் தலைக்கேறியது. நரகம் உலர்ந்தது. நவநிதியும் நர்த்தனமாடியது. ஊரெல்லாம் பொன்மயம்; வெள்ளி மாளிகைகள். நவரத்தினம் பதித்த திண்ணைகள். தூண்கள் பவழத்தாலாயவை. புத்திரமரணமென்றுமறியார். விதவைகளாங்கில்லை. குறைவு என்னும் பேருமறியார்.

82

92. நசாக்னிஜம் பயம் கிஞ்சித்
நாப்ஸு மஜ்ஜந்தி ஜந்தவ: ।
ந வாதஜம்பயம் கிஞ்சித்
நாபி ஜ்வரக்ருதம் ததா ॥

வெஞ்சினங்கொள்ளான்வன்னியுமயோத்தி நகரதனில்
அஞ்சியே வீசுவன்காலுமெம்பிரான் நன்னகரதனுள்
எஞ்சியஜந்துவெதுவும் ஜலமதனுள் மூழ்காவாமாங்கு
பஞ்சேந்த்ரியம்புனையுடலமுங்கொதிப்புறுவெஞ்ஞான்றும்.

அக்னிபயம் கொஞ்சமும் இல்லை. ஜலத்தில் முழு காயாவும். காற்றின் உபத்திரம் இல்லை. ஜ்வரமென்பதே கேட்டறியார்.

83

93. நசாபி க்ஷுத்பயம் தத்ர
நதஸ்கரபயம் ததா ।
நகராணிச ராஷ்ட்ராணி
தனதான்ய யுதாநிச ॥

வள்ளலிராமபிரானுளுகைச்குள் பசிதாகங் காணாராம்
கொள்ளக்குறைவிலராய்வேண்டிற்றெல்லாந்தருவர்யாவருமே
எள்ளத்தனையுஞ் சோரபயமில்லை யெங்கெங்கு கண்டாலும்
உள்ளம் நிரம்பக்காணுவருண்ணுஞ்சோறும்பருகு நீரும்.

பசிப்பீடை யறியார். திருடர் பயமில்லை. நகரம் தேச மெல்லாம் சுபீக்ஷமாகும். பாற்கடலுள் படுத்தான் பரந் தாமன். இங்கு பாற்கடல் பெருகி வழிந்துப்ரவாஹமா யோடி எங்கும் அமிர்தமயமாயிருக்கும்.

84

94. நித்யம் ப்ரமுதிதா: சர்வே
யதாக்ருதயுகே ததா ।
அஸ்வமேதசதைரிஷ்ட்வா
ததா பஹுஸுவர்ணகை: ॥

உள்ளநோய்களெல்லாந்துறந்துய்ந்துபோந்திருப்பக்
கள்ளமெல்லாந்தவிர்ந் தெங்குமென்றுமின்பவெள்ளம்மேவி
உள்ளபொருளெலாமீந்தஸ்வமேதம் பலவியற்றிவானுளார்
மெள்ளவந்தீண்டிவியனுலகு மிவணிழிந்ததோவென்பராம்.

எங்கும் எப்பொழுதும் பேராநந்தம், வெகு குதூஹலம் உத்ஸவம் நித்யம். ஆநந்த உபசாரம். அத்புத ஆகாரம். சுக சயனம். க்ருதயுகம் போலுறும். நூற்றுக்கணக்கான அஸ்வமேதயாகங்கள் செய்வார். தனதானம் அளவில்லையாம்.

85

95. கவாம் கோட்யயுதம் தத்வா
ப்ரும்மலோகம் ப்ரயாஸ்யதி ।
அஸங்க்யேயம் தனம் தத்வா
ப்ராம்மணேப்யோ மஹாயசா: ॥

கற்பகத்தருவிழிந்தன்ன பசுபல்லாயிரங்கோடி
யற்புதமாயமைந்தவை யீந்தலகிலா தனக்குவியல்
வெற்பெனக்குவித்தீந்தில்லாதா ரொருவருமில்லாராய்
பற்பநாபனும் புவிசிறப்பி வானுலகம் செல்லுவனே.

கணக்கற்ற கோதானங் கொடுப்பார். போதும் போதும் என்கிறவரையில் யாவும் கிடைக்கும். வைகுண்டம் பூமியில் இறங்கி வாஸம் செய்கிறது என்பார். பிறகு ராமன் தம்மிடமேகுவர்.

86

96. ராஜவம்சான் சதகுணன்
ஸ்தாபயிஷ்யதி ராகவ: ।
சாதுர் வர்ண்யஞ்சலோகே ஸ்மின்
ஸ்வேஸ்வே தர்மே நியோக்ஷ்யதி ॥

நலமந்தமில்லதோர் நாடாமிவ் வயோத்தியெனவமைத்து
அலமந்த நரகவாயிலடைத்தவரவர் தமதம முறை
பலவந்தமேனும் வழுவா திருத்தி வர்ணமுறை பிறழாது
நிலமந்தமில் சிருடைத்தெனவோங்கச் செய்திடுவர்.

பல்கோடி ராஜவம்சங்களை ஸ்தாபிப்பார் அவரவர் வர்ணாஸ்ரம தர்மத்தில் நிலைநிற்கச் செய்வார். தருமநெறி தவராதிருப்பார் யாவரும்.

87

97. தஸவர்ஷ சஹஸ்ராணி
தஸவர்ஷ சதாநிச ।
ராமோ ராஜ்ய முபாஸித்வா
ப்ருும்மலோகம் ப்ரயாஸ்யதி ॥

ஈரைந்தாயிரமாண்டிவ் வண்ணமிப்பாரதனை
யீரைந்நூறாண்டுகளுமாண்ட பின்னரிராமனும்
ஈறிலின்ப வெள்ளத் தனிமுதலாய வானுலகை
ஏறியெழில்பதம் பொருந்தி யிருப்பர்காணென்பர்.

ஆயிரம் வருஷங்கள் இம்மாதிரி பூலோகத்தை வைகுண்டமாக்கி ஆண்டு காப்பார் ஸ்ரீராமன்.

88

98. இதம் பவித்ரம் பாபக்னம்
புண்யம் வேதைஸ்ச ஸம்மிதம் ।
ய: படேத் ராமசரிதம்
ஸர்வபாபை: ப்ரமுச்யதே ॥

முனிவர்யா ! இப்புண்யபுராண புனிதசரித்ரமதை, வேத வேதாந்த ஸாரதத்வரஹஸ்யார்த்த விவரணமதை, நனிமிகுத்துச் சுவைக்கச்சுவைக்கத் தெவிட்டாத தெள்ள கேட்கக்கேட்கக் கானம்ருதமான கீதமதை, [மிழ்தை, இனியிதற்கொன்று நிகராகாப் பவித்ரபரமாத்புதானுபவ ஸர்வபாபஸமூக நாசஞ்செயுமமுதமதை, [மதை தனித்துப் பேரின்பம் பயக்குமதை, வரம்பிலா மெய்ஞ் ஞானவிளக்கமதை, படித்துக்கேட்டோதுவார்க்கீடிலைகாண்.

இப்படி நாடெல்லாம் உய்யும்வண்ணம் நாடு புகுந்தான் நாராயணன். ராமனெனும் சிறிய மானிட உருவொடு உலகிலுள்ள துன்பமெல்லாந் துடைத்தனன். இன்பவகையெல்லாம் அமைத்தனன். காண்காண் என விரும்பும் திவ்ய உருக்கொண்டனன். வேண்டாதாரையும் வசப்படுத்தும் குணங்கொண்டனன். தரு'மத்தில் நிலை நின்றனன். நேசமில்லாதவருக்கும் முன் நின்று முறுவல்பிராணய் அவர் உள்ளங் குழையச் செய்தனன். காணலாகா ஆதியஞ்சோதியுருவினைக் காணுமோர் பாக்கிய மீந்தனன், ஒளித்திருந்து அளிப்பவன் உடனிருந்து காத்தனன். சொல்லினால் சொல்லமுடியா தத்துவத்தினை சொல்லினால் பிதற்ற வைத்தனன். வேதமுமுணர மாட்டாப்ரபாவத்தன் வேதமென்னவென்றறியாப் பாமரர் அறிந்துய்யப் பண்ணினன். ஸாதன மெதுவென்றுணராப் பண்பினரையணுகி

யடைக்கலங்கொண்டனன். அவரிவரென்னுது யாவர்க்குஞ் சுலபனுயினன். அதுவிதுவென்னுது யாவைக்கும் நலம் பெருக்கினன். இங்கங்கெனுது எங்குமிருப்பவர்க்கு யாவு மீந்தனன். அடைக்கலமெனும் பொருள் அறியாதார்க்கு அடைக்கலமாய் நின்றளித்தனன். காகமென விகழாது, அணிலெனவொதுங்காது, மர்க்கடமெனவுரையாது, அரக்கனெனும் பாராது யாவர்க்குமொருபடித்தாயபயமளித் தனன். காருண்யப்ரவாகம் படுகுழியில் வேகம்பாயு மெனக் காட்டி நின்றனன். இம்மையின்பமே யில்லாது மறுமைக்கு முதவி யாவரையு மழைத்தேகினன் தன்னி டமே இன்னும் உரைத்து முடியாது நினைத்தும் முடி யாது. அவன் வைபவமெலாம். இவை விவரித்துரைக் கும் காவ்யமிது. ராமன் நடத்திய விந்தைப் புணர்ப்பு மிது. புராதன நூலுமிது. பவித்திர சரிதையிது. இன்ப மளிக்கும் உபாயமிது. வேதவேதாந்த சாஸ்த்ரம் விரித் துரைக்கும் நன்னூலிது. சுவைக்கச் சுவைக்கத் தித்திக் கும் சுவையுமிது. தெவிட்டாத கனியுமிது. நமையறி யாது. அதிர்ஷ்டமெனும் நலம் பெருக்கும் ஜீவநதியிது. திவ்ய அமுதமிது. சுந்தரகானமிது. உங்கள் எச்சில் நாவி னைப் புனிதமாக்கும் அருளமுதமிது. தாபமெல்லாம் போக்கும் மதுரகீதமிது.

89

99. ஏததாக்யான மாயுஷ்யம்
படன் ராமாயணம் நர ஃ ।
சபுத்ர பௌத்ர ஃ ச கண ஃ
ப்ரேத்யஸ்வர்கேமஹீயதே ॥

சொல்லால்தொடுத்தவிக் காவ்யமதைச் சொல்லிக்களி
த்தாடிப்பாடியலமந்துதுள்ளுவோனும்,
பொல்லாவாக்கை வழியுழலாதுள்ள நாளெல்லாம்நன்னுளா
யுயர்பதம் பெறுவானணையுங்கோலித்தா
னெல்லாப்படியாலுமின்புற்றுப் பல்லாண்டுசுகமிருந்
திம்மையைஸ்வர்ய நிறைவுமுற்றுப்
பொல்லாங் கொன்றுமிலாவுடலம் பெற்றதைப்
பிரிந்தக்கால்வானுயர் பதமேறி மகிழ்வன்.

படிப்பவர்க்கின்பம், கேட்பவர்க்கின்பம், சொல்பவர்க்கின்பம், உணர்பவர்க்கின்பம், இம்மையிலின்பம்; மறுமையிலின்பம், செவிக்கின்பம்; நாவினுக்கின்பம்; ஊனுக்கின்பம்; உடலினுக்கின்பம்; இப்படி எல்லாப்படியாலு மின்பமுதவும் இக்கீதம்.

90

100. படன் த்விஜோ வாக்ருஷபத்வ மீயாத்
ஸ்யாத் க்ஷத்ரியோ பூமிபதித்வமீயாத் ।
வணிக்ஜநஃ பண்யபலத்வமீயாத்
ஜநஸ்ச சூத்ரோ அபிமஹத்வமீயாத் ॥

ஒழிவில் காலமெல்லாமிவ்வமுதினைச் சுவைப்பவர்தாம்
வழுவிலாவடிமை பெறவாக்கு வல்லமையுறுவரந்தணர்
எழில் கொள்ளரசரேல் புவியாளும்போகமும், வளங்கொள்
செழிப்புடை நலனொடு வலந்தானும் பெறுவர்மற்றுளாரும்.

அவரவர் தம்முடை வேண்டுகோள்யாவையும் பெற்று வாழ்வர். பணம் வேண்டுபவர் பணமும் பொருள்வேண்டியவர் பொருளும் போகம் வேண்டியவர் போகமும் சுகம் வேண்டியவர் சுகமும் புத்ரர் வேண்டியவர் புத்ரரும் பெறுவர் இக்காவிய பாராயணஞ் செய்பவர்.

91

மருந்தும்பொருளு மமுதமும் வாழ்வுந்தாழ்வும் போக்கும் ஞானமுந்
தேசுமெழிலுந்தொழிலும் பண்பும்மாண்பும் நலமும்,
விருந்தும் பேணுமூணும் பருகுநீருமதுவேயாயுருகு மன மொடென்புங்
கனியநாளும் நினைந்தன் பிழைத்தல்லும் பகலும்
பொருந்துமாசுவைத்து மெய்ஞானத்தால் வழிபட்டெந்நா
ளும்நின்றிருந்து திரிந்துண்டுறங்கும் போதுமவனை நினைந்
தருந்துமாவோலையிலிட்டுலகு முய்யுமென்றேனுமொன்றி
யக்காலெனக் குழைந்த நெஞ்சமுடையாரெவ் வண்ணத்தி ரோகாண்.

ராமனே பரந்தாமன்: ராமனே நந்தெய்வம்; உள்ளும் வெளியும் உலவுமவனே ராமன்; உலகெலாம் அளிப்பவனே ராமன்; ராமனே பிரவிப்பெருநோய்க்கு அருமருந்தாம். ராமனே வேதமெலாம் விரித்துரைக்கும் நல் பொருளாம்; ராமனே நம் வாழ்வினுக்கோர் துணையாம்; ராமனே நந்தீவினை விலக்க வோருபாயமாம்; ராமனே நமக்குகல் ஞான வுணர்ச்சியளிக்குங் குருவாம்; ராமனே உலகத் துறந்தேசினுக்கெலாம் மூலமாம்; உயர் பண்பினுக்கோ ருதாரணமாம்; பல சொல்லியென், அவரவர் ராமநாம ஜெபம் செய்து காணீர்.

92

இலக்கியங் காணேம் பொருள் நலமுங்காணேம்
இலக்கணமொன்றுமிலை யிச்சொற்றொடரில்
விலக்காமோவிவ்வுலகிற்கிது வென்னுதீர்
இலக்காகுமெம் பிரானுக்கிது பெருநலமாய்.

இவ்வாச்சரிய ரசமதை யாவருஞ் சுவைத்தானந்திப் பீராக.

# பிழைத் திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 11 | 3 | இனிய தேர்ர் | இனியதோர் |
| 11 | 11 | யடி | படி |
| 11 | 25 | வாக்யங்கனை | வாக்யங்களை |
| 12 | 19 | பார்பவனுக் | பார்ப்பவனுக் |
| 12 | 27 | காவ்யமமை . | காவ்யமதை. |
| 13 | 3 | வித்திணையே | வித்தினையே |
| 13 | 9 | பன்னிரூவர் | பன்னிருவர் |
| 13 | 27 | னென் றும், | ளென் றும், |
| 16 | 10 | வர்தார் | வந்தார் |
| 17 | 20 | அமுதஸ்பரூபனே | அமுதஸ்வரூபனே |
| 21 | 23 | சத்ருக்கனை | சத்ருக்களை |
| 29 | 14 | ஹருதயம் | ஹ்ருதயம் |
| 51 | 18 | ராஜா தசத: | 33. ராஜா தசத: |
| 53 | 2 | 34. ம்ருதே | ம்ருதே |
| 53 | 4 | நியுஜ்ய மானே | 34. நியுஜ்ய மானே |
| 59 | 9 | மேற்க விலை | மேற்க வில்லை |
| 59 | 10 | தன் மனோரதங் கிட்டவிலை | தன் மனோரதங் கிட்டவில்லை. |
| 61 | 22 | அம்பரூத்தூணி | அம்பரூத்துணி |
| 63 | 7 | அகம் விணடனர் | அகம் விண்டனர் |
| 63 | 12 | எம்பாகிய | எம்பாக்கிய |
| 65 | 2 | பார்ப்பனென்றன் | பார்ப்பேனென்றன் |
| 66 | 27 | ஒலித்தனள் | ஒலித்தனள் |
| 67 | 23 | காதூஷண | கரதூஷண |
| 70 | 16 | சுந்தராஙகி | சுந்தராங்கி |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 73 | 2 | க்ழுகரசை | கழுகரசை |
| 73 | 8 | விற்கொடு | விற்கொண்டு |
| 77 | 13 | ஒளித்திருந்த | ஒளிந்திருந்த |
| 79 | 2 | உள்ளவா | உள்ளவாறு |
| 80 | 15 | இந் சுந்திர | இச் சுந்திர |
| 84 | 16 | 54. | 55. |
| 89 | 14 | சில நாள்கள் | சில நாட்கள் |
| 91 | 4 | யுளமசிழ்ந்து | யுளமகிழ்ந்து |
| 91 | 7 | விளங்ருந் தேசினைக் | விளங்கூந் தேசினைக் |
| 92 | 8 | சண்ணினளாய்ப் பங்கயாக் | சண்ணினளாய்ப் பங்கயக் |
| 94 | 11 | நெஞ்சந்நேர்ய்ந்த | நெஞ்சந்தோய்ந்த |
| 100 | 15 | மவங்கி | மலங்கி |
| 116 | 6 | அணிலென்ன வொதுங்காது | அணிலென வொதுக்காது |

# SRIMAD
# VALMIKI RAMAYANAM

**BY THE SAME AUTHOR IN ENGLISH VERSE**

**NOW READY "The Story in Brief"**

# BALA KANDAM

(FIRST CHAPTER)

**Re. 1/- only** (POSTAGE EXTRA)

*Copies can be had from :*

**The Author, V. RANGACHARI**
*Retd. Deputy Collector*
TERIZHANDOOR P.O.
**(TANJORE DISTRICT)**

or :

**R. NARAYANAN,**
30, Damodhara Reddy Street,
Thyagarayanagar,
MADRAS 17